www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஆக.10–16,1997
11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 217




## அமெரிக்கா- பயிற்சியும் மிரட்டலும்

## சிறப்புப் படையணிகள் அதிரடிப் பயிற்சிகள்



## மட்டக்களப்பில் பலியான வனபிதா



## கமல் பாய்ச்சல்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## எஜமானர்கள் தேவையில்லை!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

'அழுதும் பிள்ளையை
அவள்தான் பெறவேண்டும்.'

இனப்பிரச்சனைக்கு
நீதியான தீர்வு காண்பதற்கு
போராட வேண்டியதும்
வாதாடவேண்டியதும்
தமிழ் பேசும் தரப்புத்தான்!
மூன்றாம் தரப்பு என்பது
மருத்துவச்சி மாதிரித்தான்!

வலி
புண்ணுக்குத்தானே தவிர,
மருந்துக்கல்ல!

தேவையான தீர்வென்ன
என்பதில்
தமிழ் பேசும் தரப்பு
ஊசலாடுமேயானால்
உலக அனுதாபம்
முயற்கொம்புதான்!

அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர்
விஜயம் செய்தபோது,
அவர் வெளியிட்ட கருத்துக்கள்
ஒரு தலைப்பட்சமாகவே
அமைந்திருந்தன.

"புலிகளைப் பலவீனப்படுத்துங்கள்!"
என்று புத்தி சொல்லியிருக்கிறார்.

புலிகளுக்கும்
தமிழ்க் கட்சிகளுக்கும் இடையே
முரண்பாடுகள் இருக்கலாம்.

ஆனால்-இன்றைய தருணத்தில்
புலிகளைப் பலவீனப்படுத்தல்
என்ற நிலைப்பாடு
எந்தக் கோணத்திலிருந்து
சொல்லப்படுகிறது என்பதை
புரிந்துகொண்டேயாக வேண்டும்!

அரசியல் தீர்வொன்றை
திட்டவட்டமாக முன்வைப்பதற்கு
புலிகளின் பலம்
எந்த வகையில் தடை
என்பதை அறிந்தாக வேண்டும்!

அரசியல் தீர்வு என்பது
புலிகளுக்கோ
தமிழ்க் கட்சிகளுக்கோ
வழங்கப்படவேண்டியதல்ல;
இனப்பிரச்சனைக்கே
தீர்வு தேவைப்படுகிறது!

புலிகளோ
ஏனைய தமிழ் இயக்கங்களோ
தோன்றியதால்
பிரச்சனை தோன்றவில்லை;
பிரச்சனை இருந்ததால்தான்
இயக்கங்கள் தோன்றின!

ஆட்டின் தலை
பானைக்குள் சிக்கிக் கொண்டால்
அதன் தலையைத் துண்டித்து
மீட்க நினைக்கலாமா?
பானையை உடைத்தால் போதுமே!

யுத்தம் தொடரக் காரணம்
இனப்பிரச்சனைக்குள்
நாடு சிக்கிக் கொண்டதுதான்!

பிரச்சனையை
திருப்திகரமாகத் தீர்த்துவிட்டால்
புலிகளும்
ஆயுதப் போரைக் கைவிட்டுவிடுவர்.
பிரச்சனை தீர்ந்தால்
போராட என்ன காரணமிருக்கிறது?

ஆனால் அரசோ
புலிகளைப் பலவீனப்படுத்திவிட்டு
அரசியல் தீர்வை
முன்வைக்க நினைக்கிறது!

முதலில் ஆட்டின்
தலையைத் துண்டித்துவிட்டு
பின்னர் பானையை
உடைத்து தலையை மீட்பதாய்
சொல்வது போன்றதே இது!

கடைசியில்
உயிரற்ற ஆடும்
உருத்தெரியாத பானையுமாய்
தமிழ் பேசும் தரப்பின் நிலை
ஆகாது என்பதற்கு
என்ன உத்தரவாதம்?

அவுஸ்திரேலிய அமைச்சருக்கு
நாம் பட்ட வலி தெரிய நியாயமில்லை.
தலையிடியும், காய்ச்சலும்
தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும்!

மாண்டதும், அழிந்ததும்
இங்குள்ளோர் பிள்ளைகளே!
மீண்டுமோர் தலைமுறையும்
இத் துயர் ஏற்பதோ?
வலி நமக்கே புரியும்!

எந்த வெளிநாட்டரசும்-
குறிப்பாக மேலை நாடுகள்-
ஆளும் தரப்புக்கள் சார்பாகவே
வாதிட முயல்வது வழக்கம்!

அவற்றை நம்பக்கம்
திருப்புமளவுக்கு
நமது நிலைப்பாடுகள்
அமையவேண்டுமே தவிர
அவர்கள் சொல்வதற்கெல்லாம்
ஆமாம் போட்டு
அகமகிழ்ந்து போகலாமா?

நமக்கு வெளியுலகில்
நண்பர்கள்தான் தேவை!
நல்ல எஜமானர்கள்
தேவை இல்லை!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## ஆன்மாவைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்!

இந்த மண்ணுலகில் பிறக்கும் ஒவ்வொரு மானுடனும் ஆன்மா, சரீரம் என்னும் இரண்டு உறுப்புகளைக் கொண்டவன். எனவே, இவ்வவனியில் வாழும் பொழுது சரீரத்துக்கு மட்டும் எல்லா பிரதானத்துவத்தைக் கொடுத்து விடாது; ஆன்மாவைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும், ஆன்மீகத்தைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனவேதான் கிறிஸ்து கூறுகிறார், "ஒருவன் இவ்வையகத்தையே தனதாக்கிக்கொண்டாலும், அவன் தன் ஆன்மாவை இழப்பானாகில் அவனுக்கு என்ன பிரயோசனம்?" உண்மைதான், ஒருவன் தன்னுடைய ஆன்மாவை இழந்த பின்னால், இந்த உலகத்திலுள்ள சம்பத்து எல்லாவற்றையும் தனதாக்கிக்கொண்டாலும் எந்த நன்மையையும் பெறப்போவதில்லை.

எனவே, இயேசுநாதர் என்ன விரும்புகிறார்? எதைத்தான் இழந்தாலும், நாம் நம் நல்லொழுக்கத்தை-வாழ்வாங்கு வாழும் முறைமையை-நம் ஆன்மீக மேன்மையை இழக்காதிருத்தல் வேண்டும். எனவேதான் புனித மத்தேயு கூறுகிறார்- "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்!" (மத்:5:8)

-ஏ.பி.வி.கோமஸ்-

## சொர்க்கத்தில் சேர்க்கும் கலிமா!

யாரேனும் ஓர் அடியான் 'லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர்ரசூலுல்லாஹ்' என்று உறுதியான உள்ளத்துடன் கூறியவனாக மரணமெய்தினால் அவர் சொர்க்கத்தில் நுழைந்திடுவார் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பு:- முஆத் (ரலி); நூல்:- அஹ்மத்

எவரேனும் ஒருவர் உண்மையான மனதுடன் லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைக் கூறினால் அவர் சொர்க்கம் சேர்ந்திடுவார் என்ற நற்செய்தியை நீங்களும் பெற்றுக் கொள்ளுங்கள்; மற்றவர்களுக்கும் அந்நற்செய்தியை அறிவித்துவிடுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளதாக மற்றொரு ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இறைவனிடத்தில் இக்லாஸ் எனும் மனத்தூய்மையுடன் செய்யப்படுகின்ற அமல்களுக்கே அபரிமிதமான நன்மைகள் இருக்கின்றன. இக்லாஸ் அல்லாத எந்தவொரு அமலுக்கும் எவ்வித நன்மையுமில்லை. எனவே இக்கலிமாவை இக்லாஸுடன் மொழிந்து, அதன்படி நடப்போம். இறைவன் மேலான சொர்க்கத்தைத் தந்திடுவான்.

செயிட் அஸ்லம் எஸ்.மௌலானா, சாய்ந்தமருது.

## கவிதைப் போட்டி இல. 214



### பரிசுக்குரிய கவிதை

### அம்மா, அம்மா!

உணவது கிடைத்த போதும்
உள்ளத்தில் மகிழ்வே இல்லை;
நினைவெல்லாம் "அம்மா அம்மா
நீ எங்கே?" என்றே மாயும்...!

தாரணி கோவிந்தசாமி- தேற்றாத்தீவு-2.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### இது போதுமோ?

யானைப் பசிக்கு
சோளப் பொரிபோல
கோரப் பசிக்கு
ஒருகவளச் சாதமோ?

ச.மகாலிங்கம்- வெலிமடை குருப், வெலிமடை.

### எப்போது நிம்மதி?

எப்போது கிடைக்கும் அடுத்த உணவென்று
ஏங்கி எதிர்பார்ப்பில் வாழும் காலமிதில்
இப்போது கிடைத்த சொற்ப உணவுதனை
இருந்து அமைதியாய் குழந்தை சுவைக்கிறதோ?
எப்போதும் தொடரும் கொடிய போர்தான்
ஏற்றி வைத்தது இப்படி ஒரு நிலையை...!

பசறையூர்-மல்லிகா பத்மநாதன்.

### விதி

ஆராரோ பாடத் தாயில்லை,
நீயாரோ? கேட்க வாயில்லை.
நானாரோ என்று தெரியவில்லை,
யாராரோ தந்து விட்டார் தீனிதனை.

தி.திவானி- 5,கண்டி வீதி, நுவரெலியா.

### போர் அத்தியாயம்

சுட்ட மரவள்ளிக் கிழங்கு,
தட்டுகிறதா மனச் சாட்சிகளை?-கொஞ்சம்
தொட்டுப்பாருங்களேன்-வாழ்வின்
போர்ப் பக்கங்களை!

எஸ்.சந்திரபோஜி-வத்தளை.

### யுத்தத்தின் கொடை

பட்டினி, தொற்றும்பிணி, வெட்டவெளி;
இவை மூன்றும் தான்
இப்போ எம் சொந்தங்கள்!!

திருமதி.க.கதிரவேலு- , பண்டாரிகுளம், வவுனியா.

போர் அரக்கன் தின்று
விட்ட மிச்சம் இது-எங்கள்
வேர் அறுக்கும்
இந்த யுத்தம்
என்று தான் தீருவது?

ப.தெய்வேந்திரன்- ,பெர்னாண்டோ மாவத்தை, கொழும்பு-15.

### வேளைக்கு உணவறியேன்!

சத்துணவா? என்ன அது...?
சற்றேனும் நானறியேன்.
வெடி, குண்டு, பம்பர், ஹெலி
வைக்கின்ற வேட்டறிவேன்!
விழுந்தடித்து ஓடி வெறுந்தரையில்
படுத்தறிவேன்!
கிடைக்கின்றபோது மட்டும்,
பசிக்காக கொறித்தறிவேன்.

நர்ஷிக்கா கனகசிங்கம்- மட்/கல்லடி வேலூர்.

### சோகம் ஒழிய வழியுண்டோ?

பெற்றோர் போனார் 'ஷெல்'லடியில்- இந்தப்
பிஞ்சு மட்டும் மிஞ்சியதாம்!
தொற்று நோயாய்த் தொடர்கின்ற-கொடும்
சோகம் ஒழிய வழியுண்டோ?

சி.சசிதரன்- களுவாஞ்சிக்குடி.

### விஷம்

விஷங் கலந்த சத்தங்கள்
செவிக் குணவான போது,
வாயில் உண்ணும் பண்டம்
விஷமற்று என்ன பயன்?

யோ.ஹம்சானந்தி-நெல்லியடி, கரவெட்டி.

### காலமிது!

ஊணினை ஊட்டவும்
உறவினைச் சொல்லவும்
உலகினில் யாருமில்லை!
உயிர்களை விழுங்கிடும் பூமியில்
விடிவுகள் இன்னும் மலரவில்லை!

தெ.லோஜனா-கொழும்பு-15.

## கவிதைப் போட்டி இல.217



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 16.08.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.217
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

முரசில் நல்ல பல அரிய விஷயங்களைத் தாங்கி வெளிவந்த 'கர்ப்பிணிகளே கோபப்படாதீர்கள்' கட்டுரை மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. முரசின் பின்புறம் முழுவதும் கிரிக்கெட் இரசிகர்களுக்கு நல்லவிருந்தாக அமைந்திருந்தது. கமல்ஹாசனின் 'ஒட்டுதல்' கதை அனைவரினதும் மனங்களை தட்டுதல் நிச்சயம். 'முத்தும் ஒளியும்', சத்தும் களியும் நிறைந்ததாக இருந்தது. சிந்தியாவுக்கு இன்னும் சற்று பக்கங்களை கூட்டினால் என்ன சுவாமி!

இந்திராணி பாலகிருஷ்ணன், அட்டன்.

■

இலங்கையில் ஆசியக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் அனைத்து கிரிக்கெட் இரசிகர்களையும் மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் பிரபல வீரர்களின் வண்ணப்படங்களுடன் அவர்கள் பற்றிய தகவல்களையும் தந்து அசத்திவிட்டீர்கள்... அதில் சமீட் அப்ரிடியின் வண்ணப்படத்தையும் சேர்த்துக்கொண்டு, கமல்ஹாசனின் 'ஒட்டுதல்' சிறுகதையையும் தந்த முரசுக்கு இனிய பாராட்டுக்களுடன் நன்றிகள்.

ஷிபானா சுபைர், கலஹா.

■

முரசு தரும் அனைத்து அம்சங்களும் சிறப்பானவை! ரசிகன் தரும் இலக்கிய நயம், பூலான் தேவி மிக ரசனைக்குரியவை! ராஜேஸ்குமார் தரும் 'உடைந்த இரவு' ஒவ்வொரு அத்தியாயமும் விறு விறுப்பாகச் செல்கிறது. மொத்தத்தில் நீ தரும் அனைத்து அம்சங்களும் பாராட்டுக்குரியவையே! சுவையான பல அம்சங்களை சுவைபட சுடச்சுட தரும் முரசுக்கென் வாழ்த்துக்கள்.

செல்வி எஸ்.கனகா, வியல விட்டிய, புளத்கொகுபிட்டிய.

■

முரசாரே,

கமல்ஹாசன் எழுதிய முதலாவது சிறுகதையை பிரசுரித்து அசத்திவிட்டீர்! 'மண்ணுக்காய் நீ மடிந்த சாவினை எண்ணி மகிழ்கிறேன், இருந்தும் அழுகின்றேன்' என்னும் காசி ஆனந்தனின் கவிதை வரிகள் எம்மை சிலிர்த்தெழவைக்கிறது. அது மாத்திரமா, டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக போட்டிகளுக்கு தலைமை தாங்கியோரின் பட்டியல் பயனுள்ளதாய் அமைந்தது. நின்பணி தொடரட்டும்

இரா.வினோத்குமார்,அட்டன்.

■

அன்பின் முரசே!

நீ தரும் பல்சுவைகளில் 'உடைந்த இரவு' போகப் போக திகில் கூடிச் செல்கிறது. கிரைம் சக்கரவர்த்தியின் தொடர்கள் எவையும் தரத்தில் குறைந்தவை அல்ல; பாராட்டுக்கள். மேலும் திரையுலக மறுபக்கம் மூலம் சில நடிக நடிகையரை இனங்காண முடியாமல் உள்ளது. அடுத்து வரும் முரசிலோ அல்லது அதே முரசிலோ விபரத்தைத் தந்தால் எமது ஊகிப்பையும் சரிபார்க்கலாம் தானே!

பிரியதர்சினி குமாரசிங்கம், இலுப்படிச்சேனை, செங்கலடி.

■

215வது முரசில் நம் நாட்டு கிரிக்கெட் அணித் தலைவர் அர்ச்சுன பற்றிய விபரங்கள் உவகை கொள்ள வைத்தன.

காப்டனுக்கு தேவையான அனைத்து அம்சங்களையும் அர்ச்சுனவில் காணலாம்.

கண் அருகே இருக்கும் இமை, கண்ணுக்குத் தெரிவதில்லைதான்!

எதுவாகினும், தகுதிகளையும், திறமைகளையும் துணிந்து பாராட்டும் முரசுக்கு நன்றிகளும், சபாஷ்களும்!

கனகசபை தேவகடாட்சம், மல்லிகைத் தீவு.

■

எப்போது வரும் உனது வரவு என்று ஏட்டிக்குப் போட்டியாய் காத்திருப்போம். அய்யாத்துரையாரின் இறுதி வரிகள் தரும் பாடல், கவிதை, பொன்மொழி யாவும் சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கின்றன.

இரத்தினம் சாந்தினி, திருக்கடலூர், திருக்கோணமலை.

■

என் இனிய முரசே!

நீ வாராவாரம் சுமந்து வரும் அனைத்து விடயங்களும் அருமையிலும் அருமை. அதிலும் ரசிகன் தரும் பூலான்தேவி, சிரிக்க சிந்திக்க வைக்கும் சிந்தியாவின் பதில் அனைத்தும் என்னை வியப்பில் ஆழ்த்துகின்றன. நீ வாரத்தில் இருதடவையேனும் வரமாட்டாயா? என ஏங்குகிறேன்!

செல்வி கவிதிலி கதிர்காமு, நீர்கொழும்பு.

■

என் இனிய முரசே! எப்படி நலமா? உன்னில் அடங்கியிருக்கும் அம்சங்களான ரசிகனின் இலக்கிய நயம், பூலானின் தொடர் நவீனம், சிறுகதைகள், சினிமா பகுதி என்பன என்னை கொள்ளை கொண்டன. என்றும் உன் பணி தொடர என் நல்வாழ்த்துக்கள்.

செல்வி எஸ்.கலா, குவைத்.

### இன்னுமா புரியவில்லை?



பேச்சுவார்த்தைகள் பற்றிய பேச்சுக்களின் பின்னணியை இன்னுமா எம்மவர் சிலர் அறிந்து கொள்ளவில்லை? அமைச்சர் பீரிஸ் அவர்கள் பேச்சுக்கள் தொடர்பாக கூறியதையிட்டு 'முரசு' தந்த விமர்சனம், அமைச்சரின் பி.பி.சி.பேட்டி மூலம் உறுதியானது.

பி.எம்.ஜெனி,பர், கொழும்பு-13.

### தீயசக்திகளா?

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் பாராளுமன்ற விளையாட்டுக்கள் எமக்கெல்லாம் புளித்துப்போனவைதான். சட்டத்தை நிறைவேற்றவே அதிகாரமற்ற பாராளுமன்றத்தில் இவர்கள் நாடகமாடுகிறார்கள். வெளிநடப்பால் ஏற்பட்ட பயன் என்னவென்று சொல்லுவார்களா? பயன் இல்லையென கண்ட பின்னர் என்ன செய்வர்? அரசுக்கு கொடுக்கும் ஆதரவை விலக்கிக் கொள்வரா? உள்ளிருந்து கூட்டாக ஆடும் நாடகத்தை மூடிமறைக்கத்தானே இந்த வெளிநடப்புக்கள் என்பதை மக்கள் அறிவர். இதனைக் கூறினால், தீயசக்திகள் என்றால், மக்கள் யாவரும் கூட்டணியினருக்கு தீய சக்திகள்தான்!

சி.விவேகானந்தன், கொழும்பு-07.

### விதியே, விதியே!

அன்பு முரசே!

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கோரும் தமிழ்க் கட்சிகள் அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் முன்பாக அக் கோரிக்கையை ஏன் ஆணித்தரமாக எழுப்பவில்லை? ஒத்து ஊதிவிட்டு வந்துவிட்டனரே! அரசியல் தளத்தில் தமிழ் தரப்பு எத்தனை பலவீனமாகிவிட்டது பார்த்தீர்களா? விதியே விதியே! என்ன செய்ய நினைத்தாய் இந்த தமிழ்ச் சாதியை? என்று புலம்பத்தான் முடிகிறது.

க.மனோகரன், திருக்கோணமலை.

காதிலை பூ கந்தசாமியார் சொன்ன 'கின்னஸ் சாதனை' கற்பனை அபாரம். அறிக்கைகளும், மகஜர்களும் காகித மாளிகைகளை கட்டினாலும் சிறு காற்றடித்தால் பறந்துபோகும். எம் அரசியல்வாதிகள் காகித மாளிகைகளுக்குள் தூங்குகிறார்களா? தூங்குவதுபோல நடிக்கிறார்களா? அட்டைக் கத்திகள் பரிசளிக்கப்படுவது நல்ல பொருத்தமே.

வி.மகேந்திரராஜா, கனடா.



படிப்பகம்

www.padippakam.com

# பின்னடைவல்ல என்று புலிகள் தெரிவிப்பு

## விமான எதிர்ப்பு துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டதாம்

### புலிகள் வெளியிட்டுள்ள ஆயுதப் பட்டியல்

ஓமந்தை இறம்பைக் குளத்தில் தாம் நடத்திய ஊடறுப்புத் தாக்குதல் தொடர்பாக தவறான செய்திகளை படைத்தரப்பினர் வெளியிட்டுவருவதாகவும், தாக்கியழிப்பு நடவடிக்கையின் பரிமாணத்தை மறைத்து செய்திகள் கூறப்படுவதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஓமந்தை-இறம்பைக்குளத் தாக்குதலில் தமது தரப்பில் 67 பேர் பலியானதாகவும், புலிகள் தரப்பில் 200க்கு மேற்பட்டோர் பலியானதாகவும் படைத்தரப்பு தெரிவித்திருந்தது.பெருந்தொகையான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக படையினர் கூறியிருந்தனர்.

**புலிகள் அறிக்கை**

புலிகள் இயக்கத்தினர் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஜயசிக்குறுய்' படையினர்மீது மூன்றாவது பாரிய தாக்கியழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் 126பேர் பலியாகியுள்ளனர். படையினர் தரப்பில் 150 பேர்வரை பலியாகியுள்ளனர்.

பெருந்தொகையான நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களாவன: ரி.ஐ.எஸ். 40.எம்.எம் ஓட்டோமற்றிக் கிரனேட் லோஞ்சர்-02, ஓட்டோமற்றிக் கிரனேட்(மேற்குறிப்பிட்ட லோஞ்சருக்கானவை)-02, 40.எம்.எம்.கிரனேட் லோஞ்சர்-4, 40.எம்.எம் கிரனேட்டுக்கள்-73, எச்.எம்.40.எம்.எம் ரக கிரனேட் லோஞ்சர்-06, விமான எதிர்ப்புத் துப்பாக்கி-01, டாங்கி எதிர்ப்பு கிரனேட் லோஞ்சர்-05, கனரக தானியங்கித் துப்பாக்கி (ஹெவிமெசின்கண்)-01, லிங்குடன் ரவைகள்-160, டாங்கி எதிர்ப்பு லோஞ்சருக்கான எறிகணைகள்-75, 60 எம்.எம். மோட்டார்-02, அதற்கான எறிகணைகள்-465, 50 எம்.எம். மோட்டார்-03, 7.62 எம்.எம். மென்ரக இயந்திரத் துப்பாக்கி-02, அசோல்ற் றைஃபிள்-01, ரவைகள்-27, 46 ஆயிரம் சாதாரண ரவைகள். ஆகியன கைப்பற்றப்பட்டன என்று புலிகள் பட்டியல் வெளியிட்டுள்ளனர்.

**அதி நவீன ஆயுதங்கள்**

புலிகள் கைப்பற்றியுள்ளதாக கூறியுள்ள ஆயுதங்கள் நவீனமானவையாகும். டாங்கிகளை எட்டத்தில் நின்றே தாக்கக்கூடிய ஆயுதங்கள் புலிகளிடம் சென்றுள்ளமை படையினருக்கு பாதகமான விடயமாகும்.

ஓமந்தை-இறம்பைக் குளம் தாக்குதல் ஆரம்பமான பின்னர் வவுனியாவில் இருந்து படையினர் ஷெல் தாக்குதலை தொடங்கினார்கள். வெள்ளி இரவு 10.30 முதல் மறுநாள் காலை 5 மணிவரை கிட்டத்தட்ட ஆயிரத்தி ஐநூறு ஷெல்கள் ஏவப்பட்டதாக கணிப்பிட முடிகிறது. வெள்ளி இரவு முழுவதும் வவுனியா நகர மக்கள் தூக்கமின்றி இருந்தனர்.

அதிகாலை ஐந்து மணியளவில் சண்டைகள் ஓய்ந்தன. அதன்பின்னர் சண்டை நடந்த இடத்தில் இருந்து பலியான மற்றும் காயமடைந்த படையினரை கொண்வரும் பணிகள் சனி மாலை ஆறு மணிவரை தொடர்ந்தன.

ஆம்புலன்ஸ் வண்டிகள், படையினரின் வாகனங்கள் என்பவை போதாமையால், தனியார் வாகனங்களும் உதவிக்காகப் பெறப்பட்டன. படுகாயமடைந்தோர் ஹெலிக்கொப்டர்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.

எனவே காயமடைந்தோர் எண்ணிக்கை பல நூற்றுக்கணக்காக இருக்கலாம் என்றும், படுகாயம் அடைந்தோர் தொகை மட்டும் 120 பேர் வரை இருக்கும் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

போதிய வசதிகள் இருந்தும் அதிகாலையில் இருந்து மாலை ஆறு மணிவரை பலியான உடல்களையும், காயப்பட்டோரையும் படையினர் மீட்க வேண்டியிருந்தது. படையினருக்குள்ள வசதிகள் இல்லாத போதும் புலிகள் தமது பலியான உறுப்பினர்களின் 85 உடல்களை கொண்டு சென்றுள்ளமை ஆச்சரியமளிக்கிறது என்று இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

**ஷெல் தாக்குதல்**

2.08.97 அன்றும் ஓமந்தை இறம்பைக் குளம் நோக்கி தம்மால் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

விசேஷ பயிற்சி பெற்ற புலிகளின் சிறப்புப் படையணிகளே தாக்குதலில் ஈடுபட்டன. செய் அல்லது செத்துமடி கட்டம் இரண்டின் பின்னர் மேலும் விரிவாக்கப்பட்ட சிறப்பு படையணிகளின் உறுப்பினர்களே முக்கிய பங்கு வகித்தனர் என்று கூறப்படுகிறது.

வவுனியாவில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களால் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு பலத்த இழப்பு ஏற்பட்டமையால், வவுனியா படை நிலைகள்மீது புலிகள் ஆட்டிலெறித் தாக்குதல் நடத்தக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

புலிகளின் ஆட்டிலெறிகளில் ஒன்று வவுனியா படை நிலைகளை தாக்கும் சுடு தூரத்தில் முன்னர் நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் அதனை பாதுகாப்பு காரணங்களாக புலிகள் இடம் மாற்றியதால்தான் வவுனியா நிலைகள்மீது உடனடி பதில் தாக்குதல் நடத்த முடியவில்லை என்று தெரிகிறது. மீண்டும் ஆட்டிலெறி நகர்த்தப்பட்டு தாக்குதல் நடத்தப்படக்கூடும் என்று கருதப்படுகிறது.

## பாலியல் வல்லுறவும் – உதவியும்

கடந்த ஜூலை மாதம் 12ம் திகதி வல்லை சோதனை முகாமில் தொண்டர் ஆசிரியை ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார். இச் செய்தி முரசில் வெளியாகி இருந்தது.

இது தொடர்பாக படையினரால் யாழில் விடுக்கப்பட்ட அறிக்கையில், குறிப்பிட்ட பெண் பாலியல் உறவுக்கு உள்ளானது உண்மைதான், ஆனால் பலவந்தப்படுத்தி உறவு கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அப் பெண்மணியின் உடலில் எதிர்த்துப் போராடிய தற்கான காயங்கள் காணப்படவில்லை, என்று விளக்கும் சொல்லப்பட்டது. இந்த அறிக்கை மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

அதன்பின்னர் 1.08.97 அன்று யாழ் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு ஒன்று நடத்தப்பட்டது. பாலியல் வல்லுறவுக்கு காரணமான சிப்பாய்கள் இருவரை பாதிக்கப்பட்ட பெண் அடையாளம் காட்டியிருக்கிறார். பி.ரத்னநாயக்க, பி.வீ.சமன் குமார ஆகிய சிப்பாய்களே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் அராலியல் சிப்பாய் ஒருவரால் பாலியல் வல்லுறவுக் குள்ளான மாணவிக்கு ஒரு இலட்சம் ரூபா பணம் படையினரால் வழங்கப்பட்டுள்ளது. அப் பணம் அவர் பெயரில் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

## தொலைபேசிகள் செயலிழப்பு

திருக்கோணமலையில் திடீரென்று 587 தொலைபேசிகள் செயல் இழந்தன. குறிப்பிட்ட பாவனையாளர்கள் கட்டணம் செலுத்த தவறியதே காரணமாம்.

தொலைத் தொடர்பு நிறுவனம் நடத்தும் சில பாவனையாளர்கள் 7 இலட்சம் முதல் 8 இலட்சம்வரை பாக்கி செலுத்த வேண்டியிருந்தது என்ற தகவலும் வெளியாகி இருக்கிறது.

தொலைபேசிகள் செயலிழக்கச் செய்யப்பட்டதையடுத்து கட்டணம் செலுத்த நீண்ட கியூவரிசையில் பாவனையாளர்கள் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

## தொடரும் கப்பல் மர்மம்!

### இலங்கையில் ஸிம்பாப்வே அதிகாரிகள்!

32,400, 81 mm ரகக் குண்டுகளுடன் புறப்பட்ட கப்பல் மர்மம் மேலும் ஆழமாகியிருக்கிறது. கடந்த புதன்கிழமை இங்குவந்த ஸிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சின் கைத்தொழிற்சாலை அதிகாரிகள் நடத்தும் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து இதில் புலிகளின் தலையீடு இருக்கலாம் என்று கருதக் கூடியதாக இருக்கிறது. இவ்வாறு கொழும்பு ஆங்கில வார ஏடான 'சண்டே டைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது. மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாதுகாப்பு அமைச்சின் தலைமையகத்தில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் ஸிம்பாப்வே அதிகாரிகள், சிறிலங்கா அரசின் கட்டளைக்கேற்ப மே 21ம் திகதி சரக்குகளை ஒரு இஸ்ரேலிய நிறுவனம் ஏற்பாடு செய்த கப்பலில் ஏற்றிவிட்டதாக தெரிவித்தனர். ஸிம்பாப்வே எல்லை வரை தரைமார்க்கமாகக் கொண்டு வரப்பட்டு மொஸாம்பிக்கிலுள்ள பெய்ரா துறைமுகத்தில் கப்பலில் ஏற்றப்பட்டன.

மே 24ல் தென் ஆபிரிக்காவிலுள்ள கால்வில் குடாவுக்கு கப்பல் சென்றது. நம்பியாவிலுள்ள வின்ட்ஹொக் எனுமிடத்துக்கான சாக்குகள் இங்கு இறக்கப்பட்டுள்ளன. இதனை இஸ்ரேல் கம்பனி பொறுப்பேற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து கொழும்பு செல்வதற்காக கப்பல் ஜூலை 26ல் டீ.மடகஸ்கர் போய்ச் சேர்ந்தது.

ஸிம்பாப்வே அதிகாரிகளின் கூற்றுப் படி, சரக்குகள் ஏற்றப்பட்ட கப்பலின் பெயர் 'விம்மாகஸ் விக்டோரியா' என்று கூறப்பட்டமையினால் மேலும் குழப்பம் அதிகரித்துள்ளது.

'இஸ்ரேல் நிறுவனம்' என்ற பொய்ப் பெயரில் எல்.ரி.ரி.ஈ. சரக்குகளைக் கப்பலில் ஏற்றியுள்ளதா என்பதை சர்வதேசப் பொலிசார் (இண்டர்போல்) விசாரிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஸிம்பாப்வே அதிகாரிகள்- இதில் புலிகளின் தலையீடு இருக்க வாய்ப்பில்லை என்கிறார்கள். ஆயுதக் கொள்வனவு பேரத்தில் போட்டியிட்ட வேறு ஒரு நிறுவனம்தான் இந்த மர்மத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

ஆனால் சிறிலங்கா அதிகாரிகளுக்கு ஆயுத விநியோகத்தரான ஸிம்பாப்வே பாதுகாப்பு அதிகாரிகள்மீதும் சந்தேகம் திரும்பியிருக்கிறது. இண்டர்போலின் முடிவு கிடைக்கும்வரை ஸிம்பாப்வே அதிகாரிகள் இங்கு தங்கியிருப்பார்கள் என்று தெரிகிறது. இவ்வாறு அத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக மீனவர் விவகாரம் –கருணாநிதியின் நிலைப்பாடு!

"தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களுக்கும் நமக்கும் தொடர்பில்லை' என்று இலங்கை அரசு இந்தியாவிடம் உத்தியோகபூர்வமாக தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக தமிழக முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளதாவது:

"இந்திய மீனவர்கள் இலங்கைப் படையினரால் கொல்லப்படும் பிரச்சனையில் இலங்கை அரசு சார்பாக ஒரு கருத்துக் கூறப்படுகிறது. நாம் ஒரு கருத்தைக் கூறுகிறோம்.

இந்த இரண்டு கருத்திலும் எது உண்மை யென்பதை விசாரித்து கண்டறியும் ஏற்பாடுகளை இந்திய அரசு செய்யவேண்டும். இந்திய அரசு இவ்விடயத்தில் மக்களுக்கு உண்மையைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது. இதனை நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். இப்போதும் அதனையே வலியுறுத்துகிறேன்!" இவ்வாறு தமிழக முதல்வர் தெரிவித்திருக்கிறார். சென்னையில் 31.07.97 அன்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கருணாநிதி அதனைத் தெரிவித்துள்ளார்.

## மரண தண்டனை

படையினருக்குத் தகவல் கொடுப்போர் மற்றும் படையினருக்கு நெருக்கமானோர் என்று கருதப்படுவோர் புலிகளால் எச்சரிக்கப்பட்டு வருகின்றனர்.

தாம் சந்தேகிக்கும் ஆட்களிடம் படையினருடன் எவ்வித உறவும் வைத்திருக்க வேண்டாம் என்று புலிகள் முதலில் எச்சரிக்கை விடுக்கின்றனர். அந்த எச்சரிக்கையையும் மீறி தொடர்பு வைத்திருப்போர் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

கடந்த 31.07.97 அன்று யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைச் சேர்ந்த சிவசம்பு பிரபாகரன் (வயது18) என்பவர் புலிகள் இயக்கத்தினரால் மரண தண்டனைக்கு உள்ளானார். படையினருடன் அவர் தொடர்பு வைத்திருந்ததாகவும், பலமுறை எச்சரிக்கைவிடுத்தும் மீறி நடந்தார் என்றும் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் பெயரில் கொள்ளை!

கல்முனைப் பிராந்தியத்தில் தம்மை புலிகள் இயக்கத்தினர் என்று கூறிக்கொண்டு கொள்ளை நடவடிக்கைகளில் ஒரு கும்பல் ஈடுபட்டு வருவதாகத் தெரிகிறது.

நற்பிட்டிமுனையில் ஒரு வங்கி ஊழியரின் வீட்டிலும், கல்முனை மூன்றாம் குறிச்சியில் திருமண வீடொன்றிலும் இக் கும்பல் தமது கைவரிசையைக் காட்டியிருக்கிறது. நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

காரைதீவு 8ம் வட்டாரத்தில் நள்ளிரவு நேரத்தில் வீடொன்றுக்குள் புகுந்த ஐந்து பேரடங்கிய கோஷ்டி ஒன்று இளம் பெண் ஒருவரை விசாரணைக்காக என்று அழைத்துச் சென்றதாம். பின்னர் அப் பெண் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டார். இச் சம்பவங்கள் மக்களிடம் பீதியை ஏற்படுத்தியுள்ளன.

## கொழும்பு–யாழ் போக்குவரத்து! புதிதாக இரு விமானங்கள்

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் பொதுமக்கள் பயணம் செய்வதற்கான உரிமைகளைப் பெற்றிருக்கும் தனியார் விமான நிறுவனமான 'லயன் எயார்' மேலும் இரு 'ஏஎன் 24' ரக விமானங்களைப் பெற்றிருக்கிறது. ஏற்கனவே இந்நிறுவனம் பயன்படுத்தி வந்த விமானங்கள் கஸக்ஸ்தான் கம்பெனியிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

இலங்கை விமானப் படைக்காக- துருப்புக்களை பலாலிக்கும் கொழும்புக்குமிடையில் ஏற்றி-இறக்கி வந்த பணியினை கடந்த மே மாதம் முதல் கஸக்ஸ்தான் நிறுவனம் நிறுத்திக் கொண்டது. இப்பணியில் ஈடுபட்டு வந்த அந்நாட்டு விமான ஓட்டிகளையும் திருப்பி அழைத்துக் கொண்டது.

துருப்புக்களையும் போர்த் தளபாடங்களையும், படையினருக்கு வேண்டிய பொருட்களையும் வடக்கே கொண்டு செல்ல-100 இருக்கைகளைக் கொண்ட வை-8 மற்றும் மூன்று ஏ என் 32 ரக விமானங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில், இரத்மலானையிலுள்ள விமானத்தளத்தை ஒட்டி நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைக்க முக்கிய பிரமுகர் ஒருவர் கடந்த வாரம் வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவர் விமானப்படை நடவடிக்கைகளையும் பார்வையிடப் போவதாகவும் இருந்தது. இந்த நெருக்கடியான காலகட்டத்தில் விமானத்தளத்தில் ஓடிக்கொண்டிருந்த வாகனம் ஒன்று அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஒரு விமானத்தின் வால் பகுதியில் முட்டிச் சேதப்படுத்திவிட்டது. பிரமுகர் அங்கு வருவதற்கு மூன்று நாட்கள் தான் இருந்தமையினால், அதிகாரிகள் செய்வதறியாக தடுமாறினர்.

பாதிப்புக்குள்ளான விமானத்தில் நவீன ரக கருவிகள் பல பொருத்தப்பட்டிருந்தனவாம். எப்படியோ இரவு பகலாக பிரயத்தனப்பட்டு விமானத்தின் சேதம் வெளியில் தெரிந்து விடாமல் பல சோடனைகள் துரிதகதியில் நடத்தேறியதாம்.

## மூலஸ்தானத்துக்குள் பூசகர் பலி!

மட்டக்களப்பு-ஆரையம்பதியில் ஆலய பூசகரான பூ.பாஸ்கரன் (35) என்பவர் கடந்த ஆகஸ்ட் 03ஆம் திகதி இரவு புலிகள் இயக்கத்தினரால் பேச்சியம்மன் ஆலயத்திற்குள் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுடப்படும் பொழுது சுமார் 200-250 பேர் வரையான பக்தர்கள் ஆலயத்தில் குழுமியிருந்தார்கள். சுட வந்த புலி இயக்க உறுப்பினர் ஆலயத்தில் இருந்தவர்களை ஓடிவிடுமாறு கூறினாராம். இதை எப்படியோ அவதானித்த மேற்படி பூசகர் கோயிலின் மூலஸ்தானத்திற்குள் ஓடிச் சென்று பதுங்கிக் கொள்ள, அவர் பின்னாலேயே துரத்திச் சென்ற புலி இயக்க உறுப்பினர், கோயில் மூலஸ்தானக் கதவை உள்ளால் தாழ்ப்பாள் போட்டு விட்டு சுட்டுத் தீர்த்தாராம்.

குறித்த பூசகர் முன்னர் ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கத்தில் இருந்தவர் என்றும், கொழும்பில் தலைமறைவாகி சில காலம் அங்கிருந்தார் என்றும் கூறுப்படுகிறது. சென்ற ஆண்டு நடைபெற்ற கோயில் உற்சவத்தின் போதும் புலிகள் இயக்கத்தினர் இவரைத் தீர்த்துக் கட்ட முயற்சி செய்த போது, இதே விதமாக இவர் கோயில் மூலஸ்தானத்திற்குள் சென்று பதுங்கிக் கொண்டார் என்றும் கூறப்படு கிறது. இச் சம்பவத்தைத் தொடர்ந்து கோயில் உற்சவம் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே இம்முறை இடம்பெற்ற மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய உற்சவத்தின் போதும் புலிகள் இயக்கத்தினர் கிறனேட் வீசியதில் ஒரு பொலிஸ்காரர் பலியானார். ஒரு உப பொலிஸ் பரிசோதகர் உட்பட ஆறு பொலிசாரும் ஒரு இராணுவ வீரரும் மூன்று பொதுமக்களும் காயமடைந்தனர். இச்சம்பவம் 02.08.97 அன்று இரவு நடந்தது.

மட்டக்களப்பு பொதுச் சந்தைக்கு அருகிலுள்ள துவிச்சக்கர வண்டிகள் நிறுத்துமிடத்தில் அநாதரவாகக் கிடந்த சைக்கிளொன்றில் குண்டு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு அது செயலிழக்கச் செய்யப்பட்டது. இச்சம்பவம் ஆகஸ்ட் 05ம் திகதி காலை எட்டு மணிக்கு இடம்பெற்றது.

## சுவரொட்டிக்குத் தடை

கறுப்பு ஜூலை நினைவாக யாழ் குடாநாட்டில் ஈ.பி.டி.பியினர் சுவரொட்டிகள் ஒட்டுவதற்கு தடைவிதிக்கப்பட்டது.

சுவரொட்டியில் காணப்பட்ட வாசகங்கள் தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்த படையினர், அவற்றை ஒட்டவேண்டாம் என்று தடுத்து விட்டனராம்.

வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வை வலியுறுத்தியும், சிறையில் பலியான போராளிகளை நினைவூட்டியும் எழுதப்பட்ட வாசகங்களே ஆட்சேபனைக்கு உள்ளாகினவாம்.

இதே வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதிகளில் தம்மால் ஒட்டப்பட்டுள்ளன என்று கூறியும், யாழ்ப்பாணத்துக்கு அது பொருந்தாது என்று தெரிவிக்கப்பட்டதாம்.

## வினாப்பத்திரத்தில் "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!"

மட்டக்களப்பு-வாழைச்சேனை கோறளைப்பற்று வடக்கு-மேற்கு ஆகிய பிரதேசப் பாடசாலைகளிலுள்ள ஆண்டு இரண்டு பயிலும் மாணவர்களுக்கென அப் பிரதேச பரீட்சைச் சபையினால் தயாரிக்கப்பட்ட தமிழ் வினாப்பத்திரத்தில் புலிகள் இயக்கத்தினரது தாரக மந்திரம் எழுதப்பட்டிருந்தது.

இது பற்றித் தெரியவருவதாவது: வினாப்பத்திரத்தில், படம் பார்த்து எழுத்துக்களை ஒழுங்கு படுத்துங்கள் என்ற வினாத் தொடர் இருந்தது. அதில், திறந்த நிலையிலுள்ள புத்தகமொன்று வரையப்பட்டிருந்தது. புத்தகந்தான் இதுவெனச் சிறார்கள் அடையாளம் காண்பதற்காக அதன் திறந்த ஒரு பக்கத்தில் "தமிழா நீ பேசுவது தமிழா" என்றும் மறுபக்கத்தில் "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம். போர் இன்னும் ஓயவில்லை" என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ரோனியோக் கருவி மூலம் அச்சுப்பதிப்புச் செய்யப்பட்ட இவ்வினாப் பத்திரத்தில் மேற்படி வாசகங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது தொடர்பாக பரீட்சை நடந்து கொண்டிருந்த வேளையில் கல்விக்காரியாலய அதிகாரிகளுக்குத் தெரிய வந்ததும் மாணவர்களிடம் விநியோகிக்கப்பட்ட தமிழ் மொழி வினாப் பத்திரம் அனைத்தும் அவசர அவசரமாகச் சேகரிக்கப்பட்டு பிரதேச கல்விக் காரியாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாம். இந் நடவடிக்கையினால் பரீட்சைக் கருமங்கள் பாதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. விசாரணைகள் இடம்பெறுகின்றன.

எனினும் சம்பவத்திற்கு மறுதினம் புதிய வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்து முடிந்த இரண்டாந் தவணைப் பரீட்சையின் போது அவ்வப் பிரதேச பரீட்சைச் சபைகளினால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களில் பல தவறுகளும் எழுத்துப் பிழைகளும் இடம் பெற்றிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆண்டு ஏழு மாணவர்களுக்குரிய சைவ சமய வினாத்தாளில் "தேவாரங்களில் இரண்டைப் பிழையாக எழுதுக," "அவற்றைப் பாடியவர்களின் பெயர்களையும் எழுதுக" என்று கேட்கப்பட்டிருந்ததாம்.

மாணவர்களைப் பிழையாகச் சோதிப்பதற்கா பரீட்சை நடத்தப்படுகிறது? என்று பெற்றோர் கேட்கிறார்கள்.

## தாக்குதல் தோல்விக்கு 'தாத்தா'வே காரணம்!

### புலிகளின் விசாரணையில் பிரதேசத் தளபதி!

மட்டக்களப்பு- சித்தாண்டியில் கடந்த 21.07.97 அன்று படையினரின் பொறிக்குள் சிக்குண்டு தாம் 32 அங்கத்தவர்களையும், மற்றும் ஆயுதங்களையும் இழப்பதற்கு தாக்குதல் திட்டமிடலிலும் கையாண்ட முறையிலும் ஏற்பட்ட அசிரத்தையே காரணமென்ற மனக் கொதிப்பு புலிகள் இயக்கத்தினரிடம் இருந்து வந்தது தெரிந்ததே.

இது தொடர்பாக அத்தாக்குதலைத் தலைமையேற்று நடத்திய "தாத்தா" என அழைக்கப்படும் பிரதேசத் தளபதி மீது புலிகள் இயக்கத்தினரின் கோபாவேசம் திரும்பியிருக்கிறது. தற்சமயம் தாத்தா எனும் அந்த உறுப்பினர் புலிகள் இயக்கத்தின் உயர் மட்டத்தில் விசாரிக்கப்படுவதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் வேளையின்போது உதவிக்கு வரும் படையினரைத் தடுத்து நிறுத்துவதற்காக அவரால் ஏற்கனவே ஆங்காங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தடுப்புப் பிரிவை (கட் அவுட்) அவர் முன்கூட்டியே வாபஸ் பெறச் செய்து விட்டாராம் என்பதே புலிகள் இயக்கத்தினர் தாத்தா மீது கூறும் குற்றச் சாட்டென்று பரவலாகப் பேசப்படுகிறது.

## நான்கு அதிபர்கள் கைது!

### யாழ்ப்பாணத்தில் தடுத்துவைப்பு!

யாழ்ப்பாணம் வடமராட்சியில் உள்ள நான்கு பாடசாலை அதிபர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹாட்லிக் கல்லூரியின் பிரதி அதிபர் குணசீலன், பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலை அதிபர் கந்தசாமி, புலோலி மெதடிஸ் த மிஷன் பாடசாலை அதிபர் எஸ். ரகுநாதன் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

காயமடைந்த புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு உதவியதாகவும், மாணவர்களையும் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு உதவி செய்வதில் ஈடுபடுத்தியதாகவும் கூறியே கைது செய்யப்பட்டுள்ளனர். கரவெட்டியைச் சேர்ந்த கூட்டுறவுப் பரிசோதகர் கந்தசாமியும் இவர்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தடுத்துவைக்கப்பட்டு இவர்கள் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை, யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவு நிர்வாக அதிகாரி எஸ். விக்னேஸ்வரமூர்த்தி, யாழ் செயலக சாரதி சுதா ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். உணவு நிவாரண மோசடி தொடர்பாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இருவரும் விசாரணைகளுக்காக கொழும்புக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

## பத்திரிகையாளர்களின் மறைவு!

கடந்த ஜூலை மாதத்தில் இலங்கையில் இருவரும், இந்தியாவைச் சேர்ந்த ஒருவருமாக மூன்று மூத்த பத்திரிகையாளர்கள் காலமாகிவிட்டனர்.

பத்திரிகைத் துறையில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்த நிலையில் மேரி அமரதுங்க ஜூலை மாதம் 20ம் திகதி காலமானார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற இவர், பத்திரிகைத் துறையில் நன்கு வளர்ச்சி பெற்று பத்திரிகை ஆசிரியர் என்ற தரத்திற்கு உயர்ந்தார். 1969ல் 'தினபதி' எனும் தமிழ்த் தினசரியில் இணைந்த இவர் அப்பத்திரிகை 1989ல் மூடப்பட்டதும் 1992ல் 'வீரகேசரி'ப் பத்திரிகையில் இணைந்து, வெளிநாட்டுச் செய்திச் சேவையின் ஆசிரியராகவும் கடமையாற்றினார். இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழகத்தினால் தமிழ்த் தொடர்பு சாதனங்களுக்காக இவரால் எழுதப்பட்ட விஞ்ஞான மற்றும் சுகாதார அம்சங்கள் மிகப் பிரபலமானவை.

34 வருடங்கள் வீரகேசரிப் பத்திரிகையில் கடமையாற்றிய மூத்த பத்திரிகையாளரும் 'தினக்குரல்' ஆசிரியருமான பொன். இராஜகோபாலும் தனது 65வது வயதில் கடந்த 25.07.97 அன்று காலமானார். இறுதிக் கிரியைகளின் பின் இவரது பூதவுடல் கொழும்பு பல்கலைக் கழக மருத்துவ பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தியாவில் சென்னையிலிருந்து வெளிவரும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பணியாற்றி 60 வருடங்களைப் பத்திரிகைத் துறையில் பூர்த்தி செய்துள்ள சி.பு.சேஷாத்ரி தனது 85வது வயதில் கடந்த ஜூலை 15ம் திகதி காலமானார். சகபத்திரிகையாளர்களுக்கு முரசு தன் இதய அஞ்சலியை உரித்தாக்குகிறது.

## தோட்டப்பாடசாலைகள் மூடுவிழா நடக்குமா?

115 மாணவர்களைக் குறைந்த எண்ணிக்கையாகக் கொண்ட பாடசாலைகளுக்குத் தனித்தனியாக அதிபர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள் என்ற கல்வி அமைச்சின் உத்தரவையடுத்து மலையகத்தில் இயங்கும் பல தோட்டப்பாடசாலைகளுக்கு மூடுவிழா நடக்குமோ என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் இந்தப் புதிய விதிமுறை அறிவிக்கப்பட்டதால் தமிழ்ப் பெற்றோர்கள் பலரும் கவலையும் அச்சமும் கொண்டுள்ளனர்.

115 மாணவர்களுக்குக் குறைந்த எண்ணிக்கை கொண்ட பாடசாலைகளின் நிர்வாகத்தை அங்கு பணிபுரியும் உதவி ஆசிரியர்களுள் ஒருவரே பொறுப்பேற்க வேண்டுமெனவும், அதிபர் தரம் உடையோர் நியமிக்கப்படமாட்டார்கள் எனவும் பரவலாகப் பேசப்படுகிறது. இந்தப் புதிய ஏற்பாட்டின் விளைவாக முழுக்க முழுக்கப் பாதிக்கப்படப் போவது மலையக தோட்டப்புற மக்களே, எனவும் மத்தியமாகாண சபை உறுப்பினரும் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவருமான திரு. அய்யாத்துரை முரசுக்கு தெரிவித்தார்.

115 மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் பல மலையகத்தில் இருப்பதாகவும் கல்வி அமைச்சின் புதிய விதிப்படி ஆசிரியரே அதிபராகக் கடமை புரிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவதால் மாணவர்களின் கல்வித் தரம் மேலும் பாதிக்கப்படலாம் எனவும் அவர் கூறினார். அதே வேளையில் பல பாடசாலைகளுக்கு இதன் மூலம் மூடு விழா நடக்கலாம் எனவும் அவர் கவலை தெரிவித்தார்.

## பெயர்ப் பலகைகளில் தமிழ்ப் பிழைகள்

(கண்டி நிருபர்)

கண்டி நகரிலும் அதனைச் சூழவுள்ள அரச திணைக்களங்களிலும் கொட்டை எழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கும் தமிழ்ப் பெயர்ப் பலகைகளில் காணப்படும் எழுத்துப் பிழைகளும் சொற்பிழைகளும் வருடக்கணக்கில் அப்படியே இருந்து வரும் நிலை குறித்து தமிழ்பேசும் மக்கள் அதிருப்தியும் கவலையும் அடைகின்றனர்.

குறிப்பாக, கண்டி ரெயில்வே நிலையத்திற்கு முன்பாக ரயில் கடவைக்கு அருகில் கட்டட நிர்மாணத் திணைக்களத்தினால் போடப்பட்டிருக்கும் பெயர்ப்பலகையில் ஆங்கில, சிங்கள மொழிவடிவம் சீராக இருப்பதுடன் தமிழ் எழுத்துக்களின் வடிவமும் பிழையும் எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி வருகின்றது.

இதே வேளையில் மத்திய மாகாண சபைக்குச் செல்லும் பிரதான தென்னக்கும்புரை முச்சந்தியில் எழுதப்பட்டுள்ள "மகாவலி ஆரு" என்ற பிழையான சொற்பதம் இன்னும் திருத்தப்படவில்லை எனவும் இதே போன்று அதற்கு முன்னால் உள்ள கெத்தெனியா போட்டை பெயர்ப்பலகையில் காணப்படும் தமிழ்க் கொலையும் தமிழ் வாசகர்களைப் பாதித்து உறுத்தி வருகின்றன. இந்த இடத்தைத் தாண்டியே மத்திய மாகாண சபைக்குச் செல்லும் தமிழ் பேசும் உறுப்பினர்கள் 17 பேரும் இந்தப் பிழை குறித்து அங்கலாய்க்கின்றனர்.

## வாகனத்தைக் கடத்தினர் புலிகள்
### பேக்கரி ஊழியர்கள் சிறையில்

கடந்த ஜூலை 21ம் திகதி மட்டக்களப்பு-சித்தாண்டியில் இடம்பெற்ற சம்பவத்தின்போது படையினரைப் பொறிக்குள் சிக்கவைப்பதற்காக புலிகள் இயக்கத்தினர் கடத்திச் சென்ற டெலிகா வேன் மட்டக்களப்பைச் சேர்ந்த வசந்தன் என்பவருக்குச் சொந்தமானதாகும். தற்சமயம் இந்த வேனைப் புலிகள் இயக்கத்தினர் தம் வசமே வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே, மேற்கூறப்பட்ட வசந்தனுக்குச் சொந்தமான மட்டக்களப்பிலுள்ள பேக்கரியிலிருந்து கல்லடி இராணுவ முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பாணுக்குள் இருந்த குண்டு வெடித்ததால் பாண் வெட்டிய படைவீரர் தனது கரங்களை இழந்ததோடு கண்ணிலும் வயிற்றிலும் காயங்களுக்கு உள்ளானார். அத்துடன் சக படைவீரர் ஒருவரும் காயமடைந்தார்.

அதனைத் தொடர்ந்து வசந்தனின் பேக்கரியில் வேலை செய்து வந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்கள். பேக்கரி உரிமையாளரான வசந்தனும் கைது செய்யப்பட்டபோதிலும் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.

1990ம் ஆண்டிலிருந்தே தினமும் படையினரும் பொலிசாரும் மேற்படி பேக்கரியினால் விநியோகிக்கப்படும் பாணைப்பெற்று வந்துள்ளனர் என்பது தெரிந்ததே. தற்பொழுது இந்த பேக்கரியினால் பாண் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

## ஓரே ஒரு டாக்டர்

(காரைதீவு நிருபர்)

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கடந்த 12 வருடங்களுக்கு பிற்பாடு 4 சிங்கள M.B.B.S. டாக்டர்கள் கடந்த வாரம் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு முஸ்லிம் டாக்டரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பலத்த குறைபாடுகளை எதிர்நோக்கியிருந்த இவ்வாஸ்பத்திரிக்கு 5 டாக்டர்களை நியமித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது என பதில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். கே.பரமானந்தம் முரசுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை 3 டாக்டர்கள் பணியாற்றி வந்த காரைதீவு சுற்றயல்கூறு ஆஸ்பத்திரியில் தற்போது ஒரேயொரு டாக்டரே கடமையிலுள்ளார். இதனால் பொதுமக்கள் சீரற்ற வைத்திய சேவையையும், பலத்த அசௌகரியங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.

## 'இங்கே வேண்டாம் அனல் மின் நிலையம்!'
### ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி விளக்கம்

புத்தளத்தில் அனல்மின் நிலையம் அமைப்பதற்கு டரவலான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. புத்தளம் மக்களின் நலன் விரும்பும் சமூக நலன்புரி இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"புத்தளம் தொகுதியில் இன்று இடம் பெயர்ந்த மக்களோடு முஸ்லிம்கள் 80 வீதம் வாழ்கின்றார்கள். உணவு விவசாய உற்பத்தியில் முஸ்லிம்கள் முன்னணியில் நிற்கின்றார்கள். இதன் விபரங்கள்:-

பெருங்கடல்-மீன் கடற்தொழிலாளர்கள்- 75 வீதம் சிங்கள மக்கள்.
சிறுகடல் மீன் கடற்தொழிலாளர்கள்- 75 வீதம் முஸ்லிம்கள்.
உப்பு உற்பத்தியாளர்களில்- 100 வீதம் முஸ்லிம்கள்.
விவசாயிகள்- 75 வீதம் முஸ்லிம்கள்.
இறால்பண்ணை உற்பத்தியில்- 60 வீதம் முஸ்லிம்கள்.

இவைகள் அனைத்தையும் முறியடிக்கவே இந்த அனல் மின்சாரம். எத்தனையோ மாற்று வழிகள் உண்டு. மக்களை நோயாளர்களாக ஆக்கிவிட்டு உணவு உற்பத்திகளையும் நாசமாக்கும் இத்திட்டம் நம் நாட்டுக்கு வேண்டாம்.

நிலக்கரி அனல் மின்சக்தி திட்டத்தை திருக்கோணமலை மாவட்டத்திலும் மாத்தறை மாவட்டத்திலும், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு ஆகிய இடங்கலிலும் நிறுவுவதற்கு முடிவு செய்யப்பட்டு அவ்வூர் மக்களின் எதிர்ப்பு காரணமாக இத்திட்டம் கைவிடப்பட்டது. இத்திட்டத்திற்கு எதிர்ப்புக் காட்டியவர்கள் இன்றைய பொதுஜன முன்னணி ஆட்சியினர். இத்திட்டம் செயல்படுமானால் சூழல் மாசடைதல் காரணமாக நாம் வாழும் சூழல் மக்கள் உட்பட உயிரினங்களின் ஆரோக்கியத்துக்கும் பயிர் விளைச்சலுக்கும் பெரும் தீங்கை ஏற்படுத்தும். இத் திட்டத்தினால் ஏற்படவுள்ள பாதிப்புக்கள் வருமாறு:-

1. இம்மின் நிலையத்திலிருந்து தினமும் 112 'ஸல்பர்டயொக்ஸைட்' விரிவாயு வெளியேறி மழை மேகத்திலுள்ள நீராவியுடன் சேர்ந்து ஸல்பரிக் அமிலமாக மாறி அஸிட் மழை பெய்யும்.
2. இதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர் நிலங் கள் நாசமடையும்.
3. கழிவுப் பொருட்களாக நாளாந்தம் குவியும் சாம்பல் காரணமாக பயிர்களுக்கும் பிராணிகளுக்கும் பாரதூரமான தீங்கை ஏற்படுத்தும்.
4. கிணறு, குளங்கள் மாத்திரமின்றி நிலக்கீழ் ஊற்றுக்கள் கூட நச்சுத்தன்மையடையும்.
5. மீன் வளமிழந்து, மந்தைச் செல்வம் முற்றாக அழிகின்ற பேராபத்து உருவாகும்.
6. தொழிற்சாலை இயந்திரங்களிலிருந்து வெளியேற்றப்படும் ஹைப்போகுளோரைட் கழிவு மாத்திரமின்றி, பெருங்கடலில் 20 மைல் தூரம்வரை நச்சுத் தன்மையை ஏற்படுத்தும்.
7. மின் நிலையத்தால் ஒரு செக்கனுக்கு 25 இலட்சம் லிட்டர் வீதம் வெளியேற்றப்படும் வெந்நீர், நீரோடு சேர்வதால் இயல்பான வெப்பத்தை விட 7 பாகை கூடி நீர் வாழ் உயிரினங்களுக்கு ஆபத்தை விளைவிக்கும்.
8. உடப்பு முதல் பள்ளியாவத்தை வரை பெருங்கடல் வாழ் உயிரினங்களும், சிறுகடல் வாழ் அனைத்து உயிரினங்களும் முற்றாக அழிந்துவிடும்.

நிலக்கரி அனல் மின்சக்தி நிலையம் உருவாக்கப்படுவதால் வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க தலவில பிரதேசத்துக்கு ஏற்படவுள்ள அனர்த்தங்களை மேலே காட்டியுள்ளோம். எனவே இப் பகுதியின் உயிரினச் சூழலைப் பாதிக்கும் மேற்காட்டிய திட்டத்தை உடனடியாக நிறுத்தும்படி நாம் வேண்டிக்கொள்கிறோம்." இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr. P. ஆறுமுகம்** அவர்களை
கல்முனை ஆகஸ்ட் 9,10,11,12
T. M. M. பாமசியிலும் T.P. 065-29329
ஆகஸ்ட் 19 முதல் 31 வரை
கொழும்பில் **Dr. P. Arumugam**, Ahamed Tourist inn. Bang Building No:10, Reclamation Road, (Entrance Bankshall St., Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383, 436390
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101.
கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யலாம்

**BRIGHT EXTERNAL STUDY UNIT**
அஞ்சல் வழி கல்வித்துறை நிறுவனம்

Bright Book Centre (Pvt) Ltd கல்விப் பணியில் அஞ்சல் கல்வித் துறையில் Bright External Study Unit கீழ் தபால் மூலம் கல்வித்திட்டம் நடைபெற்று வருகிறது.

90 நாட்களில் ஆங்கிலக்கல்வி
90 DAYS SPOKEN ENGLISH

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்தில் நவீன உளவியல் அணுகுமுறையின் கீழ் மாணவர்கள் உவந்து ஏற்கக்கூடிய முறையில் பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த ஏழு வருட காலமாக நூற்றுக் கணக்கான மாணவர்கள் படித்துச் சான்றிதழ் பெற்றுள்ளனர்.
பாடநூல்கள் யாவும் இருபத்தொராம் நூற்றாண்டின் எதிர்பார்க்கைக்கு ஏற்ற வகையில் நவீன பாணியில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

கட்டணம் இக்கல்வி நெறிக்கான கட்டணம் 350/- மாத்திரமே. வெளிநாட்டு மாணவருகளுக்கு US $ 25.00 பாடக் கட்டணத்தை The Director - B.B.C எனும் பெயருக்கு Sea Street SPO மாற்றக்கூடியதாக காசுக் கட்டளையை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும்.

APPLICATION FORM
Name :..........
Address :..........
Date of Birth :..........
M.O. & Date :..........
Date :..........
..........
Signature of Applicant

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
BRIGHTEXTERNAL STUDYUNIT
Colombo Central Super Market Complex,
P. O. BOX 162, COLOMBO - 11. T.P. 434770

**7 வது குழுவிற்காக தற்போது புதிய மாணவ மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.**
அரசால் அங்கீகரிக்கப்பட்ட பிரபல்யமான (ப. இ. W/A 10328)
**D. S. INN DANCING ACADEMY**
நடாத்தும்
7வது மாதாந்த மேழைத்தேய, இந்திய சினிமா, நடன பயிற்சி வகுப்புக்கள்
* டிஸ்கோ, * ரொக், * ஜய்வ், * ஜேஸ்
* ரு(f)வ் * ப(b)லே, * பரதம், * இந்திய சினிமா நடனம்
* சிங்களம், * மேலைத்தேச, * இந்தி, * தமிழ்
பாடல்களுக்கு ஏற்றவாறு பயிற்றுவிக்கப்படும்.
நடன பயிற்றுனர்: **DINUM SENADIRA**
- பயில விரும்புவோருக்கு வயதெல்லைகள் இல்லை
- சிறுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்கள்
- பயிற்சி பெற்ற, பெறாத இருபிரிவினரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்
- பயிற்சியில் நன்கு தேறியவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
- நல்ல திறமைசாலிகளுக்கு D.S. INN SUPER DANCE னால் சினிமா, தொலைக்காட்சி, மேடை நடன நிகழ்ச்சிகளில் தங்களது திறமைகளை வெளிகாட்ட சந்தர்ப்பங்கள் அளிக்கபடும்.

*நீங்கள் எதிர்பார்ப்பது போல தொழில் சார்ந்த நடன கலைஞராகவோ, அல்லது சினிமா, தொலைக்காட்சி, மேடை நடன கலைஞராகவோ அல்லது சுபவேளை வைபவங்களில் உங்களது விருப்பங்களை பூர்த்தி செய்ய இயலாதவர்கள் தயங்காமல் உடனடியாக எங்களிடம் வாருங்கள். அத்துடன உங்கள் உடலமைப்பு வசீகரமாக இருப்பதற்குமான அறிவுரைகளும் இந்த நடன பயிற்சி வகுப்புகளுள் அடங்கும்.

வகுப்புக்கள் நடைபெறும் இடங்களும் திகதிகளும்

| | | |
|---|---|---|
| ஆகஸ்ட் 17ந் திகதி ஞாயிறு | : | கொழும்பு கோட்டை Y.M.C.A மண்டபத்தில் |
| ஆகஸ்ட் 18ந் திகதி திங்கள் | : | வரகாபொல நகர மண்டபத்தில் |
| ஆகஸ்ட் 19ந் திகதி செவ்வாய் | : | கண்டி கொட்டுகொடெல்லவீதி Y.M.C.A மண்டபத்தில் |
| ஆகஸ்ட் 20ந் திகதி புதன் | : | கேகாலைநகர மண்டபத்தில் |
| ஆகஸ்ட் 21ந் திகதி வியாழன் | : | காலி அயஸ்டடியில் |
| ஆகஸ்ட் 22ந் திகதி வெள்ளி | : | மஹரகம சனாதன மன்திரய |
| ஆகஸ்ட் 23ந் திகதி சனி | : | கடவத, நிகாடோ சிடி மண்டபத்தில் |

இத் திகதிகளில் வகுப்புக்கள் நடைபெறவுள்ளதால் உடனடியாக சேர்ந்துக் கொள்ளுங்கள்.
**D.S. INN DANCING ACADEMY**
Sanathana Mandiraya, Nawinna
Maharagama
Classic

ரெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments)
(Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
**றம்சன்ஸ்**
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

**பழுது பார்த்தல்**
வீடியோ கமெரா,
போட்டோ கமெரா
திருத்திக்கொடுக்கப்படும்
நியூ விக்ரேஸ்
**New Victors**
40 1/3, Galle Road,
Colombo-06.
(Hongkong bank அருகாமையில்)
**T.P-594492**

**காண்டம்**
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218

**'மந்திரயோகி' மாந்திரீக மருத்துவம்**
INTERNATIONAL DIVINE MEDICAL SERVICES INDIAN CLINIC
APPROVED CHARITY அரசாங்கப் பதிவு இல. HA14/BT/176
'எல்லாப்புகழும் இறைவனுக்கே'
கர்ம-காலபலனினால், தீயசக்திகளினால், தீவினைகளினால் தீராத உடல்மனநோய்கள், காதல், திருமணம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறுகாரியத்தடைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன் மனைவி குடும்பப்பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், வேறு பிரச்சினைகளும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவனருளி முனிவர்கள் கையாண்டு கைகண்ட புராதன பாரம்பரிய மருந்து, மந்திர யந்திரவசியங்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ, தகாத உறவை, போதை வஸ்த்தை மறப்பிக்க, வேறு (மருத்துவ) காரியங்களுக்கு வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் மஹா சக்தி உபாசகர் "மந்திரயோகி" டாக்டர் சக்தியானந்தபாவாவிற்கு [(D.H.M.D.Ac) (இலங்கை) M.B.B.S.(H).S.M.P (இந்தியா)] முழுப்பெயர்களுடன் கோரிக்கைகளை எழுதி கடல்கடந்தும் உடன்வேலை செய்யும் அதி ஆகர்ஷணசக்தி வாய்ந்த இறைபரிகாரப்பொருட்களை தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கின்றார்கள். 12ரூபா 50சத முத்திரைகள் இரண்டும் விரும்பிய குருதட்சணையும் (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றன. விஷ(பாம்பு) கடிக்கு மந்திரத்தினால் விஷமிறக்கி மருந்து கொடுத்து இலவசமாக அவசரசிகிச்சை அளிக்கப்படுகின்றன.



நாடவேண்டிய பெயர், விலாசம்
YOGI.DR.SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY) BATTICALOA (P.O), SRI LANKA.
குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி), (வேலூர்), கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.



**மலையாள மாந்திரிகம்**
மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.



தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
டாக்டர் பி.கே. சாமி J.D.G.A.N&JP
ஸ்ரீ துர்காதேவி மாந்திரிக உச்சாட்ட பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி. மே பில்ட் ரோட், கொழும்பு-13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்- 00941342464
பெக்ஸ்- 00941431137
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்- 342463-344831

திரு பி.கே.சாமி அவர்களின் ஜோதிட உலகம் நிகழ்ச்சியை வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் M.T.V.யில் காலை 07.45க்கு பார்க்கத்தவறாதீர்கள்.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# மூன்றாவது ஊடறுப்பு பலமும் – களமும்

**மே** 13ம் திகதி 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது. ஆகஸ்ட் 13ம் திகதியுடன் மூன்றுமாதங்கள் பூர்த்தியாகப் போகின்றன.

24.06.97 அன்று ஓமந்தை பெரிய மடுவில் புலிகள் ஊடறுத்து நடத்திய அழித்தொழிப்பு சமரை அடுத்து கடந்த ஒரு மாதகாலமாக தாக்குதல் யுத்தத்தை நிறுத்திவிட்டு, தற்காப்பு யுத்தக் கட்டத்தில் இருந்தனர் படையினர்.

**'செய் அல்லது செத்து மடி' என்று பெயர்சூட்டப்பட்டு புலிகளால் நடத்தப் பட்ட இரண்டு பாரிய அழித்தொழிப்பு சமர்களால் ஏற்பட்ட சீர்குலைவில் இருந்து இன்னமும் படையினர் முழுதாக மீளவில்லை.**

பலியானோர் காயமடைந்தோர் உட்பட கிட்டத்தட்ட இரண்டாயிரம் படையினருக்கான வெற்றிடம் 'ஜெயசிக்குறுய்' படையினருக்குள் ஏற்பட்டுள்ளது. காயமடைந்த பலநூறு படையினர் மறுபடியும் போரிட முடியாத நிலையில்தான் இருப்பர்.

இவைதவிர 200க்கு மேற்பட்ட பொலிசார் வன்னியில் இருந்து தப்பியோடி விட்டனர்.

பாரிய இழப்புக்களின் பின்னரும் படை நடவடிக்கையை தொடர்ந்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது அரசு.

கடந்த ஒரு மாதகாலமாக படை யினரை ஓய்வு பெறச் செய்யவும், படைப் பிரிவுகளை சீரமைக்கவும் கவனம் செலுத்தப்பட்டது.

'ஜெயசிக்குறுய்' படைப்பிரிவுகளின் அதிகாரிகளும் மாற்றப்பட்டு, வேறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

'ஜெயசிக்குறுய்' நடவடிக்கையின் முதல் கட்டத்தைக்கூட இன்னமும் எட்டாத நிலையில், அதனை எட்டுவதற்கான முயற்சி 31.07.97 காலையில் ஆரம்பமானது.

வவுனியா-யாழ் சாலையில் ஓமந்தை மதியாமடுவரை நிலைகொண்டுள்ள படையினரும், நெடுங்கேணியில் நிலை கொண்டுள்ள படையினரும் இரு முனைகளில் முன்னேறி புளியங்குளம் நெடுங்கேணி சாலையைக் கைப்பற்றுவதுதான் திட்டம். அப்போதுதான் முதல் கட்டம் பூர்த்தியாகும்.

வவுனியா-யாழ் சாலையில் படையினரின் முன்னரங்க நிலையில் இருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் புலிகளின் முன்னரங்க காவல் நிலைகள் உள்ளன.

31.07.97 அன்று காலையில் புலிகளின் நிலைகள் நோக்கியும், புலிகள் பதுங்கி வந்து தாக்க நிலையெடுக்க முடியாதவாறும் ஆட்டிலெறி ஷெல்கள் ஏவப்பட்டுக் கொண்டிருக்க, டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் படையினர் புளியங்குளம் நோக்கி நகரத் தொடங்கினர்.

நெடுங்கேணியில் நிலைகொண்டிருந்த படையினரும் தரை நகர்வு முயற்சியில் ஈடுபட்டனர்.

இருமுனைகளில் முன்னேறிய படையினருக்கும் புலிகளுக்கும் இடையே கடும் சண்டை மூண்டது.

புலிகளின் பதிலடி நடவடிக்கையால் தரை நகர்வு முயற்சி பின்னடைந்தது.

**31.07.97 அன்று நடைபெற்ற சண்டைகளில் தமது தரப்பில் ஒரு அதிகாரி உட்பட 17 படையினர் பலியானதாகவும், 14 பேர் காயமடைந்ததாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன. புலிகள் தரப்பில் 50 பேர் பலியானதாக படையினர் கூறினர்.**

**எனினும் அன்றைய சண்டையில் புலிகளின் காவல்துறையைச் சேர்ந்த ஒருவர் உட்பட ஒன்பதுபேரே பலியாகினர்.**

'ஜெயசிக்குறுய்' படையினர் மீண்டும் தாக்குதல் யுத்தத்தில் ஈடுபடத் தொடங்கியதும், புலிகள் தமது மூன்றாவது அழித்தொழிப்பு சமருக்கு திட்டமிட்டனர்.

'செய் அல்லது செத்துமடி' கட்டம் மூன்றுக்கு புலிகளின் அணிகள் தயாராகின.

விசேஷ அதிரடிப் பயிற்சி வழங்கப்பட்ட புலிகளின் சிறப்பு படையணிகளும், ஏனைய தாக்குதல் அணிகளும் களத்தில் இறங்கின.

24.06.97 அன்று புலிகள் நடத்திய ஊடறுப்புத் தாக்குதல் படையினரின் இதயப்பகுதியில் நடத்தப்பட்டது. ஓமந்தை-பெரியமடுப் பகுதியில் ஊடறுப்பு நடத்தப்பட்டது.

படையினரின் ஆட்டிலெறித் தளங்கள் அமைந்திருந்த பிரதான பகுதிக்குள் புலிகளின் அணிகள் ஊடறுத்தன.

இம்முறை 'ஜெயசிக்குறுய்' படையினரின் வயிற்றுப் பகுதியை ஊடறுக்கும் வகையில் திட்டம் தீட்டப்பட்டது.

புளியங்குளம் நோக்கிய வவுனியா-யாழ் சாலையில் நிலைகொண்டுள்ள படையினர் இன்னமும் புளியங்குளத்தை சென்றடையவில்லை.

ஓமந்தையில் இருந்து புளியங்குளம் 12.5 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. படையினர் இன்னமும் சில கிலோமீட்டர் தூரம் முன்னேறினால்தான் புளியங்குளம் வரும்.

புளியங்குளம் நோக்கி முன்னேறும் முஸ்தீபுகளில் ஈடுபட்டிருந்த படையினரின் வயிற்றுப் பகுதிதான் ஓமந்தை.

இப்பகுதியில் கடற்படையினரும், பொலிசாரும், குறிப்பிட்டளவு இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

**1.07.97 அன்று இரவு 10.30 மணியளவில் புலிகளின் தாக்குதல் அணிகள் ஓமந்தையிலும் இறம்பைக் குளத்திலும் ஊடறுத்தன. ஓமந்தையிலிருந்து இறம்பைக்குளம் வரையான 2 கிலோமீட்டர் பரப்பளவான பகுதிக்குள் அழித்தொழிப்பு சமர் ஆரம்பமானது.**

புலிகளின் சிறப்பு படையணிகள் காவலரண்களை தகர்த்துக் கொண்டு உள்ளே ஊடறுத்தன.

புலிகளின் தாக்குதலை படையினரும் எதிர்பார்த்தே இருந்தனர். எங்காவது ஒரு மூலையில் மீண்டும் ஊடறுப்பு நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இரண்டு ஊடறுப்பு சமர்கள் பாரிய வெற்றியளித்தமையால், தொடர் ஊடறுப்புக்களில் புலிகள் ஈடுபடுவார்கள் என்பது சுலபமாக கணிப்பிடக்கூடியதுதான்.

வவுனியாவில் இருந்து புளியங்குளம் வரையான பாதையில் புலிகள் ஊடறுப்பதானால் எங்கிருந்து அவர்களது அணிகள் முன்னேறும் என்பதை படையினர் தமது அனுபவம் காரணமாக கணிப்பிட்டிருப்பர்.

மீண்டுமொரு ஊடறுப்பு நடத்தப்பட்டால் வவுனியா படைநிலைகளில் இருந்து ஆட்டிலெறித் தாக்குதல் நடத்தப்படவேண்டிய இலக்குகளை முன்கூட்டியே படையினர் திட்டமிட்டிருக்கலாம்.

ஓமந்தை இறம்பைக் குளத்தில் புலிகள் ஊடறுத்த செய்தி எட்டியதும், வவுனியா படை நிலைகளில் இருந்து ஆட்டிலெறி ஷெல்கள் சரமாரியாக ஏவப்பட்டன.

ஓமந்தை இறம்பைக் குளத்தின் சுற்றுப் புறத்தில் புலிகளின் அணிகள் பதுங்குநிலை எடுக்கக்கூடிய பகுதிகளை கணிப்பிட்டு ஷெல்கள் பறந்தன.

நிமிடத்துக்கு மூன்று ஷெல்கள் வீதம் வவுனியா நகரை கிடுகிடுக்க வைத்தபடி ஆட்டிலெறியில் இருந்து ஷெல்கள் கிளம்பிச் சென்றன.

அதேவேளை ஊடறுத்த புலிகளின் அணிகள் ஓமந்தை இறம்பைக்குளம் பகுதியில் உள்ள காவல் நிலைகளை கைப்பற்றிக் கொண்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

புலிகளின் தாக்குதலால் பொலிசார் பின்வாங்கி வவுனியா நோக்கி தப்பிச் சென்றனர். ஒரு பொலிஸ் அதிகாரி தாக்குதலின் அதிர்ச்சியில் மாரடைப்பால் மரணமானார்.

ஓமந்தைக்கும் இறம்பைக் குளத்துக்கும் இடைப்பட்ட 2கிலோமீட்டர் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது. அங்கிருந்த படையினர் புளியங்குளப் பகுதி நோக்கியும், ஓமந்தை நோக்கியும் பின்னடைந்து ஏனைய படையினருடன் இணைந்து கொண்டனர்.

அதன்பின்னர் ஊடறுத்து நிற்கும் புலிகளின் அணிகளை நோக்கி ஓமந்தையில் இருந்தும், மறுபுறம் புளியங்குளம் பகுதியில் இருந்தும் படையினர் தாக்குதல் நடத்த தொடங்கினர்.

இரவு பத்தரை மணிக்கு ஆரம்பமான சண்டை அதிகாலை மூன்றுமணிவரை உக்கிரமாகத் தொடர்ந்தது. ஊடறுப்பை எதிர்பார்த்திருந்தமையால் படையினர் முன்கூட்டியே திட்டமிட்டிருந்த முறையில் தமது பலத்தை ஒன்றுதிரட்டி இருபுறமிருந்தும் தாக்குதல் நடத்தினார்கள்.

இருபுறமும் கிட்டத்தட்ட பத்தாயிரம் படையினர் மத்தியில் அறுநூறு பேர் கொண்ட புலிகளின் அணிகள் ஊடறுத்து நின்று சண்டையிட்டன.

பொழுது விடியத் தொடங்கிக் கொண்டிருந்தது. மேலும் அப்பகுதியில் நின்று சண்டையிட்டால் படையினரின் இரு புற நெருக்குதலுக்குள் மாட்டிக்கொள்ள நேரும் என்பதால், புலிகளின் அணிகள் களத்தைவிட்டு அகன்றன.

**ஓமந்தைக்கு மேற்குப் புறமிருந்தே புலிகளின் அணிகள் ஊடறுத்தன.**

**ஓமந்தைக்கு மேற்குப் புறம் இருக்கிறது மடு. அங்குள்ள காடுகள் வழியாகவே புலிகளின் அணிகள் பாய்ச்சல் நடத்தின.**

பின்னர் அதே வழியாகவே அணிகள் திரும்பிச் சென்றன. அக் காடுகள் வழியாகவே புலிகளின் அணிகள் வந்திருக்க முடியும் என்பதை கணிப்பிட்டு படையினரின் ஷெல்கள் அதிகாலை 5 மணிவரை தொடர்ந்து ஏவப்பட்டுக் கொண்டிருந்தன.

**களத்தைவிட்டு சென்ற புலிகளின் அணிகளுக்கு ஷெல்தாக்குதல் காரணமாகவே பலத்த இழப்பு ஏற்பட்டது.**

அடர்ந்த காட்டுப்பகுதிகளுக்குள் புலிகளின் அணிகள் சென்றுவிட முன்பே சர மாரியான ஷெல்தாக்குதலை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டது.

வவுனியா படை நிலைகளில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள்தான் திரும்பிச் சென்று கொண்டிருந்த புலிகளின் அணிகள் மத்தியில் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன.

ஒரு ஷெல் விழுந்து வெடித்தால் அந்த இடத்தில் குறைந்தது நான்கு ஐந்துபேராவது பலியாக நேரலாம்.

சண்டை முனையில் பலியான புலிகளை விட ஷெல் வீச்சில் பலியான புலிகளின் எண்ணிக்கையே அதிகமாக இருந்திருக்கிறது.

**சண்டை நடந்த முனையில் புலிகளின் கைகள்தான் மேலோங்கி இருந்துள்ளன.** படையினர் தரப்பில் பொலிசார் உட்பட 67பேர் பலியானதாக படைத்தரப்பு கூறுகிறது. உத்தியோகபூர்வமற்ற தகவலின்படி படையினர் தரப்பில் பொலிசார் உட்பட 135 பேர்வரை பலியானதாகவும், நூற்றுக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் என்றும், அவர்களில் பலர் பின்னர் பலியாகி இருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் 39 சடலங்கள்தான் படையினரால் சண்டை நடந்த இடத்தில் கைப்பற்றப்பட்டுள்ளன.

புலிகள் தரப்பில் 126 பேர் பலியாகி உள்ளனர். தமது உறுப்பினர்களின் 85 உடல்கள் வரை புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

**சண்டைமுனையில் அத்தனை உயிரிழப்பும் ஏற்பட்டிருந்தால், படையினரின் கைகள் மேலோங்கியிருந்ததாகவே அர்த்தப்படும். அப்படியானால் புலிகள் தமது உறுப்பினர்களின் உடல்களை கொண்டு செல்ல சந்தர்ப்பமே இருந்திருக்காது.**

ஒவ்வொரு உடல்களையும் தூக்கிச் செல்வது என்பது துரிதமாக நடக்கக்கூடிய காரியமல்ல. சுலபமான வேலையும் அல்ல.

வெலிஓயா முகாம் தாக்குதல் படையினரால் முறியடிக்கப்பட்டபோது, புலிகளால் உடல்களை கொண்டுசெல்ல முடியவில்லை. படையினரின் கைகள் மேலோங்கி, களநிலவரம் பாதகம் அடைந்ததால், ஏனைய அணிகள் துரிதமாகப் பின்வாங்கிச் செல்ல வேண்டி ஏற்பட்டது.

களநிலவரம் பாதகமாக மாறிவிட்டால் ஏனைய அணிகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள பின்வாங்குவதே யுத்த தந்திரமாகும். உடல்களை மீட்க முற்பட்டால் ஏனைய அணிகளும் வியூகத்துக்குள் சிக்கவேண்டியதாகி விடும். உடல்களை சுமந்தபடி துரிதமாக பின்வாங்க இயலாது.

**எனவே, ஓமந்தை இறம்பைக்குளம் ஊடறுப்பு சமரில் புலிகளின் அணிகளை படையினரால் தமது வியூகத்துக்குள் சிக்க வைக்க இயலவில்லை. புலிகளின் தாக்குதல் பலமாகவே இருந்திருக்கிறது.**

சண்டைமுனையில் 60பேர்வரையான புலிகளே பலியாகியுள்ளனர். கண்ணிவெடிகளில் சிக்கியும், படையினரின் தாக்குதல் காரணமாகவும் அவர்கள் பலியாகினர். அவ்வாறு பலியானவர்களில் சிலரின் உடல்களையும் புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர்.

புலிகளின் செய்தியின்படி ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

**பலியான உறுப்பினர்களின் உடல்களையும், காயமடைந்த உறுப்பினர்களையும் களத்தை விட்டு கொண்டு சென்றதுடன், ஆயுதங்களையும் கொண்டு செல்லக்கூடிய களநிலவரம் இருந்திருக்கிறது.**

அதாவது ஓமந்தைக்கும் இறம்பைக் குளத்துக்கும் இடைப்பட்ட இரண்டு கிலோமீட்டர் பகுதி கிட்டத்தட்ட ஐந்து மணிநேரம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்திருக்கிறது.




களத்தைவிட்டு அகன்ற புலிகளின் அணிகளில் 60ற்கு மேற்பட்ட புலிகள் ஷெல் தாக்குதலில் பலியாகி இருக்கலாம் என்று தெரிகிறது.

படையினரின் பலம் மேலோங்கி இருந்திருக்குமானால் களத்தை விட்டு அகன்ற புலிகளின் அணிகளை படையினர் குறிப்பிட்ட தூரம் வரை தொடர்ந்திருப்பர்.

அப்படி நடந்திருந்தால் ஷெல் தாக்குதலில் பலியான தமது உறுப்பினர்களின் உடல்களை புலிகள் கொண்டு செல்ல சந்தர்ப்பம் இருந் திருக்காது.

ஷெல் தாக்குதல் மத்தியிலும் பலியான தமது உறுப்பினர்களின் உடல்களை புலிகள் கொண்டு சென்றுள்ளனர்.

இச்சமர் தொடர்பாக படையினர் தரப்பால் கூறப்பட்டதாக வெளியான செய்திகள் முன்னுக்குப் பின் முரணாகவே அமைந்திருந்தன.

நூறு புலிகளின் உடல்களை கைப்பற்றியதாக முதலில் செய்தி சொல்லப்பட்டது. 200 உடல்களை புலிகள் தூக்கிச் சென்றுவிட்டதாக வும் தெரிவிக்கப்பட்டது.

அதுவே ஒரு பலவீனமான செய்தி தான். 200 உடல்களை தூக்கிச் செல்வதை படையினர் கண்டனர் என்றால், ஏன் தாக்குதல் நடத்தாமல் இருந்தனர்?

300 புலிகள் பலியான ஒரு களத்தில் 200 புலிகளை தூக்கிச் செல்லக்கூடிய களநிலவரம் எப்படி வாய்த்தது?

**இறுதியாக 39 புலிகளின் உடல்கள்தான் படையினரால் ஒப்படைக்கப்பட்டன. தொலைக்காட்சியில் புலிகளின் உடல்களை கமரா எட்டத்தில் காண்பித்தது. பெருமளவான உடல்கள் கிடப்பதுபோல காண்பிக்கும் உத்தியே அது.**

புலிகளிடம் கைப்பற்றியதாக தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட ஆயுதங்கள் கிட்டத்தட்ட முன்னூறுபேர் பாவிக்கப் போதுமானது. ஆனால் உடல்கள் மட்டும் 30தான் கிடைத்திருக்கிறது என்பதுதான் நேர்மாறான விடயம்.

தமது உறுப்பினர்களின் உடல்களை கொண்டு செல்லக்கூடியதாக இருந்த களநிலவரத்தில் ஆயுதங்களை போட்டுவிட்டு செல்ல வேண்டிய அவசியம் புலிகளுக்கு ஏற்பட்டிருக்காது. ஏ.கே.47 ஐயோ, ரி.56 ஐயோ இரு தோல்களிலும் மாட்டிக்கொண்டு பலியானவரின் உடலை தூக்கிச் செல்வதுதான் வழக்கம். அது முடியாவிட்டால் பலியானவரின் ஆயுதத்தை மட்டும் எடுத்துக்கொண்டு செல்வார்களே தவிர, ஆயுதத்தை போட்டுவிட்டு உடல்களை மட்டும் கொண்டு செல்வது வழக்கமல்ல. போர் முறையும் அல்ல.

**தமது தரப்பில் பலியானோர் எண்ணிக்கை தொடர்பாக சரியான தகவலை உடனடியாக வெளியிடாத படைத்தரப்பு, புலிகள் தரப்பு இழப்பு விபரத்தை மட்டும் துல்லியமாக கூறி விடுவதுதான் மகா ஆச்சரியம்.**

'ஜெயசிக்குறுய்' படையினர் தாம் கைப்பற்றிய பகுதிகளை பலப்படுத்தி வருவதாக கடந்த ஒருமாத காலமாக செய்திகளில் சொல்லப்பட்டன.

அப்படியிருந்தும் புலிகள் ஊடறுத்து தாக்கிவிட்டு, திரும்பிச் செல்ல முடிந்திருக்கிறது. ஊடறுப்பு நடக்கலாம் என்று விழிப்பாக இருந்தும்கூட உள்ளே புகுந்த புலிகளின் அணிகளை தமது வியூகத்திற்குள் சிக்கவைக்க படையினரால் முடியவில்லை.

ஊடறுத்த புலிகளின் எண்ணிக்கையை விட படையினரின் எண்ணிக்கை பலமடங்கு அதிகம். ஆயுத தளபாட வசதிகளும் புலிகளைவிட பன்மடங்கு உயர்வானது.

யானையின் காதுக்குள் எறும்பு புகுந்த மாதிரி ஊடறுப்பை நடத்திவிட்டு புலிகளின் அணிகள் திரும்பிச் சென்றுள்ளன. எனவே படையினர் இதனை பலத்த வெற்றியாக கூறுவது மிகைப்படுத்தலாகவே அமைந்துள்ளது.

**பிரசார சாதனங்களின் உதவியுடன் 'ஜெயசிக்குறுய்' படையினர் எதிர்கொள்ளும் தடைகள் வெற்றிப்படிகளாக காட்டப்படலாம். ஆனால் களநிலவரத்தின் படி நோக்கினால், மற்றொரு சீர்குலைவை புலிகள் ஏற்படுத்தியுள்ளனர்.**

இத்தாக்குதலின் பின்னர் நூற்றுக்கு மேற்பட்ட பொலிசார் களத்தில் இருந்து திரும்பி வவுனியாவுக்கு சென்றுள்ளனர். பாதுகாப்பு பணிகளில் ஈடுபட பொலிசார் மறுப்பதால் இராணுவ விசேட படையினர் பாதுகாப்பு பணிகளை கவனிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

'ஜெயசிக்குறுய்' படையினர் மீது இதுவரை மூன்று அழித்தொழிப்பு சமர்கள் புலிகளால் நடத்தப்பட்டுள்ளன.

'செய் அல்லது செத்துமடி' கட்டம் ஒன்று தாண்டிக்குளத்தில் 10.06.97 அன்று நடைபெற்றது. அதில் 81 புலிகள் பலியாகினர். படையினர் தரப்பில் 350 பேர்வரை பலியாகியதாக கணிப்பிடப்பட்டது.

செய் அல்லது செத்துமடி கட்டம் இரண்டு ஓமந்தை பெரியமடுவில் 24.06.97ல் நடத்தப்பட்டது. புலிகள் தரப்பில் 93 பேர் பலியாகினர். படையினர் தரப்பில் 150 பேர் வரை பலியானதாக மதிப்பிடப்பட்டது.

செய் அல்லது செத்து மடி கட்டம் மூன்றில் புலிகள் தரப்பில் 126 பேர் பலியாகினர். படையினர் தரப்பில் 135 பேர்வரை பலியானதாக உத்தியோகபூர்வமற்ற மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இதில் கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில், எதிர்பாராத தருணத்தில் நடத்தப்பட்ட முதல் ஊடறுப்பைவிட, முதல் ஊடறுப்பின் பின்னர் நடத்தப்பட்ட ஏனைய ஊடறுப்புக்கள் கடினமானவையாகும்.

**1. ஊடறுப்பை எதிர்பார்த்து தயார் நிலையில் படையினர் இருக்கின்றனர்.**

**2. ஏற்கனவே நடந்த ஊடறுப்புக்களின் அனுபவம் காரணமாக மாற்று ஏற்பாடுகள் படையினரால் செய்யப்பட்டுள்ளன.**

இவ்வாறான நிலையில் தமது தாக்குதல் வேகம், சண்டையிடும் திறன் என்பவற்றை மட்டும் நம்பியே புலிகளின் அணிகள் ஊடறுப்பு சமரில் இறங்கியாக வேண்டும்.

இவ்வாறான சமர்கள் கடினமானவை தான். ஆனால் வன்னித் தளத்தில் பாரிய முற்றுகையை முறியடிக்க ஊடறுப்புக்களை நடத்தியே தீரவேண்டிய அவசியம் புலிகளுக்கு இருக்கிறது.

எனவேதான் படையினர் தயார் நிலையில் இருப்பார்கள் என்பது தெரிந்தும்கூட புலிகளின் அணிகள் ஊடறுப்பில் இறங்குகின்றன. வன்னியில் படையினரின் முற்றுகையை முறியடிக்க ஊடறுப்புக்களை நடத்தியே ஆகவேண்டிய நிலையில் புலிகள் உள்ளனர்.

இவ்வாறான களங்களில் முன்பைவிட அதிகமாக உயிரிழப்புக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாக அமைகிறது.

எனினும் ஷெல் தாக்குதலுக்குள் சிக்கியிருக்காவிட்டால் புலிகளின் இழப்பு இத்தனை பாரியதாக இருந்திருக்காது.

ஆனால், புலிகளின் ஊடறுப்புக்களை எதிர்கொண்டபடி 'ஜெயசிக்குறுய்' படையினர் நீண்ட பரப்பில் பரந்து நிலை கொள்வது சாத்தியமில்லையென்பதையும் புலிகளின் மூன்று ஊடறுப்பு யுத்தங்களும் புலப்படுத்தியுள்ளதை மறுக்கவியலாது. ■

நாரதர்



**கொழும்பில் கைதுசெய்யப்பட்ட** இரு கலைஞர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் இது: சந்தேகத்தின்பேரில் வீதியில் வைத்து கைதுசெய்தார்கள். "கொழும்பில் 15 வருடத்துக்கு மேல் இருக்கிறோம்" என்றும் எங்கு பணியாற்றுகிறோம் என்றும் விபரங்களையெல்லாம் விலாவாரியாக விபரித்தார்களாம். ஒருவர் ஆண்; ஒருவர் பெண். அரச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் விளம்பரமுகவராக இருக்கிறார் ஒருவர். என்ன சொல்லியும் பயனில்லை. பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு போனார்கள். 'நீங்கள் கலைஞர்கள் என்றால் பாடிக் காண்பியுங்கள்' என்றார்களாம். அவர்களும் பாடிக்காட்டினார்களாம். நன்றாகப் பாடியும்கூட ஒன்றரைநாள் உள்ளே வாடவைத்துப்போட்டுத்தான் விடுதலை செய்தார்களாம். ஒரு சின்ன ஆலோசனை: நடனம் தெரிந்தவை யாரும் மாட்டுப்பட்டால், நடனம் தெரியும் எண்டு சொல்லித் தொலைக்காதேயுங்க!

**யாழில் சில சம்பவங்கள்** கச்சிதமாக மூடி அமுக்கப் படுகிறதாம். யாழ் கொட்டடியில் ஒரு அத்துமீறல் நடந்ததாம். பின்னர் பிரச்சனை வெளியில் வராமல் தடுக்க அரிசி மூட்டை கொடுக்கப்பட்டதாம். முறையிடுமாறு பெண்ணின் கணவரிடம் சொன்னதற்கு, "வேண்டாம் ஏன் தொல்லை?" எண்டு சொல்லிப் போட்டாராம். சாம, பேத, தான, தண்டம்.

**கிரிக்கெட் போட்டிகளை** பார்த்துக் கொண்டு இருந்தபடி "ஸ்கோர்' சொல்லுகினமோ?" எண்டு ஒரு நண்பர் கடந்தவாரம் என்னைப்போட்டு குடைந்துபோட்டார். சனிக்கிழமை கொழும்பில்

## அதிரடி அய்யாத்துரை

டெஸ்ட் கிரிக்கெட். இந்தியாவின் ஸ்கோர் 250ஐ தாண்டியிருந்தது. அது தான் ஞாயிறு பேப்பர்களைப் பார்த்த நண்பருக்கு சந்தேகம். ஸ்கோர் போர்டை பார்த்துக்கொண்டு சொல்லப்பட்டதால் ஏதாவது ஸ்கோர் குழப்பமோ, எண்டு. அதெல்லாம் கிடக்க, இங்கே வானொலியில் நாம் நம்பிக்கையாக கேட்கிற ஒரே ஒரு விஷயம் கிரிக்கெட் ஸ்கோர் மட்டும்தான்!

**கடந்தவாரம்** நான் ஒரு தகவல் செப்பியிருந்தேன். அவுஸ்திரேலிய அமைச்சருக்கு நடந்த விருந்துபசாரத்தில் பச்சைக்கட்சி சார்பாக அழைக்கப்பட்டவர் நம்நாட்டு வெளிநாட்டு விவகாரத்துக்கு பொறுப்பானவரின் நெருக்கமான நண்பர் எண்டு சொல்லியிருந்தேன் அல்லோ? அதைப்படித்துப் போட்டு அந்த தமிழ்க் கட்சியின் பிரமுகர் குறிப்பிட்ட பிரமுகருக்கு ஃபோன் செய்தாராம். "பார்த்தியளோ-உங்களைப் பற்றியும் முரசில் போட்டுக்கிடக்கு" எண்டு சொன்னாராம். நல்ல தொண்டு.

**கிழக்கின் சிங்கத்தார்** அமெரிக்காவில்போய் நாலு நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். யார் நல்லது செய்தாலும், பாராட்டுவது நியாயம். சிங்கத்தார் கையைக் குடுங்கோ! அதுசரி பாருங்கோ, அவர் அமெரிக்காவில்போய் அந்தப் போடு போடுகிறார், இங்கே தலைவர் வெளிநாட்டு அமைச்சரிடம் வேறு மாதிரியாகப் போடுகிறார். இதைச் சொன்னால் 'தீயசக்திகள்' எண்டு தலைவர் கிழிச்சுப்போடுவார். விடுங்கோ, திட்டு வாங்குவானேன்?

**அந்த இலண்டன் வானொலிச்** சேவையை முன்னர் எங்கடை சனம் ஆர்வமாகக் கேட்பது வழக்கம். இப்போதெல்லாம் சப்பென்று போச்சு எண்டு ஒரு அபிப்பிராயம். இங்குள்ள அதிகாரத் தரப்பு ஒலிபரப்பாருடன் ஒப்பந்தம் செய்து கொண்டபின்னர், அந்த ஒப்பந்தத்துக்கு பங்கம் இல்லாதபடி அடக்கி வாசிக்கப்படுகிறதாம். ஒரு பெண் அறிவிப்பாளருக்கும் நிர்வாகம் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பதாக அரசல் புரசலான கதையும் அடிபடுகிறது.

**கப்பல் போக்குவரத்தை** ரெண்டு எழுத்தார் குழப்பக் கூடாது எண்டு அமெரிக்காவும் சொல்லிப்போட்டுது. இப்போது யாழ்ப்பாணத்துக்கு கப்பல் போகாமல் இருக்க யார் காரணம் தெரியுமோ? திருத்த வேலை என்பதெல்லாம் பூச் சுற்றலாம். தனித்துவத் தலைவர் ஒருவருக்கு வேண்டப்பட்ட நிறுவனமொன்றுதான் வேறு கப்பல் நிறுவனங்களுக்கு போட்டியாக குளறுபடிகள் செய்யுதாம். முன்னர் உற்பத்தியாளர்கள் கொண்டுவந்த வெங்காயத்தைச் சுருட்டப் பார்த்ததும் அந்தக் கப்பல் நிறுவனம்தானாம். கைக்குள் போடவேண்டியவர்களைப் போட்டுக்கொண்டு திருத்தம், பொருத்தம் எண்டு பூ சுற்றப்பட்டதாம். இதனை யார் கண்டிக்கிறது? பூசாரிகள் செய்தால் குற்றமில்லையோ?

**இப்போதெல்லாம்** அரச பத்திரிகைகளில்தான் கூட்டான கட்சியினர் கொள்கை விளக்கம் சாற்றுகினம். அதிலொன்றும் பிழையில்லை. ஆனால் முன்னர் ஒரு காலத்தில் அப்பத்திரிகைகளை 'ஏரிக்கரைப் பத்திரிகைகள்' எண்டு என்ன கிழி கிழிச்சவை தெரியும்தானே?

**எத்தனை பெரிய மனிதர்களிடமும்** சில பலவீனங்கள் இருக்கவே செய்யும். காரணத்தை அறிய அறிஞர் அரிஸ்டாட்டிலை நாடுவோம்.

"பேரறிஞன்
மூளையிலும்
ஒரு
முட்டாள்தனமான
மூலை உண்டு!" ■


படிப்பகம்

www.padippakam.com

# குருதியில் தோய்ந்த வெள்ளை உடை

### மாதாவின் ஊழியன்

யாழ்ப்பாணம் மரியாள் கோவில் பெரிய கோவில் என்றும் அழைக்கப்படுகிறது. அப் பகுதியில் புலிகள் இயக்கத்தினரின் நடமாட்டம் இருந்தது.

இத் தகவல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருக்கு எட்டியது. தேடுதல் நடத்த வாகனம் ஒன்றில் சென்றனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர்.

வாகனத்தில் சென்றவர்கள் கீழே இறங்கியபோது புலிகள் சுட்டனர். இரு பகுதியினரும் மோதிக்கொண்டனர். ஈ.பி.ஆர்.எல்.எஃப். தரப்பில் அப்துல்லா (இயக்கப் பெயர்) என்பவர் கொல்லப்பட்டார். இவர் யாழ்ப்பாணம் கோப்பாயைச் சேர்ந்தவர். புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

இச் சம்பவத்தின் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் பெரிய கோவிலுக்குள் புகுந்து தேடினார்கள்.

பெரிய கோவிலில் ஒரு இளைஞர் பியானோ வாசித்துக்கொண்டிருந்தார். தேவாலயப் பாடல் குழுவைச் சேர்ந்த அந்த இளைஞரின் பெயர் யூட் சர்க்கரியாஸ். அந்த இளைஞரை ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிடித்தது.

தான் பாடல் குழுவைச் சேர்ந்தவன் என்று அவர் மன்றாடினார். அவர்கள் நம்பவில்லை. வேனில் தூக்கிப்போட்டுக் கொண்டு சென்றனர்.

தங்கள் உறுப்பினரைச் சுட்ட புலிகள் பெரிய கோவில் பக்கமாகத்தான் ஓடினார்கள். அதனால் கோவிலில் உள்ளவர்களுக்கு புலிகளுடன் தொடர்பு இருப்பதாகச் சந்தேகித்தனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர்.

மறுநாள் யூட் சர்க்கரியாஸின் உயிரற்ற

அவர் சொன்னது சிப்பாய்க்கு புரியவில்லை. தன்னை ஆங்கிலத்தில் திட்டுவதாக நினைத்து ஆங்கிலத்தில் விளக்கம் சொன்னவருக்கு விழுந்தது அடி.

பின்னர் மேஜர் ஒருவர் வந்தபின்னர்தான் குயின்ரனின் சகோதரர் விடுதலை செய்யப்பட்டார். மரண வீட்டில் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சில்வெஸ்டர். இவர் முன்பு புலிகள் இயக்க ஆதரவாளராக இருந்தவர். சில்வெஸ்டரை விசாரித்துவிட்டு விடுதலை செய்தனர் இந்தியப் படையினர்.

இதனை அறிந்து சில்வெஸ்டரைத் தேடிச் சென்றனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின். வீட்டில் சில்வெஸ்ர் இல்லையென்றதும், அங்கிருந்த பொருட்கள், தளபாடங்கள் என்பவற்றை அடித்து நொருக்கிவிட்டு சென்றுவிட்டனர்.

பயந்துபோன சில்வெஸ்டர் கொழும்புக்கு தப்பியோடினார். சில்வெஸ்டர் தம்மிடமிருந்து தப்பிச்சென்ற ஆத்திரத்தில் அவரது சகோதரரான எஸ்.பீரியஸ் என்பவரை ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் கடத்திச் சென்றனர்.

எஸ்.பீரியஸ் கூட்டணி ஆதரவாளர். யாழ் மாநகரசபை உறுப்பினராகவும் இருந்தவர்.

எஸ்.பீரியஸை விடுதலை செய்யுமாறு உறவினர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரிடம் மன்றாடினார்கள்.

எஸ்.பீரியஸை தமது விசாரணைக் கூடத்தில் வைத்து சித்திரவதை செய்தனர். சில்வெஸ்டரைப் பற்றியும் விசாரித்தனர்.

"எனக்கு எதுவும் தெரியாது. என்னைக் கொன்றுவிடாதீர்கள். என் ஆறு பிள்ளைகளும் அநாதையாகிவிடுவார்கள்" என்று காலில் விழுந்து மன்றாடினார் எஸ் பீரியஸ்.

அவர்கள் இரக்கம் காட்டவில்லை.

சுட்டுக்கொன்றுவிட்டு, அவரது உடலை

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

உடல் சூட்டுக்காயங்களுடன் வீதியில் கிடந்தது. கடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்ட காயங்களும் உடலில் காணப்பட்டன.

மாதாவின் மகிமைகளைப் பாடிவந்த ஒரு அப்பாவி இளைஞன் அநாதைபோல வீதியில் பிணமாகக் கிடந்தான்.

இக் கொலைச் சம்பவத்தை அப்பகுதி மக்களும், சமயப் பெரியார்களும் பலமாகக் கண்டித்தனர். யூட் சர்கரியாஸின் மரணச் சடங்கில் அச்சுறுத்தல்களைமீறி பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

### கொலைக்குக் கொலை

யாழ்ப்பாணம் பாசையூரில் சுவாம்பிள்ளை குயின்ரன் என்பவரது மரணமும், அதன் பின்னர் நடைபெற்ற நடந்த சம்பவங்களும் தொடர் சோகமானவை.

குயின்ரனிடம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் அவரது மினி வேனை வாங்கிச் செல்வார்கள். அவர்களுக்கு வேன் கொடுக்கக்கூடாது என்று புலிகளால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அதன்பின்னரும் குயின்ரனிடம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். மினி வேனை வாங்கிச் சென்றனர். ஆயுதங்களுடன் வந்து கேட்கும் போது எப்படி மறுக்கமுடியும்.

கொடுத்தால் புலிகளால் பிரச்சனை. கொடுக்காவிட்டால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பால் பிரச்சனை. இரு தலைக்கொள்ளி எறும்பின் நிலைதான்.

இறுதியாக சுவாம்பிள்ளை குயின்ரன் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் ஒரு குடும்பஸ்தர்.

இதனையறிந்த இந்தியப் படையினர் விரைந்து சென்றனர். குயின்ரனின் மரணச் சடங்குக்கான வேலைகளைச் செய்து கொண்டிருந்த குயின்ரனின் சகோதரர் அன்ரனையும், மேலும் நாலு பேரையும் பிடித்து உதைத்தார்கள்.

வந்த படையினருக்கு இந்திதான் தெரியும். அவர்கள் கைது செய்திருப்பது பலியானவரின் சகோதரரை என்று சொல்லிப் புரியவைக்கவும் முடியவில்லை.

பிடித்த ஐந்துபேரையும் தமது முகாமுக்கு கொண்டு சென்ற முறையும் கொடுமையானது.

முகாம்வரையும் முழங்காலில் நடந்து வருமாறு கூறிவிட்டனர். குயின்ரனின் சகோதரர் அன்ரனுக்கு சிப்பாய் ஒருவர் அடித்த அடியில் மூக்கால் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

அதனைப் பார்த்துப் பரிதாபப்பட்ட ஒருவர் 'இவர் மரணமானவரின் சகோதரர்' என்று ஆங்கிலத்தில் கூறினார்.

கோண்டாவிலில் வைத்து எரித்தனர். எரிந்த நிலையில் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க மாகாண சபை உறுப்பினராக இருந்த பாசையூரைச் சேர்ந்த லோகன் (இயக்கப் பெயர் யசீர்) இக் கொலைகளுக்கான சூத்திரதாரியாக இருந்தார்.

ஊருக்குள் தனது சொந்த விரோதங்களை தீர்த்துக் கொள்வதற்காக இயக்கப் பெயரைப் பயன்படுத்தி அத்துமீறல்களில் ஈடுபட்டவர் இந்த லோகன். இதனால் இயக்கத்துக்குள் பல முறை தண்டிக்கப்பட்டார். பின்னர் இந்தியப் படை காலத்தில் இயக்க முக்கியஸ்தரான நபர்களில் லோகனும் ஒருவர். இவரை மாகாண சபை உறுப்பினராகவும் பட்டியலில் சேர்த்துக் கொண்டனர்.

இந்த லோகனின் தகவலை நம்பி அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் பிடிக்காத ஆட்கள் பலர் பாசையூரில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தால் பாதிக்கப்பட்டனர்.

தற்போது லோகன் கனடாவில் இருக்கிறார். இயக்கம் வீழ்ச்சி கண்டவுடன் தப்பி ஓடிவிட்டார்.

### பெண்மணிக்கும் குடு

அண்ணனைத் தேடி தம்பியைக் கொல்வது, தம்பிக்காக அண்ணனைக் கொலை செய்வது, உறவினர்களை கொலை செய்வது போன்ற காரியங்களில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

இயக்க மோதல்கள் தொடங்கியபின்னர் புலிகள் இயக்கத்தினரால் ரெலோ இயக்க உறுப்பினர்கள் வீதிகளில் போட்டு எரிக்கப்பட்டனர்.

அக் கோரச் செயல்களையெல்லாம் தங்கள் மனித வேட்டைகளால் முறியடித்து முன்னணியில் நின்றனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர்.

புலிகள் இயக்க உறுப்பினர்களைவிட, புலிகள் இயக்க ஆதரவாளர்கள், புலிகள் இயக்க உறுப்பினர்களின் குடும்பங்கள், தவறுதலாக அடையாளம் காணப்பட்டு கொல்லப்பட்டோர், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க உறுப்பினர்கள் சிலரின் சொந்த விரோதங்கள் காரணமாக நடைபெற்ற கொலைகள் என்று மனித வேட்டையொன்றே கட்டவிழ்த்துவிடப்பட்டது.

5.10.88 அன்று நல்லூரைச் சேர்ந்த தர்மலிங்கம் துரையம்மா (வயது 43) என்னும் பெண்மணியும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் கொல்லப்பட்டார்.

### ஆசிரியர்கள் படுகொலை

யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிலையங்கள் மூலமாக நன்கு பிரபலமானவர்

# கொல்லப்பட்ட பொருளியல் ஆசிரியர் சொல்லப்பட்ட கட்டுக்கதை

கிருஷ்ணானந்தன் மாஸ்டர்.

பொருளியல் கற்பிப்பதில் அதி சிறந்த ஆசிரியர் என்று மாணவர்களிடம் பெருமதிப்புப் பெற்றிருந்தவர் கிருஷ்ணானந்தன்.

கிருஷ்ணானந்தன் புலிகளுக்கு ஆதரவானவர். இந்தியப் படையினரின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் அதிருப்தி கொண்டிருந்தவர்.

நல்லூரில் இருந்த கிருஷ்ணானந்தன் வீட்டுக்குச் சென்றனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர்.

மக்களிடம் பிரபலமும், மதிப்பும் பெற்றிருந்த காரணத்தினால் தன் உயிருக்கு அபாயம் நேராது என்றே நம்பியிருந்தார் கிருஷ்ணானந்தன்.

அவரது நினைப்பு பொய்யாக்கப்பட்டது.

கிருஷ்ணானந்தனை சுட்டுக்கொன்றனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர்.

மக்களிடம் மதிப்பு பெற்றிருந்தவர் என்பதால் கிருஷ்ணானந்தன் கொலை செய்யப்பட்டதற்கு கதையொன்றை கட்டிவிட்டார்கள்.

புலிகளின் விமான எதிர்ப்பு ஆயுதமான சாம் 7 இன் உதிரிப் பாகங்கள் அவரது வீட்டில் கிடந்தன. அதனால்தான் அவர் கொல்லப்பட்டார் என்று கட்டப்பட்ட கதையை மக்கள் நம்பவில்லை.

கொல்லப்பட்டபோது கிருஷ்ணானந்தனுக்கு 36 வயது. அவரது மரணத்தின் மூலம் சிறந்ததொரு கல்விமானை தமிழ் மக்கள் இழந்தனர்.

12.11.88 அன்று கிருஷ்ணானந்தன் கொல்லப்பட்டார்.

சங்கானையச் சேர்ந்த சுப்பிரமணியம் ரவீந்திரா (வயது 22) என்னும் விஞ்ஞான ஆசிரியரையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் சுட்டுக் கொன்றனர். 25.10.88ல் இக் கொலை நடந்தது.

தென்மராட்சி பிரஜைகள் குழுத் தலைவராக இருந்தவர் ராசசங்கரி. புலிகள் இயக்கத்தினருக்கு ஆதரவாகச் செயற்படுகிறார் என்று சந்தேகப்பட்டது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

26.10.88 அன்று ராசசங்கரி சாவகச்சேரியில் வைத்து ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் கொல்லப்பட்டார்.

பொது நலச் செம்மல்-புனித சேவையாளர் மட்டக்களப்பு பிரஜைகள் குழுத் தலைவர்
அதி. வண. தந்தை. சந்திரா பெர்ணாண்டோ அவர்களுக்கு

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 9.8.1941 மறைவு 6.6.1988



இறப்பு!
மனிதர்க்கு ஏற்றந் தரும் ஓர்
மறக்க முடியா வரப்பிர சாதம்!
ஆம்!
யேசு பிரானும் இறந்தார்
மனிதருக்காய்!
பாசம் மனிதருட் பாவிகள்மேல்
கொண்டதனால்!
பாரச் சிலுவையில்-
பாரோர் விடிவுற்றார்!
ஈர விழிகள் இரத்தம் சொரிந்தன.

சந்திரா பெர்ணாண்டோ தந்தையே
சேவையில்
முந்திவிட்டீர் யேசு பிரானின்
வழி வழியை!
ஏழையின் கண்கள் இளகினால்-
நின் விழியும்
ஆழமாய் நெஞ்சள் அழும்
என்னும் விம்பத்தைக்
காட்டுமே தங்கள் களங்கமிலாத முகம்!
தேட்டம் பிறிதில்லை-
சேவையே யென்றமைந்த
மா வந்தனைக்குரிய தந்தையே!
தங்களுக்குச் சாவந் தணைதல்
தலை விதியோ ஏழைகட்கு?

இந்தக் கிழக்கிலங்கை மண்ணின்
எறிகதிரே!
உந்தனைப்போற் சேவை வழங்க
உதிப்பவர் யார்-?
வந்தனை சாற்றி
வணங்கத் தகுந் தந்தை
சந்திரா பொர்ணாண்டோ சந்தனக் காவே!
மனிதம் உலகிலே வாழும் வரையும்
புனிதம் கெடாத
புகழ்ச் சேவை யாற்றித்
தனித்துவம் பெற்றீர்!
தலைமுறையை வென்றிட்டீர்!

இந்து-பவுத்தம்-இசுலாம்-
கிறிஸ்தவம்-
எந்தப் பகுப்பு மிலாத இதயமே!
சந்திப்ப தென்றோ-?
எம் சஞ்சலம் தீர்வென்றோ-?

வான் போல் அகன்ற மனமும்,
மழைக் கரமும்,
தேன்போல் அவுஷதமாய்த் தேற்றும்
மொழியும்; இனி-
எங்கள் திரு மண்ணில் என்று
நிழல்பரப்பும்-?

சங்கை யுயர்ந்த எம் தந்தையே!
எங்கள் இதயக் கமலத்தைக் கொய்துங்கள் பாத
உதயக் கதிரின் ஒளியிலே
சாத்துகிறோம்.
கல்முனை-அம்பாரைக் கண்கள் சொரியுந்நீர்
ஓல்கா தொழுக்காலும் ஓய்ந்து!

கவிதை: பாண்டியூரன்
கல்முனைப் பிரதேச பிரஜைகள் குழு
கல்முனை தமிழ் புனருத்தாரணச் சபை
அம்பாறை மாவட்ட தமிழர் மகா சங்கம்

### வணபிதாவுக்கு நடந்த கதி

மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் தலைவராக இருந்தவர் வணபிதா சந்திரா பெர்ணாண்டோ அடிகளார்.

இந்தியப் படையினர் மட்டக்களப்பில் நடத்திய அத்துமீறல்களை துணிந்து கண்டித்துக் குரல் கொடுத்தவர்.

அன்னை பூபதியின் உண்ணாவிரதத்தின் பின்னர் சந்திரா பெர்ணாண்டோ அடிகளார்மீது இந்தியப்படையினரும் கோபமாக இருந்தனர். ஆயினும் அவரது உயிருக்கு தீங்கிழைக்க நினைத்தார்களில்லை.

இந்திய அதிகாரிகளை அடிக்கடி சந்தித்து பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக வாதாடினார். இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களை விடுவிப்பதற்கும் பாடுபட்டார்.

இந்திய ருடே சஞ்சிகை 1988 ஜூன் மாதத்தில் அவரைப் பேட்டி கண்டது.

அப் பேட்டியில் தன் கருத்தை அழுத்தம் திருத்தமாக பின்வருமாறு கூறியிருந்தார் வணபிதா சந்திரா பெர்ணாண்டோ.

"மக்களுள் பலர் இந்திய அமைதிப் படையைச் சகித்துக்கொண்டாலும், தங்கள் சொந்தத் தாய் மண்ணிலேயே இந்தியப் படைகளால் தாங்கள் இரண்டாம்தரக் குடிமக்களாக ஆக்கப்படுவதைக் கண்டு அவர்களின் நெஞ்சம் வெந்துகொண்டிருக்கிறது. உதவி நடவடிக்கைகள் சிலவற்றால் அதனை மாற்ற இந்தியப்படை முயற்சி செய்தாலும், மக்கள் அவர்கள்மீது காட்டும் மதிப்பு நிலையானது அல்ல"

மட்டக்ளப்பில் தங்கள் இயக்கத்தினருக்கு எதிரானவர்களை மட்டுமல்லாமல், இந்தியப் படையினருக்கு எதிரானவர்களையும் தீர்த்துக் கட்டுவதில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் முன்னின்றனர்.

வணபிதா சந்திரா பெர்ணாண்டோமீதும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர் கோபம் கொண்டனர்.

06.06.1988 அன்று மட்டக்களப்பில் கிறிஸ்தவ துறவிகள் தங்கியிருந்த மடாலயத்துக்குள் புகுந்தனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர்.

அங்கிருந்த ஆயர் உட்பட அனைவரையும் மடாலய முற்றத்தில் நிறுத்திவைத்தனர்.



துரையம்மா



கிருஷாணந்தன்

அத்தனைபேரும் செய்வதறியாது பார்த்து நிற்க, வணபிதா சந்திரா பெர்ணாண்டோவை சுட்டுக் கொன்றார்கள்.

நிழல் கொடுத்த மரம் சரிந்ததுபோல மண்ணில் விழுந்தார் வணபிதா சந்திரா பெர்ணாண்டோ.

மக்களுக்காக ஓயாது உழைத்த ஒரு மதகுருவின் குருதி மண்ணை நனைத்தது. தூய வெள்ளை அங்கி செங்குருதியில் தோய்ந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் இக் கொலையில் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவர் ராசிக். சொந்தப் பெயர் கணேசமூர்த்தி.

இந்த ராசிக்கைத்தான் பின்னர் தமது மத்திய குழு உறுப்பினராக அறிவித்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

தற்போது ராசிக் மட்டக்களப்பில் இராணுவத்தினரோடு இணைந்து செயற்பட்டுவருகிறார். ராசிக் குழுவினர் தம்மோடு இல்லையென்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். கூறுகிறது. ஆனால் மட்டக்களப்பு ஈ.பி.ஆர்.எல்.எஃப். பொறுப்பாளர்களுக்கு ராசிக் நிதி உதவி செய்வதாகத் தெரிகிறது. மறைமுகமான சம்பந்தம் இருந்து வருகிறது.

### கண்ணீர் அஞ்சலி

வணபிதா சந்திரா பெர்ணாண்டோ அவர்கள் பிறந்தது 9.8.1941. மக்கள் சேவையில் மரணித்தது 6.6.1988ல். 21.09.1972ல் வணபிதா சந்திரா பெர்ணாண்டோ அவர்கள் குருத்துவம் பெற்றுக்கொண்டார்கள்.

கவிஞர் பாண்டியூரன் எழுதிய கவிதை ஒன்றை கல்முனை பிரஜைகள் குழுவினர் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரமாக வெளியிட்டிருந்தனர்.

வணபிதா சந்திரா பெர்ணாண்டோ கொலைக்கு பொதுமக்கள் மத்தியில் பலத்த கண்டனங்கள் எழுந்தன.

இறுதிவரை ஈ.பி.ஆர்.எல்.எஃப்.அக் கொலைக்கு உரிமை கோரவில்லை.

### படைவெளியேற வேண்டும்.

இலங்கையில் இருந்து இந்தியப்படை வெளியேற வேண்டும் என்று தமிழகக் கட்சிகள் மட்டுமல்லாமல் இந்திய தேசியக் கட்சிகளும் கோரத் தொடங்கின.

பாரதிய ஜனதாக் கட்சி, ஜனதா தளம் ஆகிய கட்சிகள் இந்தியப்படை இலங்கையிலிருந்து வெளியேற வேண்டும் என்று தீர்மானங்கள் இயற்றின.

இதனால் ராஜீவ் அரசுக்கு தர்மசங்கடமாகிவிட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணசபை முதல்வராக இருந்த வரதராஜப் பெருமாளை தமது கட்சியின் பிரச்சாரப் பீரங்கி போலவே பயன்படுத்தத் தொடங்கியது இந்திய அரசு.

வரதராஜப் பெருமாளின் பேட்டிகள் இந்தியத் தொலைக்காட்சிகளில் தினமும் ஒளிபரப்பாகின. இலங்கையில் இந்தியப் படையின் பணிகள் வெற்றியளித்து வருகின்றன என்று காண்பிப்பதற்கு பெருமாளின் பேட்டிகளை பயன்படுத்தியது இந்திய அரசு.

இந்தியப் படை வெளியேறவே கூடாது என்று ஒன்றைக்காலில் நின்று பேட்டியளித்தார் பெருமாள். இந்தியப் படையை வெளியேறுமாறு கூறிய கலைஞர் கருணாநிதியையும் மறைமுகமாகச் சாடினார் பெருமாள்.

ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாசா பெரும் வெற்றியீட்டினார்.

இந்தியப் படை வெளியேறியே தீர வேண்டும் என்று பிரேமதாசா அறிவித்துவிட்டார்.

## 142 அரசியல் தொடர்

அற்புதன்-எழுதுவது

தாம் வெளியேற நேர்ந்தாலும் வடக்கு கிழக்கு மாகாணசபை தாக்குப் பிடிக்கக் கூடியதாக ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுத்தனர் இந்தியப் படையினர்.

அதுதான் மக்கள் தொண்டர் படை. இந்தியப் படையினர் நினைத்தது ஒன்று. நடந்தது வேறொன்று.

மக்கள் தொண்டர் படைக்கு நடந்த ஆட்திரட்டல் மாகாண சபை ஆட்சிமீதே மக்களுக்கு வெறுப்பூட்டுவதாக மாறியது.

ஆட்திரட்டலுக்கான வேட்டைகள் சுவாரசியமானவை.

(தொடர்ந்து வரும்)

### தவறு திருத்தம்

அரசியல் தொடர் 139ல் தமிழீழ மக்கள் மன்றத் தலைவர் சிவஞான சுந்தரம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் வல்லைச் சந்தியில் வைத்து கொல்லப்பட்டதை விபரித்திருந்தேன். பெயரில் ஒரு தவறு நேர்ந்துவிட்டது. அவரது பெயர் சிவானந்த சுந்தரம் (வயது65) என்பதே சரியானதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# பொருந்தாத மருந்தை புகட்டும் அணுகுமுறைகள்!

## பேரமாகும் தீர்வு முயற்சிகள்!



அரசியலுக்குப் புதியவரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகமே தனி ஒரு ரகம். அவரைப்போலவே வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் சிந்தனைகள், போக்குகள் என்பவைகூட தனி ஒரு போக்கானவையாகவே உள்ளன.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சட்டத்துறையைக் கற்றுத் தேர்ந்தவர். திரு.லக்ஷ்மன் கதிர்காமர் தொழில் ரீதியாக சட்டத்துறையில் பிரபலம் பெற்றவர்.

ஆயினும் அரசியல் என்பது இருவருக்குமே புதிது. அரசியல் வாழ்வில் இருவருமே சுமார் மூன்றுவருடகால அனுபவத்தையே கொண்டவர்களாக இருக்கின்றனர்.

சட்டத்துறைப் பேராசிரியர், முன்னாள் கொழும்புப் பல்கலைக்கழக உபவேந்தர் என்பன போன்ற தகுதிகளுடன் இலங்கையின் அரசியலமைப்பிலும், அரசியலிலும் பாரிய மாற்றங்களைக் கொண்டுவருவதில் பேராசிரியர் பீரிஸ் ஈடுபட்டுள்ளார்.

ஒரு கண்டுபிடிப்பை மேற்கொள்ளும் ஆராய்ச்சியாளர், தனது நோக்கம் நிறைவேறும்வரை தனது ஆராய்ச்சியின் விபரங்களை முழுமையாக வெளியிடுவதில்லை. அதேபோலவே பேராசிரியர் பீரிஸும் அரசியலமைப்பைத் தயாரிப்பதில் ஈடுபட்டுவருகின்றார்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தாம் தோன்றும் அரங்குகள், பேட்டிகள் என்பவற்றில் அரசியல் தீர்வின் அவசியத்தை இடையறாது குறிப்பிட்டுவருகின்றார்.

**அவர் பேசிவருவதைப் பார்க்கும்போது, இலங்கையில் ஓர் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமென்பதைவிட, தம்மால் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பின் மூலமாகவே இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென அவர் பெரிதும் எதிர்பார்ப்பதையே அவரது கருத்துக்கள், கண்ணோட்டங்கள் மூலமாக அறிய முடிகின்றது.**

இலங்கையின் இன்றைய இனப்பிரச்சினைக்கு முதலில் தேவைப்படுவது அரசியல் தீர்வேதவிர; அரசியலமைப்பல்ல. சந்திரிகா அரசு தனது அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய புதியதோர் அரசியலமைப்பைக் கொண்டுவரலாம். ஆனால் வடக்கு-கிழக்கு மக்கள் தமது அரசியலபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் ஓர் அரசியல் தீர்வையே பெரிதும் எதிர்பார்த்துள்ளார்கள்.

இந்நிலையில் பேராசிரியர் பீரிஸ் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் வடக்கு-கிழக்கு மக்கள்மீது புதிய அரசியலமைப்பின்கீழ் அரசாங்கம் எதிர்பார்க்கின்ற ஒரு தீர்வைத் திணிக்க முற்படுவதாகவே இருக்கின்றது.

ஆனால் வடக்கு-கிழக்கின் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற அரசியல் தீர்வென்பது, தமது சுயகௌரவம், உரிமை என்பவற்றை உறுதி செய்கின்ற தாயகக் கோட்பாட்டை மையமாகக் கொண்ட ஓர் அரசியல் தீர்வாகவே காணப்படுகின்றது.

**ஆனால், நீதியமைச்சரோ தன்னால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனைகளின் வரையறைக்குள் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகள் அடங்கிக் கொள்ளக்கூடியதாக இருப்பதையே விரும்புகிறார்.**

தங்கள் வழங்கும் சக்திக்கேற்பவே வாங்கும் சக்தி இருப்பதை விரும்புகின்ற பொருள் உற்பத்தியாளர்கள் போலவே, அரச தரப்பின் அணுகுமுறையும் அமைந்துள்ளது.

அரசியல் தீர்வென்பது பேரத்துக்கு உட்பட்ட ஒன்றாக மாறியிருப்பதையே இது புலப்படுத்துகிறது. தன்னிடம் உள்ள தீர்வு யோசனைக்கு மேலான ஒன்றை வாங்க முடியாத அளவுக்கு தமிழ் பேசும் தரப்பின் பலம் வீழ்ச்சியடைந்தால்தான், அரச தரப்புக்கு சாதகம் கிட்டும்.

தற்போது விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு அரசு உண்மையாகவே விரும்பாமல் இருப்பதற்கும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்றுக்கு முன்வரத் தயங்குவதற்கும் உண்மையான காரணம் அதுதான்.

இந்தக் காரணத்தை தமது சமாதானக் கோஷங்கள் ஊடாக அரசு மூடிமறைத்திருப்பதால் பேச்சுக்கள் பற்றிய ஊகங்களும், இரகசியப் பேச்சு முயற்சி என்ற வதந்திகளும் அடிக்கடி கிளம்பிக்கொண்டிருக்கின்றன.

**விடுதலைப் புலிகள் அமைப்பினரை பலவீனப்படுத்தல் என்ற விடயமானது, அதற்கு எத்தகைய காரணங்கள் கூறப்பட்டாலும், தமிழ் பேசும் தரப்பின் வாங்கும் சக்தியை குறைத்து அரசியல் பேரத்தில் அரசு தனது விருப்பு வெறுப்புக்கேற்ற பலனை அறுவடை செய்ய நினைக்கும் உபாயம்தான்.**

நீதியமைச்சர் பீரிஸ் போர்வெறி கொண்டவரல்ல. ஆனால் தன்னால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனையும், அரசியலமைப்பு சீர்திருத்தமும் சர்வரோக நிவாரணியாக ஏற்றுக் கொள்ளப்பட்டாக வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார்.

அதேசமயம் சிங்கள மக்களின் நலன்களை தாரைவார்க்கும் ஒருவராக தன்னைப் பற்றிய கணிப்பு வந்துவிடக்கூடாது என்பதில் அவருக்கு அக்கறை இருப்பதை மறுப்பதற்கில்லை.

**அதன்பிரகாரம் தீர்வு யோசனையில் முன்னர் காணப்பட்ட சில காத்திரமான அம்சங்களை நீக்கிவிடவும் அவர் முன்வந்திருந்தார். பிராந்திய சபைகளைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருப்பதாக ஆரம்பத்தில் கூறப்பட்டிருக்கவில்லை.**

பின்னர் கலைக்கும் அதிகாரம் இருப்பதாக யோசனையில் தெரிவிக்கப்பட்டதுடன், பௌத்த மதகுருமார்களை அழைத்தும் கௌரவ நீதியமைச்சர் அதனை விளக்கிக் கூறியிருந்தார்.

சிங்கள மக்களிடம்- சிங்கள மக்கள் என்று கூறும்போது- அவர்கள் நலனை பாதுகாக்கும் காவலர்களாக தம்மைப் பிரகடனப்படுத்தும் பௌத்த மத பீடாதிபதிகளின் பழிச்சொல்லுக்கு ஆளாகாமல் இருக்க, தீர்வு யோசனையில் திருத்தங்கள் செய்ய நீதியமைச்சர் பின் நிற்கவில்லை.

அத் திருத்தமானது நியாயமான அதிகாரப் பகிர்வுக்கு முரணானது என்றும் பிராந்திய சபையின் தலைக்கு மேலே கூரிய கத்தியை கட்டித் தொங்கவிடுவது போன்றது என்றும் தமிழ்க் கட்சிகள் கூறியதைக்கூட நீதியமைச்சர் கவனத்தில் கொள்ளவில்லை.

**சிங்கள மக்களை அதிருப்திக்குள்ளாக்கிவிட்டு ஒரு தீர்வினை நாடுவது அரசியலில் புத்திசாலித்தனமல்ல. ஆனால் நியாயமான ஒரு தீர்வை சிங்கள மக்கள் ஏற்கச் செய்வதே சரியானதாகும்.**

அதற்குமாறாக தமிழ் பேசும் மக்களுக்கு போதிய அதிகாரப் பகிர்வு கிடைத்தால் பிரிந்து போய்விடுவார்கள்; வடக்கு-கிழக்கு இணைந்திருந்தால் அது பிரிவினைக்கு வழியமைத்துவிடும் போன்ற தப்பான அபிப்பிராயங்களை அப்படியே விட்டுவைப்பதும், அவற்றுக்கு ஏற்ற தீர்வைத் தேடுவதுமே பிழையான போக்காகும்.

தப்பான அபிப்பிராயங்களை விட்டுவைத்து, அத்தகைய அபிப்பிராயங்களை திருப்தி செய்யும் தீர்வை நாடி நிற்பதும், தமிழ் பேசும் மக்கள் மட்டும் மறு பேச்சின்றி அத் தீர்வை ஏற்கவேண்டும் என எதிர்பார்ப்பதும் நியாயமாகாது.

ஆனால் நீதியமைச்சரும், அரச தரப்பும் சிங்கள மக்களிடம் உள்ள தப்பான அபிப்பிராயங்களை களைந்தெறியக்கூடிய வகையில் காத்திரமான பிரசாரங்களை செய்யவில்லை.

**காலம் காலமாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தடையாக இருந்து வருவது தமிழ் பேசும் மக்கள் தொடர்பான சந்தேகப் பார்வைதான். தமிழ் பேசும் மக்களுக்கான அடிப்படை உரிமைகள் அவர்களுக்குள்ள பிறப்புரிமைகளே தவிர பிறிதொரு இனத்தின் உரிமைகளை பங்கு கேட்கின்ற விடயமல்ல- பிறிதொரு இனத்தின் உரிமைகளில் ஒரு பகுதியை பறிதெடுப்பதுமல்ல.**

இதனை எந்தவொரு சிங்கள அரசியல் தலைவர்களும் இன்றுவரை சொன்னதில்லை. இனவாதிகளால் தோற்றுவிக்கப்பட்ட தப்பான கருத்துக்களை வேரறுக்க ஆட்சியில் இருப்போர் துணிச்சலாக முயன்றதுமில்லை.

அக் கருத்துக்களும், சந்தேகங்களும் சரியானவை என்பது போலவே நடந்து கொள்கின்றனர். பிராந்திய சபைகளை கலைக்கும் அதிகாரம் சேர்க்கப்பட்டதுகூட தவறான சந்தேகங்களை ஆதரிப்பது போன்றதுதான்.

**ஆக, மொத்தத்தில் சிங்கள மக்களிடம் பேரினவாதிகளால் தோற்றுவிக்கப்பட்ட தவறான நிலைப்பாடுகள், தவறான கருத்தோட்டங்கள், தவறான சந்தேகங்கள் போன்றவை அப்படியே இருக்கக்கூடியதாக, அந்த கலவையான எண்ணங்களை திருப்திச் செய்யக்கூடிய தீர்வைத்தான் அரசு நாடுகிறது. அதுதான் அரசுக்குள்ள வழங்கும் சக்தியாகும்.**

இத்தகைய தீர்வொன்றை வழங்கவேண்டுமானால் வேறு வழியின்றி இதனை ஏற்றாக வேண்டிய நிலைக்கு தமிழ் பேசும் தரப்பு தள்ளப்படவேண்டும்.

தரம் குறைந்த பொருளை ஒருவர் வாங்கவேண்டுமானால் அவரது வாங்கும் சக்தி குறைவடைந்திருக்க வேண்டும். அதனைவிட மேலான ஒரு பொருளை வாங்கும் தகுதி இருந்தாலும், கையில் அதற்கான பணம் இல்லாத நிலையில், கிடைப்பதை வாங்குவது தவிர வேறு வழியில்லை.

தற்போதுள்ள தீர்வு யோசனையை புலிகளிடம் விற்க முடியாது. ஏனைய தமிழ்க் கட்சிகளிடம்தான் விற்க முடியும்.

ஆயினும் இத் தமிழ்க் கட்சிகள்கூட சற்றே உரத்த குரலில் பேச முற்பட்டுவிடக்கூடாது என்பதிலும் நீதியமைச்சர் கவனமாக உள்ளார்.

அதன் விளைவாகவே ஏற்கனவே பலவீனமாகக் கிடக்கும் தமிழ்க் கட்சிகளை பாராளுமன்றக் கட்சிகள், பாராளுமன்றத்தில் இல்லாத கட்சிகள் என்று இருவேறாகப் பிரித்துவிட்டனர்.

ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டாக சமர்ப்பித்த தீர்வு தொடர்பான ஆலோசனைகளைக்கூட நிராகரித்த நிலையில், பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகளுடன் மட்டுமே நீதியமைச்சர் தீர்வு யோசனைகள் தொடர்பாக பேசிவருகிறார்.

தமிழ் பேசும் தரப்பினரின் ஒரு பரந்துபட்ட தளத்தில் பேச்சை நடத்தக்கூட அரசு விரும்பவில்லை என்று தெரிகிறது.

**ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்ட தமிழ்கட்சிகளில் சிலவற்றை அரசே இன்று கைவிட்டுள்ளது. தமிழ் பேசும் மக்கள் சார்பாக பேசுவதற்கு அக் கட்சிகள் உரித்துடையவை அல்ல என்று அரசே ஓரம் கட்டியிருக்கிறது.**

தமிழ் பேசும் தரப்பின் பலத்தை அரசே தனக்கேற்ப தணிக்கை செய்துகொண்டு, தனது வழங்கும் சக்திக்கேற்ப அதனை வரையறுத்து பேச்சு நடத்துகிறது.

சில சமயங்களில் தமிழ்க் கட்சிகள் உரத்துப் பேச முற்பட்டால் அதற்கும் ஒரு அஸ்திரம் வைத்திருக்கிறார் நீதியமைச்சர். "தமிழ்க் கட்சிகள் ஏற்றால் என்ன, ஏற்காவிட்டால் என்ன தீர்வு யோசனை முன்வைக்கப்படும்" என்று கூறி வருகிறார்.

உடனே தமிழ்க் கட்சிகள் மௌனமாகிவிடுகின்றன. பலவீனமடைந்துள்ள தமிழ்க் கட்சிகளைக்கூட மேலும் பணியவைக்கவே அரச தரப்பு விரும்புகிறது.

**எந்தவொரு தமிழ்க் கட்சியும் இப்போது தாயகக் கோட்பாடு பற்றியோ, அல்லது தீர்வு முயற்சிகள் இழுத்தடிக்கப்படுவது பற்றியோ பேசுவதில்லை. இழுத்தடிக்கப்படும் முயற்சிகளில் தம்மையும் இணைத்துக் கொண்டு, தமக்கொரு அங்கீகாரம் இருந்தால் போதும் என்ற நிலையிலேயே அவை உள்ளன.**

இப்போதுள்ள நிலையில் அரசின் வழங்கும் சக்திக்கேற்பகூட வாங்கும் சக்தி தமிழ் கட்சிகளிடம் இல்லை. தற்போதுள்ள தீர்வு யோசனைகள்கூட மேலும் குறுக்கப்பட்டால்கூட இக் கட்சிகள் அதனை எதிர்த்து செயற்பட முடியாத நிலையிலேயே உள்ளன.

ஆனால் எக் கட்டத்திலும் தனது தீர்வு யோசனையை புலிகளிடம் விற்க முடியாது என்பது நீதியமைச்சருக்கு மட்டுமல்ல அரசுக்கும் தெரிந்திருக்கிறது.

புலிகள் பலமாக உள்ளவரை தனது தீர்வு யோசனையை திணிக்கவும் முடியாது. இந் நிலையில் புலிகளைப் பலவீனப்படுத்தியே தீருவது என்ற நிலைப்பாட்டைத்தவிர மாற்றுவழி ஏதுமற்ற நிலையில்தான் அரசு இருக்கிறது.

ஆனால் இத்தகைய நிலைப்பாடு வெற்றியளிக்கப்போவதில்லை.

**வாங்கும் சக்தி, வழங்கும் சக்தி என்று தீர்வை பேரத்துக்கு உரிய விடயமாகக் கருதாமல், எரியும் பிரச்சனைக்கு நேர்மையான தீர்வைக் காண முன்வந்தால் மட்டுமே விளைவுகள் நன்றாக அமையும்.**

நோய்க்கு தான் கண்டுபிடித்துள்ள மருந்தை வைத்தே சிகிச்சை செய்தாகவேண்டும் என்று நீதியமைச்சர் நினைப்பது தவறல்ல. ஆனால் அம் மருந்து முற்றிய பிணிக்கு உகந்ததல்ல என்று தெரிந்தபின்னும் கட்டாயமாகப் புகட்ட நினைப்பதும் சரியானதல்ல.

இக் கட்டத்தில் சர்வதேச நிலவரங்களையும் ஊன்றிக் கவனித்தாக வேண்டும்.

பிரிட்டனிலும் ஐரிஷ் கெரில்லாக்கள் போர்நிறுத்தமொன்றுக்கு உடன்பட்டுள்ளார்கள். பிரிட்டனில் பலர் இப்போர் நிறுத்தத்தை சந்தேகக்கண்ணுடனேயே பார்க்கின்றனர்.

ஐ.ஆர்.ஏ. அமைப்பு பல தடவைகள் போர் நிறுத்தத்தை அறிவித்து அதனை உருப்படியாக அமுல் செய்யவில்லை.

அரசியல் பேச்சுக்களையும் சரிவர மேற்கொள்ளவில்லை என்பதே பிரிட்டிஷார் பலரின் குற்றச்சாட்டாகும்.

ஆனால் எவ்விதத்திலும் ஒரு போர் நிறுத்தமின்றி ஐ.ஆர்.ஏ. அமைப்பு எந்தவொரு பேச்சுக்களுக்கும் உடன்படப்போவதில்லை என்பது தெளிவு. இதன் காரணமாகவே பிரிட்டிஷ் அரசு எது எப்படியிருந்தபோதிலும் ஐ.ஆர்.ஏ. அமைப்பின் அறிவிப்பை சாதகமாகவே பரிசீலிக்கின்றது.

சட்டத்துறையில் புலமையும், பாண்டித்தியமும் பெற்றுள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் தமது திறமைகளை வெளியிட இலங்கை இனப்பிரச்சினையை ஒரு நல்ல வாய்ப்பாகவே கொள்ளவேண்டும்.

எல்லோரும் கையாண்டு களைத்துப்போயுள்ள இராணுவ அணுகுமுறைகளை உதறித்தள்ளிப் புதிய அரசியல் சிந்தனைகளுக்கு அவர்கள் வழியமைக்கவேண்டும். ■

---

# அமெரிக்காவின் அறிக்கைளும் ஆயுதங்களும்

வெளியுலகில் இருந்து பொருளாதார ரீதியாகவும் இராணுவரீதியாகவும் மட்டும் மல்லாமல் பிரசாரரீதியாகவும் ஆதரவைப் பெறத் தொடங்கியுள்ளது இலங்கை அரசு.

பிரிட்டிஷ் முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஸியாம் பொக்ஸ் மூலமாக பிரசார ஆதரவு பெறும் முயற்சி தொடங்கியது.

பிரிட்டிஷ் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி தோல்வியடைந்தமையானது இலங்கை அரசுக்கு லேசான வருத்தம்தான்.

புதிய பிரிட்டிஷ் அரசு முன்னைய பிரிட்டிஷ் அரசுபோல இன்னமும் இலங்கை அரசுடன் நெருக்கமாகவில்லை.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரிட்டனுக்கு விஜயம் செய்தபோது பிரிட்டிஷ் பிரதமரையோ வெளிநாட்டமைச்சரையோ சந்திக்க இயலவில்லை.

பிரிட்டன் மூலமாக இலங்கை அரசு பெறவிரும்பிய பிரசார உதவி எத்தகையது? என்ன நோக்கம் கொண்டது?

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நேரடியாக மறுத்துப் பேசவும் கூடாது, அப்படியான மத்தியஸ்தம் ஏற்பட விட்டுவிடவும் கூடாது என்பதுதான் இலங்கை அரசின் உபாயம்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கையை வலுவில்லாமல் செய்ய இரண்டு தந்திரங்களை அரசு நம்பியிருக்கிறது.

ஒன்று; இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு நெருங்கிக்கொண்டிருப்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவது.

இரண்டு; வெளியுலகில் தனக்கு நெருக்கமான நாடுகள் மூலமாக முன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையில்லை என்றும், இங்கேயே பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்றும் வெளியுலகுக்கு சொல்லவைப்பது.

இந்த இரண்டாவது தந்திரத்தில் மற்றொரு அம்சமும் உள்ளடக்கமாக உள்ளது. அது யாதெனில், நெருக்கமான வெளிநாடுகளின் அமைச்சர்களை அழைத்து, பிரச்சனையை தீர்க்க அவர்கள் ஆர்வம் காட்டிக் கொண்டிருப்பதுபோல ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவது.

இப்படிச் செய்வதால் அரசுக்கு சில சாதகங்கள் உள்ளன.

இன்னொரு நாடு இலங்கைப் பிரச்சனையில் ஆர்வம் காட்டிக் கொண்டிருக்கிறது என்பது தெரிந்தால் வேறெந்த நாடும் மத்தியஸ்த கோரிக்கையை பரிசீலிக்காது.

இலங்கை அரசு இனப்பிரச்சனை தீர்வுக்கு வெளியுலக உதவியைப் பெறுவதற்கு தயங்குகிறது என்ற அபிப்பிராயமும் ஏற்படாமல் போய்விடும்.

இத்தகைய கச்சிதமான தந்திரத்தோடுதான் பொக்ஸ் அழைத்துவரப்பட்டார். பிரிட்டிஷ் தேர்தலின்பின்னர் பொக்ஸின் பதவி காலியானது.

புதிய பிரிட்டிஷ் அரசாங்கத்தை வைத்து இராஜதந்திர நாடகத்தை தொடர்வதில் இலங்கை அரசுக்கும் விருப்பம்தான். அதனால்தான் வெளிநாட்டைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் பிரிட்டனுக்கு சென்றிருந்தார்.

ஆனால் புதிய அரசாங்கம் அத்தனை ஆர்வம் காட்டவில்லையென்றே தெரிகிறது. இதன் பின்னர்தான் அவுஸ்திரேலிய அரசின் பக்கம் கவனம் திரும்பியது.

அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சரும் இங்கு வந்து அரசுக்கு அனுசரணையாகப் பேசிவிட்டுத் திரும்பிப்போயிருக்கிறார்.

அதன்பின்னர் அமெரிக்க அரசும் புலிகளைக் கண்டித்து, போக்குவரத்துக் கப்பல்களை தாக்க வேண்டாம் என்று அறிக்கை விட்டிருந்தது.

பொதுமக்களின் போக்குவரத்துக் கப்பல்களை புலிகள் தடுப்பது சரியான நடவடிக்கையல்ல. முன்னர் ஐரிஸ் மோனாக் கப்பலையும் புலிகள் கடத்திச் சென்றனர். அந்தக் கப்பலை பொறியாக வைத்து கடற்படையினர்மீதும் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

ஆனால், அமெரிக்க அரசின் கண்டனம் மனிதாபிமான ரீதியில் அமைந்த கண்டனமா, அல்லது மனிதாபிமான நாடகமா என்பதே கவனிக்கப்படவேண்டியதாகும்.

இன்றைய யுத்தத்தில் அமெரிக்க அரசு இலங்கை அரசிற்கு உதவி வருகிறது. அரச படையினருக்கு இங்கு வைத்தே அமெரிக்க கொமாண்டோக்களால் பயிற்சிகள் கொடுக்கப் பட்டன.

பயிற்சியும் கொடுத்துவிட்டு, இது போருக்கான பயிற்சியல்ல என்று அப்பட்டமான ஏமாற்று அறிக்கையும் விட்டிருந்தது அமெரிக்கா.

அமெரிக்காவில் வைத்தும் இலங்கைப் படையினருக்கு சமீபகாலங்களில் விசேஷ பயிற்சிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

வன்னியில் 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையில் ஈடுபடும் 53வது படைப்பிரிவுக்கு இணை அதிகாரியாக பிரிகேடியர் காமினி குணசேகரா நியமிக்கப்பட்டுள்ளார். சமீபத்தில்தான் இந்த நியமனம் நடந்தது. பிரிகேடியர் காமினி குணசேகரா அமெரிக்காவில் பயிற்சியை முடித்துவிட்டு அண்மையில்தான் நாடு திரும்பியிருந்தார்.

அமெரிக்காவில் வைத்து இலங்கைப் படை அதிகாரிகளுக்கு கொடுக்கப்படும் பயிற்சியும் போருக்கல்ல என்று அமெரிக்கா அறிக்கை விட்டாலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

அணுக்குண்டுகளை தயாரித்து வரிசையாக அடுக்கிவைத்துக்கொண்டு, இந்தியா அணுக்குண்டு தயாரிக்கக்கூடாது. அது அமைதிக்கு கேடாகலாம் என்று போதிக்கும் நாடும் அமெரிக்காதான்.

அமெரிக்கா உட்பட மேலைத்தேச நாடுகள் தேசிய விடுதலைப் போராட்டங்கள், மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுக்கு எதிராகவே எப்போதும் பேசி வந்துள்ளன. அவற்றை அடக்கவும் உதவிகளை செய்வதற்கு பின்நிற்பதில்லை.

பாலஸ்தீன போராட்டத்தை நசுக்கப் பார்த்ததும் அமெரிக்காதான். இஸ்ரேலை சீராட்டி வளர்த்துவிட்டதும் அமெரிக்காதான். பின்னர் தன்னை சமாதானக் காவலனாக காட்டி பாலஸ்தீன, இஸ்ரேல் பேச்சுக்கு அமெரிக்கா மத்தியஸ்தம் செய்தது.

இப்போது ஒப்பந்த விதிகளை இஸ்ரேல் காற்றில் பறக்கவிடுகிறது. திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்கின்றன. பாலஸ்தீனப் பிரச்சனை தீர்ந்துவிட்டது என்று கூறப்படுவதெல்லாம் உண்மையல்ல. நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டிருக்கிறது. யாசிர் அரபாத்கூட தான் தவறு செய்துவிட்டேனோ என்று கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறார்.

அமெரிக்கா நினைத்தால் இஸ்ரேலை கட்டுப்படுத்தி வைக்கலாம். அமெரிக்காவோ பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவித்துக் கொண்டிருக்கிறது.

இலங்கைப் பிரச்சனையிலும் மனித உரிமைகளுக்காக கண்ணீர் விடுவது போலவும் இடைக்கிடையே அமெரிக்கா அறிக்கைகள் விடும். இலங்கை அரசையும் கண்டிப்பதுபோல கண்டிக்கும். அப்படியானால்தானே சகல மக்களிடமும் 'நல்ல பொலிஸ்காரன்' என்ற பெயரெடுக்கலாம். மறுபுறத்தில் உயிரழிவுகளுக்கு காரணமான யுத்த நடவடிக்கைகளுக்கு பயிற்சியும் கொடுக்கும், யோசனையும் சொல்லும்.

மனிதாபிமான நாடகத்துக்காக அறிக்கைகள், மனிதத்தை அழிக்கும் போருக்கு ஆயுதங்கள். அமெரிக்காவின் சர்வதேசக் கொள்கை அதுதான்.

இந்தியா தனக்குச் சவாலான வல்லரசாக மாறிவிடக்கூடாது என்று அமெரிக்கா விரும்புகிறது. அதனால் இந்தியாவுக்கு அருகிலுள்ள நாடுகளை தன் கைக்குள் போட்டுவைத்திருக்க நினைக்கிறது அமெரிக்கா. இலங்கை அரசுடனும் நட்பை வைத்துக்கொண்டிருக்கவே அமெரிக்கா விரும்புகிறது. அதற்காகவே ஆயுதப் பயிற்சிகள், ஆலோசனைகள், சமயத்தில் சில அறிக்கைகள்.

இன்று நேற்றல்ல, சகல இயக்கங்களும் இணைந்து போராடிய காலத்திலும் அதனைப் 'பயங்கர வாதம்' என்றே அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் முத்திரை குத்தின என்பதை அத்தனை சுலபத்தில் மறக்க முடியுமா? ■



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி

பாகம் 02

56

தருவது ரசிகன்

பூலானைக் காணும்போதெல்லாம் குசுமாவின் பார்வையில் குரோதம் தெரிந்தது. மல்லாவுடன் பேசுவதையும் குசுமா நிறுத்திவிட்டாள்.

குசுமா தன்னை நாடி வந்ததையோ, தான் அவளை அறைந்ததையோ மல்லா பூலானிடம் சொல்லவில்லை. பூலானும் தெரிந்ததுமாதிரிக் காட்டிக்கொள்ளாமல் இருந்துவிட்டாள்.

ஸ்ரீராமுடன்தான் குசுமா குழைந்து குழைந்து பேசினாள். ஸ்ரீராமும் அவளைக் கண்டால் அசடு வழிவதைப் பார்க்க பூலானுக்கு சிரிப்பாக இருந்தது.

ஸ்ரீராம் இப்போதெல்லம் பூலானை முன்புபோல ஏக்கத்துடன் பார்ப்பதில்லை. குசுமா அவனை முழுவதுமாக ஆக்கிரமித்திருந்தாள்.

ஸ்ரீராமின் சகோதரன் லாலா ராமுக்கு மட்டும் பூலான்மீதான மோகம் தீரவில்லை. சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து பூலானுக்காக அவன் காத்திருந்தான்:

குசுமாவுடன் உதவியாக வந்த அவளது உறவினரான உஜாகர் என்பவனுக்கும் குசுமாவுக்கும் இடையே இரகசியத் தொடர்பு இருந்தது.

ஸ்ரீராமும், லாலா ராமும் அன்றிரவு பக்கத்து கிராமத்துக்குச் சென்றிருந்தனர். ஸ்ரீராம் இருந்தவரைக்கும் உஜாகர் குசுமாவின் பக்கமே செல்வதில்லை.

ஸ்ரீராம் வெளியே போய்விட்டான் என்று தெரிந்ததும் உஜாகர் குசுமாவைத் தேடிப்போனான்.

"என்னை மறந்துவிட்டாயா குசுமா? எப்போது பார்த்தாலும் அவன் பின்னாலேயே சுற்றிவருகிறாயே?" என்று கவலை தோய்ந்த குரலில் கேட்டான்.

அவனைப் பார்க்க குசுமாவுக்கு இரக்கமாக இருந்தது. மல்லாவை பழிவாங்கத்தான் குசுமா ஸ்ரீராமின் உதவியை நாடினாளேதவிர, அவன்மீது ஆசையெல்லாம் கிடையாது.

மல்லாவை பழிவாங்கிய பின்னர் ஸ்ரீராமிடம் இருந்து தப்பிச் செல்லவே குசுமா நினைத்திருந்தாள். அதற்கு உஜாகரின் உதவியைத்தான் அவள் நம்பியிருந்தாள்.

"அவன் ஒரு அரைக்கிழம். அவனுக்காக உன்னை விடுவேனா?" என்றாள் குசுமா.

"அப்படியானால் அவன் பின்னால் எதற்கு அலைகிறாய்?"

"ஒரு திட்டத்தோடுதான். உஜாகர் உனக்கு நிறையப் பணமும், நகைகளும் கிடைத்தால் என்ன செய்வாய்?"

உஜாகர் விழிகளை அகலவிரித்தான்.

"கிடைத்தால் நீயும் நானும் சந்தோசமாக இருக்கலாம். நான் ராஜா. நீ ராணி. இருவரும் ஆசைதீர அனுபவிக்கலாம். ஆனால்... பணம்... அதற்கு எங்கே போவது?"

"நான் தருகிறேன்.. என்ன அப்படிப் பார்க்கிறாய்? ஸ்ரீராம் ஒரு புதையல் மாதிரி கொள்ளையடித்த பணத்தையும், நகைகளையும் ஓரிடத்தில் புதைத்து வைத்திருக்கிறான்," என்றாள் குசுமா.

உஜாகர் முற்றிலும் நம்பிவிட்டான். அவன் கண்களில் பேராசை வழிந்தது.

"உண்மையாகவா, என் ராசாத்தி?" என்று கேட்டுக்கொண்டே குசுமாவைக் கட்டியணைத்தான்.

குசுமா அவனை அனுமதித்தாள். உஜாகர் ஆவேசம் வந்தவன்போல அவள் கன்னங்களில் முத்தமிட்டான். குசுமா அவன் மார்பையும், வயிற்றையும் இதமாக வருடிவிட்டாள்.

"என்னை ஏமாற்றமாட்டேயே?" என்றான் உஜாகர்.

"இல்லை!"

"ஏனடி..?" என்றான். அவள் உடலெங்கும் பரபரப்பாக, பதட்டமாக அவன் கைகள் அலைந்தன.

"என்ன தேடுகிறாய்?" என்றாள் கிறக்கமான சிரிப்புடன் குசுமா. அந்தச் சிரிப்பும், அவள் கேட்ட தொனியும் உஜாகரை சீண்டின. அவன் உணர்ச்சிகளை கிளறி வேடிக்கை பார்த்தாள்.

மல்லா இரவுக் காவலை சரிபார்க்க சுற்றிவந்தான். சர்ப்பங்கள் மூச்சுவிடுவது போல சத்தம் கேட்க, கூர்ந்து கவனித்தான்.

ஸ்ரீராமின் கட்டிலில் உஜாகரும், குசுமாவும் கிடந்த கோலத்தைக் கண்டதும் மல்லா அதிர்ந்து போனான்.

அவர்கள் மல்லாவைக் காணவில்லை. தங்கள் காரியத்தில் தீவிரமாக இருந்தனர். சர்ப்பங்கள் பிணைந்து கிடப்பதுபோல அக்காட்சி மல்லாவுக்குத் தோன்றியது. அவர்கள் விடும் மூச்சும், இடைக்கிடையே நகைப்பும் மல்லாவுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

மல்லாவுக்குள் கோபம் எகிறியது. குசுமா இத்தனைதூரம் வேட்கை கொண்டு அலைவாள் என்று அவன் நினைத்ததில்லை.

தன்னை நாடிவந்து அவள் தழுவிய போது கன்னத்தில் அறைந்ததற்காக மல்லா பின்னர் வருத்தப்பட்டிருக்கிறான். பக்குவமாகப் புத்தி சொல்லி அனுப்பியிருக்கலாம் என்று நினைத்திருக்கிறான்.

இப்போது அவனுக்கு தனது செயலுக்காக வருத்தமில்லை. மல்லா நினைத்திருந்தால் அவர்கள் இருவரையும் அப்படியே வைத்து சுட்டுப்போட்டிருக்கலாம். மாதுசிங்கின் காதலி என்பதற்காகவே அப்போதும் குசுமாவை ஏதும் செய்யாமல் விட்டான் மல்லா.

மறுநாள் காலையில் ஸ்ரீராம் திரும்பி வந்துவிட்டான். அவன் வநததும் குசுமா அவனோடு ஒட்டித்திரிந்ததைப் பார்க்க மல்லாவுக்கு பொறுக்கமுடியாமல் இருந்தது.

"குசுமாவின் போக்கே சரியில்லை," என்று பூலானிடம் சொல்லி வருத்தப்பட்டான் மல்லா. பூலான் எதுவும் பேசாதிருந்தாள்.

மல்லாவுக்கு ஸ்ரீராமின் போக்கும் பிடிக்கவில்லை. அவனுக்கு எல்லாமே வெறுப்பாக இருந்தது. பூலான் மட்டும் இல்லையானால் கொள்ளைக் கோஷ்டியினரை விட்டு விலகியே போயிருப்பான் மல்லா.

பூலானின் பழிவாங்கும் படலம் முடியும்வரையாவது இந்த வாழ்க்கையைத் தொடர வேண்டும் என்று பொறுத்துக் கொண்டான்.

"பாபாவோடு போய்ச் சேர்ந்துவிடலாம்," என்று



பூலான் மறுபடியும் மல்லாவிடம் சொன்னாள். மல்லாவுக்கும் அதுதான் சரியென்று பட்டது.

மல்லாவின் கெட்ட நேரம்; அப்போது மழைக்காலம் தொடங்கிவிட்டது. பாபாவிடம் செல்ல வேண்டுமானால் ஆற்றைக் கடந்துதான் போகவேண்டும்.

ஆற்றில் வெள்ளம் புரண்டோடியது. மழை சற்று ஓய்ந்து, வெள்ளம் குறைந்த பின்னர்தான் கடந்து செல்ல முடியும்.

பாபாவிடம் செல்வதற்கு மல்லா சம்மதித்ததே பூலானுக்கு நிம்மதியாக இருந்தது. மழையை நினைத்தால்தான் வெறுப்பாக இருந்தது. எப்போது தொலையும் என்று காத்திருந்தாள் பூலான்.

அவளுடைய நினைப்பையெல்லாம் கெடுக்கும் சதித்திட்டத்தை ஸ்ரீராம் தீட்டிமுடித்துவிட்டான் என்பதை பூலான் அறியவில்லை.

சில நாட்களாக மல்லாவுடன் வாஞ்சையுடன் பழக ஆரம்பித்தான் ஸ்ரீராம். "பாம்பு காலைச் சுற்றுகிறது. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!" என்றாள் பூலான். மல்லா அவள் சொன்னதைக் கேட்டு சத்தம் போட்டுச் சிரித்தான்.

தனது சதித் திட்டத்தின் இறுதிக் கட்டத்தை நிறைவேற்ற தயாரானான் ஸ்ரீராம்.

"மல்லா! உன் கிராமத்துக்குச் சென்று நீண்டநாளாகிறது. மழைக்காலத்தில் இங்கிருந்தும் என்ன செய்யப்போகிறோம்; சென்று வரலாமே?" என்றான் ஸ்ரீராம்.

மல்லாவுக்கும் ஓய்வு வேண்டியிருந்தது; ஒரு மாற்றம் தேவையாக இருந்தது. பூலானுக்கும் மல்லாவின் வீட்டாரைப் பார்க்க ஆசையாக இருந்தது. அந்த ஆசை ஸ்ரீராமின் நோக்கத்தை சந்தேகத்தோடு பார்க்காமல் தடுத்துவிட்டது.

ஸ்ரீராம் என்ன சொன்னாலும், அவன், என்ன செய்தாலும் சந்தேகக் கண்ணோடு பார்க்கும் பூலான், மல்லாவின் கிராமத்திற்கு செல்ல வேண்டும் என்று ஸ்ரீராம் சொன்னதும், 'இந்தப் பாவிக்கும் எப்போதாவது நல்ல யோசனைகளும் உதிக்கின்றனவே!' என்றுதான் ஆச்சரியப்பட்டாள்.

எல்லோரும் மல்லாவின் கிராமத்திற்கு புறப்பட்டார்கள். புறப்படும்போது பூலானின் கால்கள் ஒரு மரக்குற்றியில் தடுக்கின. அப்படியே கவிழ்ந்து விழப்போகும்போது யாரோ தாங்கிப் பிடித்தார்கள்.

தன்னைத் தாங்கியது யாரென்று பார்த்தாள் பூலான். லாலா ராம் பல்லைக் காட்டிக் கொண்டு நின்றான். தாங்கிப்பிடித்தபோது அவன் கையொன்று அவள் மார்பில் அழுத்தியது. உதவியவனை எப்படி உதைப்பது என்று நினைத்து, முறைப்பான பார்வையுடன் நிறுத்திக் கொண்டாள்.

பூலானுக்கு சகுனங்களில் நம்பிக்கை இருக்கிறது. புறப்படும்போது கால் தடுக்கியதை நினைத்து பயந்தபடிதான் சென்றாள் பூலான். வழிநெடுகவும் அவள் துர்க்கையம்மனை நினைத்து பிரார்த்தித்துக் கொண்டே சென்றாள்.

மல்லாவின் கிராமத்தில் முதலில் அவர்களைக் கண்டதும் பயந்துபோனார்கள். கூட்டமாக அவர்கள் சென்றதால் கொள்ளையடிக்கத்தான் வருகிறார்களோ என்று பயந்துவிட்டனர்.

மல்லா அவர்களில் சிலரைப் பெயர் சொல்லி அழைத்தான். மல்லாவை அடையாளம் தெரிந்த பின்னர்தான் கிராமத்தவர்களின்

> **கடந்த வாரம்**
>
> மாதுசிங் இறந்தபின்னர்
> அவன் காதலி குசுமாவை
> தமது கூட்டத்தோடு சேர்க்கிறான்
> விக்கிரம் மல்லா.
> குசுமா மல்லாமீது சபலப்பட
> மல்லா அவளை அறைகிறான்.
> ஸ்ரீராமுடன் சேர்ந்து
> மல்லாவைத் தீர்த்துக்கட்ட
> திட்டமிடுகிறாள் குசுமா
>
> இனி....

பயம் விலகியது. நெருங்கி வந்து சகஜமாகப் பேசினார்கள். அது ஒரு மீனவ கிராமம். மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது.

மல்லா தன் வீட்டாரிடம் பூலானை தன் மனைவி என்று அறிமுகம் செய்துவைத்தான். மல்லாவின் வயதான பெற்றோரைப் பார்க்க பூலானுக்கு பரிதாபமாக இருந்தது.

அங்கேயே இருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டிருக்கலாம் என்று ஆசையாக இருந்தது. சீருடையுடன், துப்பாக்கியுடன் நிற்கும் தங்கள் மருமகளைப் பார்க்க அந்த வயதான பெற்றோருக்கு ஆச்சரியமாக இருந்தது.

பூலானும், மல்லாவும் அவர்கள் காலில் விழுந்து ஆசிபெற்றார்கள். ஸ்ரீராமின் அருகே நின்று பார்த்துக் கொண்டிருந்த குசுமாவின் நெஞ்சில் குரோதம் கொப்பளித்தது.

கிராமத்தைவிட்டுப் பிரியும்போது மல்லாவின் கண்கள் பனித்திருந்ததை பூலான் கவனித்தாள். மல்லாவின் வயதான அம்மாவும், அப்பாவும் மல்லாவை கட்டிப் பிடித்து விம்மினார்கள். மல்லாவின் தலையில் முத்தமிட்டு விடைகொடுத்தார்கள்.

"இனி எப்போதப்பா வருவாய்?" என்றாள் மல்லாவின் அம்மா. இனி எப்போதுமே தன் மகனைப் பார்க்கப்போவதில்லை என்பது தெரியாமலேயே, மறுபடிப் பார்க்கும் ஆசையோடு விடை கொடுத்தாள் அம்மா.

கிராம எல்லையில் வைத்து கிராமத்தவர்களுக்கு சொல்லிக்கொண்டு விடைபெற்ற போது, யாரோ தும்மினார்கள். பூலானுக்கு நெஞ்சுக்குள் 'திக்' என்றது.

மல்லாவை அவசரமாக நெருங்கிய பூலான், "சற்றுத் தாமதித்துப் புறப்படலாம்," என்று அதற்கான காரணத்தைச் சொல்ல, மல்லா நகைத்தான்.

"இதற்கெல்லாம் பயந்தால் நாங்கள் புறப்பட்டமாதிரித்தான். உனக்கு சகுனப் பைத்தியம்," என்றுவிட்டு புறப்பட்டான் மல்லா.

பூலானுக்கு மல்லாவின் அலட்சியம் கவலையளித்தது. சகுனம் தப்பாது என்று அவள் உள்மனம் எச்சரித்துக் கொண்டு இருந்தது.

ஸ்ரீராம்மீது ஒரு கண்வைத்திருக்க வேண்டும். ஆபத்து வருவதென்றால் அவன் மூலமாகத்தான் வரவேண்டும், என்று நினைத்தாள் பூலான். மல்லாவின் அருகிலேயே பூலான் நிழல்போலச் சென்றாள்.

நீண்டதூரம் நடந்ததால் எல்லோரும் களைத்துப் போயிருந்தனர். அதிகாலையாகி விட்டது. இரவு முழுக்க தூக்கமின்றி நடந்து வந்ததால் ஓய்வெடுத்துவிட்டு செல்லலாம் என்றான் ஸ்ரீராம்.

காவலுக்கு நிற்போர் தவிர ஏனையோர் விழுந்து படுத்துவிட்டனர். அது ஒரு காடு சார்ந்த பிரதேசமாக இருந்தது. வேறு ஆட்கள் நடமாட்டமே இல்லாதிருந்தது.

ஸ்ரீராம் மல்லாவிடம் வந்தான். "நீயும் பூலானும் சென்று படுத்துக்கொள்ளுங்கள். நீ மிகக் களைப்படைந்திருக்கிறாய்," என்றான்.

மல்லாவும், பூலானும் தனியாகச் சென்று படுத்துக்கொண்டனர்.

படுக்க முன்னர் பூலானின் முகத்தை உற்றுநோக்கினான் மல்லா. மெல்ல நெருங்கி அவள் உதட்டில் மென்மையாக முத்தமிட்டான். "வேண்டாம்!" என்று தடுத்தாள். "கடைசியாக ஒன்றுமட்டும்," என்றான். மீண்டும் முத்தமிட்டுவிட்டு அப்படியே சரிந்து படுத்துவிட்டான்.

மல்லாவின் துப்பாக்கியையும், தனது துப்பாக்கியையும் தலைமாட்டில் வைத்துவிட்டு படுத்தாள் பூலான்.

பூலானின் உள் மனம் 'தூங்காதே' என்று எச்சரித்தது. பூலானும் தூங்கக்கூடாது என்று தீர்மானத்தோடு தான் சரிந்து படுத்தாள்.

பூலானின் உள்மன எச்சரிக்கையை உடல் அசதி புறக்கணித்தது.

தன்னையறியாமலேயே அவள் ஆழ்ந்த உறக்கத்திற்குள் சென்றுகொண்டிருந்த போது.

அருகே- மிக அருகே- பயங்கரமான வெடிச்சத்தம் கேட்டது.

(தொடர்ந்து வரும்)

## வரவேற்பும் வரம்புமீறலும்

அண்மையில் இளவரசி டயானா நியூயோர்க் சென்றிருந்தார். அவரைப் பார்ப்பதற்கு அங்கு திரளான மக்கள் கூடினார்கள்.



அந்நகரிலுள்ள கிறிஸ்டி ஏல விற்பனை நிலையத்தில் இளவரசி டயானாவின் 79 ஆடைகள் ஏலத்துக்கு விடப்படும் நிகழ்ச்சி நடந்தது அதில் பங்கேற்கவே அங்கு சென்றார். நற்பணிகளுக்காக நிதி திரட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியில் எப்படியும் 50 இலட்சம் டொலர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. (கிட்டத்தட்ட 30 கோடி) 24 இலட்சம் டொலர் தான் கிடைத்தது.

இந்த வீழ்ச்சிக்குக் காரணம் நிகழ்ச்சியில் இடம்பெற்ற தரக்குறைவான சம்பவம் தான் என்று சிலர் விமர்சித்தார்கள். ஏலத்தோடு ஒரு சிறு விருந்தும் ஏற்பாடாகியிருந்தது.

டயானா தனது வண்டியில் வந்து இறங்கியதும், விருந்து உபசாரமளித்த கிறிஸ்டி ஏல விற்பனை நிலைய உரிமையாளரின் நண்பரான ஹிண்ட்லிப் பிரபு கைலாகு கொடுத்து டயானாவை வரவேற்று அழைத்துச் சென்றார்.

ஆனால் அவருடைய வலதுகரம் டயானாவின் பின்புறம் வரம்பு மீறிச் சென்றமையினால் டயானாவால் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. பல்லாயிரக் கணக்கானோர் பார்த்திருக்கும்போது அத்தனை அநாகரீகமாக அந்தப் பிரபு நடந்து கொண்ட விதம் இளவரசியின் பொறுமையைச் சோதித்தபோதும் அவர் எதையும் வெளிக்காட்டாமல் சமாளித்துக் கொண்டார்.

தனது பதற்ற நிலையைத் தவிர்க்க- பொதுவாகப் பொது நிகழ்ச்சிகளில் மது அருந்தாத டயானா, மளமளவென்று ஒன்றன்பின் ஒன்றாக சம்பெயின் பானக் கோப்பைகளைக் காலி செய்தார்.

எதுவுமே நடக்காததுபோல் இளவரசி நடந்து கொண்ட போதிலும் ஹிண்ட்லிப் பிரபுவை அணுக விடாமல் விலத்தியே நடந்து கொண்டார்.

பார்த்துக்கொண்டிருந்த பலர், "இளவரசி அவன் கன்னத்தில் அறைந்திருக்க வேண்டும்!" என்று அபிப்பிராயம் தெரிவித்தனர். எத்தனை பெரிய மனிதருக்கு எத்தனை சிறிய குணம்? எல்லாம் சபலக் குணம்தான்.

## கும்ளேயின் காதலி

இந்திய கிரிக்கெட் அணிவீரர் கும்ளே தமிழ்நாட்டுடன் சம்பந்தியாகப்போகிறார். தமிழகப் பத்திரிகைகளில் கடந்த வாரம் பரபரப்பு செய்தி இதுதான்.

மணமகள் பெயர் மேனகா. தமிழ்நாட்டில் ஒரு தனியார் நிறுவனத்தில் கம்பியூட்டர் கல்வி பயின்று வருகிறார்.

இந்த காதல் விவகாரம் குறித்து கும்ளே தரப்பில் எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் மேனகா சஞ்சிகை ஒன்றுக்கு துணிந்து பேட்டியே கொடுத்திருக்கிறார். அதுமட்டுமல்ல, ஒரு நடிகையின் மிரட்டலுக்



கும் உள்ளாகியுள்ளார் மேனகா.

கும்ளேயுடன் காதல் என்று கிசுகிசுக்கப்பட்டவர் அந்த நடிகை. அப்படி ஒன்றும் கிடையாது என்று மறுத்துப் பேட்டியும் கொடுத்தார். மேனகாவை மட்டும் போனில் மிரட்டியிருக்கிறார்.

"கும்ளேயை நான் திருமணம் செய்ய ஆசைப்படுகிறேன். நீ எப்படி இடையே வரலாம். கும்ளே எனக்குத்தான்" என்று சவால்விட்டாராம் நடிகை.

சரி, கும்ளே, மேனகா காதல் மலர்ந்தது எப்படி? அதை மேனகாவே சொல்கிறார்.

மேனாகாவுக்கு கிரிக்கெட் என்றால் கொள்ளை ஆசை. 1996ம் ஆண்டு சென்னை சிதம்பரம் விளையாட்டரங்கில் கும்ளேயைச் சந்தித்தாராம் மேனகா. 'ரஞ்சி' கோப்பைப் போட்டிக்காக கர்நாடக அணிக் கப்டனாகச் சென்ற கும்ளேயை விளையாட்டரங்கில் சந்தித்துப் பேசும் அரிய வாய்ப்புக் கிடைத்ததாம்.

கண்டதும் காதல் போல இருவரும் பேசியபோது காதல் மலர்ந்தது. கும்ளேயின் காதல் வீச்சில் இதயத்தை பறிகொடுத்துவிட்டு வீடு திரும்பினார் மேனகா.

பின்னர் சென்னை தாஜ் ஹோட்டலில் கும்ளேயைச் சந்தித்தாராம். அப்படியே காதல் கடுகதி வேகத்தில் வளரத் தொடங்கிவிட்டதாம்.

கடைசியாக சுதந்திரக் கோப்பை போட்டியில் விளையாட கும்ளே தமிழ்நாடு சென்றபோது கும்ளேயைச் சந்தித்தாராம் மேனகா.

திருமணப் பேச்சை எடுத்தாராம் கும்ளே. கும்ளேக்கு 26 வயது. மேனகாவுக்கு இன்னமும் 18 வயதாகவில்லை. அதனால் 'இன்னும் இரண்டு வருடம் போகட்டும்" என்று சொல்லியிருக்கிறாராம் மேனகா.

இதற்கிடையே குறிப்பிட்ட நடிகை கும்ளேயை போனில் தொடர்புகொண்டு தன் விருப்பத்தை சொல்லியிருக்கிறார். "எனக்கு சென்னையில் காதலி இருக்கிறாள்" என்று கும்ளே சொல்லியிருக்கிறார். அதுதான் மேனாகவுடன் மோதினாராம் நடிகை.

கும்ளே-மேனகா காதல் விவகாரம் மேனகா வீட்டில் தெரியும். கும்ளே வீட்டில் இன்னமும் தெரியாதாம். இனித் தெரியலாம்.

கும்ளே விசுவாமித்திரரும் அல்ல, மேனகாவும் அந்தக்கால மேனகையுமல்ல. இது நட்சத்திரக் காதல்.

## கணவன் 29 திருமணம் மனைவி 23 திருமணம்

உலகிலேயே ஆக அதிகமான முறை திருமணம் செய்தவர் என்ற சாதனை படைத்த கிலின் ஊல்ஃப், ஜூன் 10ம் தேதி கலிஃபோர்னியாவில் காலமானார். அவருக்கு வயது 88.

ஊல்ஃப் மொத்தம் 29 திருமணங்கள் செய்திருக்கிறார். ஆக அதிகமான திருமணங்கள் செய்தவர் என இவரது பெயர் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெறுகிறது. இவர் இதய நோயால் பராமரிப்பு இல்லத்தில் காலமானார்.

இவரது 29வது மனைவி திருமதி ஊல்ஃப், கணவரின் சடலத்தை இன்னமும் பெற்றுக் கொள்ளவில்லை என்று மரண விசாரணை அதிகாரியின் பேச்சாளர் தெரிவித்தார். ஊல்ஃபின் சடலத்தை அவரது குடும்பத்தினர் ஏற்க விரும்பவில்லை என 29வது மனைவி திருமதி லிண்டா ஊல்ஃப் கூறினார். இதனால் சடலத்தை ஏற்றுக்கொள்ளும்படி மாவட்ட அலுவலகத்திடம் திருமதி ஊல்ஃப் கூறிவிட்டார்.

சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்ற ஊல்ஃப்பின் சடலம் எரியூட்டப்பட்டு அவரது அஸ்தி பாதுகாத்து வைக்கப்படும். ஊல்ஃப் கடந்த ஆண்டு ஜூன் 20ம் தேதி தனது 29வது மனைவியை திருமணம் செய்துகொண்டார். திருமணமாகி ஓராண்டு நிறைவைக் கொண்டாடு



வதற்கு பத்து நாட்களுக்கு முன்பு ஊல்ஃப் இறந்துவிட்டார். ஊல்ஃப் தனது 29வது மனைவியுடன் சேர்ந்து வாழவே இல்லை. அவர்கள் ஓராண்டு திருமண நிறைவு நாளன்று ஒன்று சேரலாம் என திட்டமிட்டிருந்தனர்.


ஊல்ஃபின் 29வது மனைவியும் கணவரைப் போலவே சாதனை செய்திருக்கிறார். உலகிலேயே ஆக அதிகமான முறை திருமணம் செய்த பெண் என்பது இவர் செய்த சாதனை. இவர் 23 முறை திருமணம் செய்துவிட்டார். ஊல்ஃப் இவரது 23வது கணவர்.

காலமான ஊல்ஃபுக்கு 19 பிள்ளைகள், 40 பேரப்பிள்ளைகள், 19 கொள்ளு பேரப்பிள்ளைகள் இருக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



## தமிழகத்தில் செங்கோட்டை

தமிழக முதல்வரின் அபாரமான யோசனை மின் பயனாக இந்தியத் தலைநகரான டில்லியில் உள்ள செங்கோட்டையை தமிழகத்தின் தலை நகரான சென்னைக்கே கொண்டுவந்து விட்டனர். அதாகப்பட்டது; டில்லி செங்கோட்டையைப் போன்ற பிரமாண்டமான கட்-அவுட்டை சென்னை மெரினா கடற்கரையில் பெரும் செலவில் நிர்மாணித் திருக்கிறார்கள். பார்த்ததும் செங்கோட்டையை நேரில் பார்ப்பதுபோல இருக்கிறதாம். இங்கே படத்தில் இருப்பதும் அந்த கட்-அவுட் செங்கோட்டை தான்.

இந்த கட்-அவுட் செங்கோட்டையின் நீளம் 300 அடி. அகலம் 30 அடி. செங்கோட்டை வாயில் முன்பாக 60 அடிநீளமும், 40 அடி அகலமும் உள்ள ஒரு மேடையும் அமைக்கப்பட்டுள்ளது. தமிழர் ஒருவர் இந்தியாவின் பிரதமராக வரவிருந்த சந்தர்ப்பம் தவறிப்போனது. அந்தச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் டில்லி செங்கோட்டையில் ஒரு தமிழரே பிரதமராக நின்று இந்தியத் தேசியக் கொடியை ஏற்றி வைத்திருப்பார். அக் கனவு கைப்படாத குறையைப் போக்கத்தான் செங் கோட்டையையே தமிழகத் தலைநகரில் நிர்மாணித்திருக்கிறாரோ கலைஞர்?!

இந்த மாதம் ஆகஸ்ட் 15ல் இந்தியாவில் சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டங்கள் வெகு கோலாகலமாக நடைபெறுகின்றன. தமிழ் நாட்டிலும் சுதந்திரப் பொன்விழா கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.




## அக்கடான்னு உடை போட்டா

தங்கள் சட்டையைக் கிழித்துக் கொண்டு அலைபவர் களைப் பைத்தியம் என்றுதான் இந்நாள்வரை சொல்லி வந்திருப்பீர்கள். இனிமேல் சட்டென்று அப்படியொரு முடிவுக்கு வந்துவிடாதீர்கள்.

பாருங்கள் இந்த பைத்தியக்காரியை... மன்னிக்கவும்.. பேரழகியை. இந்த அழகி அணிந்திருக்கும் ஆடையைப் பாருங்கள். இதுதான் பாஷன்.

சீனாவில் ஷாங்காய் நகரில் புதுமையான மொடல் அழகிப் போட்டி நடந்தது. இதில் 58 மாணவிகள் கலந்துகொண்டு அசத்திப் புட்டார்கள். அத்தனைபேரும் 20 வயதுக்கு உட்பட்டவர்கள். அவர்களுக்குள் அமோக வரவேற்பைப் பெற்றவர் இந்த அட்டகாச அழகிதான்.

இவர் அணிந்துள்ள ஆடைகளைப் பாருங்கள். மேலே போட்டுள்ள கொஞ் சூண்டு சட்டையை வேறு வடிவில் பார்த்த ஞாபகம் வருகிறதா! வராதாபின்னே, டெனிம் ஜீன்ஸை கிழியோ கிழி என்று கிழித்து சட்டையாகப் போட்டிருக்கிறார். இடையில் கட்டியிருப்பது டெனிம் சேர்ட். எதுவும் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கக்கூடாது. எது எங்கே இருக்கக் கூடாதோ அது அங்கே இருக்கவேண்டும், என்ன குழப்பமாக இருக்கிறதா? அதுதான் பாஷன்.


அக்கடான்னு உடை போடுவது என்பது இதுதான். நிச்சயமாக இதற்கு தடா வேண்டும். தடா என்றால் தடைச் சட்டம்.



## ஒரே கும்மாளம்

அய்யய்யோ........ என்ன புழுக்கம் என்று அடிக்கடி அலுத்துக் கொள்ளவேண்டி இருக்கிறது. அந்தளவுக்கு காலநிலை சீர்கெட்டுப் போய்விட்டது. நம் நாட்டில் மட்டுமல்ல பொதுவாக சர்வதேச லெவலிலும் காலநிலை கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது.

மனிதர்களுக்கு மட்டுமல்ல விலங்குகளுக்கும் காலநிலை மாற்றத்தால் அவதிதான். இங்கே பாருங்கள், பொத்தென்று குளமொன்றில் குதித்துவிட்டார் குரங்கார். போலந்தில் உள்ள வார்சா மிருகக்காட்சிச்சாலையில் இந்த மனிதக் குரங்கார் வளர்க்கப்படுகிறார். ஒரு நாள் வெப்பநிலை 27 டிகிரியாகி எரிக்கத் தொடங்கிவிட்டதாம். யார் தடுத்தும் கேளாமல் ஓடிப்போய் குளத்தில் குதித்துவிட்டார். குதித்ததும் ஒரே கும்மாளம்தான். நமக்கே தாங்க முடியாத வெப்பத்தில் எங்காவது குளத்தில குதிக்கலாம் என்று தோன்றுவதுண்டு தானே! நம் மூதாதையரின் குணம் அப்படியே நம்மிடம் இருக்கிறது பார்த்தீர்களா?



## குதிரைக்கு வயது 6 கோடி

குதிரை பாய்ந்தோடும் என்பது தெரியும். பயிற்சி கொடுத்தால் நடனமும் ஆடும். பிரேசில் நாட்டில் நடந்த குதிரை நடனக் காட்சிதான் இது. ஆறு குதிரைகளையும் பயிற்சி கொடுத்து ஆடவைத்திருப்பவர் ஒரு பெண் பயிற்சியாளர்.

குதிரைகள் பற்றி சில ஆச்சரியத் தகவல்கள்: குதிரைகள் 6 கோடி ஆண்டுளாக உலகில் இருந்து வருகின்றன. முதல் குதிரை 'இயோஹிப்பஸ்' என்று அழைக்கப்பட்டது. ஐந்தரைக்கோடி ஆண்டுகளாக பரிணாம மாற்றங்கள் பல கண்டபின்னரே இன்றைய உருவை அடைந்தனவாம். ஐம்பது இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் 'ஈகுவஸ்' என்ற பெயரில் அழைத்தனர். கிட்டத்தட்ட நாலாயிரம் வருடங்களாக குதிரை மனிதனை சுமந்து வருகிறது.

குதிரையை வாகனமாக பயன்படுத்தி பயணங்கள் நடத்தினார்கள். பயங்கரப் போர்களும் நடத்தினார்கள். மங்கோலியர்களின் குதிரைப்படை உலக வரலாற்றில் வலிமை வாய்ந்தாகக் கூறப்படுகிறது.

இப்போது குதிரைக்கு முன்புபோல மவுசு கிடையாது. குதிரைப் பந்தயங்களில்தான் அதிகமாகப் பயன்படுத்தப்படு கிறது.

## தகவல் பெட்டி

## மனித சமுத்திரம்

இது என்ன தலையா? கடல் அலையா? என்று அரசியல்வாதிகள் அடிக்கடி கூட்டங்களில் பேசக் கேட்டிருப்பீர்கள். சின்னக் கூட்டத்தைப் பார்த்தால் கூட கீறல் விழுந்த ரெக்கோட் மாதிரிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

இங்கே பாருங்கள் இதுதான் உண்மையான மனிதக் கடல்... அல்ல .... அல்ல... அதையும் தாண்டி பெரிதானது. மனிதச் சமுத்திரம். எள் போட்டால் எண்ணெய்யாகும். காற்றுப் புகக்கூட இடைவெளிகேட்டு கெஞ்ச வேண்டும்.

இது சாதாரணக் காட்சியல்ல. கின்னஸ் உலக சாதனைக் காட்சி. முன்னர் செக்கோஸ்லோவாக்கியா என்றிருந்தநாடு இப்போது செக், சுலோவாக்கியா இன்று இரண்டு நாடுகளாகிவிட்டன. சுலோவாக்கி யாவில் மாபெரும் நடன நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மே 9ம் திகதி நடந்த இந்த நடனப்போட்டியில் கலந்து கொண்டு நடனமாடியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 65 ஆயிரம்பேர். தொடர்ந்து இரண்டு பாடல்களுக்கு இவர்கள் ஆடினார்கள். ஆண்களும், பெண்களுமாய் ஆடியதால் உற்சாகமாக ஆடிமுடித்தனராம். உலகிலேயே அதிக எண்ணிக்கை யானோர் கலந்துகொண்ட முதல் நடனம் இதுதான். இதற்கு முன்னர் அமெரிக்காவில் ஒஹியோவில் 48 ஆயிரம் பேர் சேர்ந்து ஆடியதுதான் உலக சாதனையாக இருந்தது. அதனை இவர்கள் ஆடி உடைத்துவிட்டனர்.





படிப்பகம்

www.padippakam.com

# மினி சினி

*'நண்பா நண்பா' எனப் பெயர் மாற்றப்பட்டிருக்கும் 'அமைதிப்பூங்கா'வில் பிரபுவுக்கு ஜோடியாக தேவயானி நடிப்பதாக இருந்தார். இப்போது அந்த வேடத்தில் சிம்ரான் நடிக்க இருக்கிறார்.

*'பொங்கலோ பொங்கல்' படத்திற்கு முதலில் 'விரலுக்கேத்த வீக்கம்' என்று பெயர் வைத்தார் அதன் இயக்குநர் வி. சேகர். பின்னர் பெயர் மாற்றப்பட்டது. அடுத்து வி.சேகர் இயக்கும் படத்திற்கு 'விரலுக்கேத்த வீக்கம்' என்று பெயரிட்டுள்ளார்.

*'சேரன் பாண்டியன்', 'நாட்டாமை', 'பரம்பரை' போன்ற படங்களுக்குக் கதை எழுதியவர் ஈரோடு சவுந்தர். இவர் முதன் முறையாகப் படமொன்றினை இயக்கவுள்ளார். சூப்பர் குட் ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு 'தர்மா' என்று பெயரிடப்பட்டுள்ளது.

*'மின்சாரக் கனவு' படத்திற்குப் பின் அரவிந்தசாமி தமிழில் நடிக்கும் படமொன்றை பெருமாள் என்னும் புதியவர் இயக்கவுள்ளார். பெருமாள், மணிரத்னத்திடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தவர்.

*சத்யராஜ்-அஜித்குமார் இணைந்து நடித்துள்ள 'பகைவன்' படத்தில் அஜித்குமாருக்கு ஜோடியாக அறிமுகமானவர் அஞ்சலா. இவர் தற்போது இரண்டு இந்திப் படங்களில் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

*இரண்டு வருடங்களுக்கு முன் பாண்டியராஜன் கதாநாயகனாக நடிக்க 'சிப்பாய்' என்ற பெயரில் படமொன்று ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இடைநிறுத்தப்பட்ட இப்படம் 'முத்துசிகாமணி' என்ற பெயரில் மீண்டும் படமாக்கப்படவுள்ளது.

*தமிழில் தற்போது படங்கள் எதுவுமின்றி இருக்கும் கௌதமி 'வாஜாலம்' என்ற மலையாளப் படத்தில் நடித்து வருகிறார். இதில் இவருக்கு ஜோடியாக மனோஜ் கே. ஜெயன் நடிக்கிறார்.

*முரளி-தேவயானி நடிக்கும் படமொன்றின் பெயர் 'மனசுக்குள் ஆசை'. இப்படத்தின் மூலம் கல்கி என்னும் புதியவர் ஒருவர் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார்.

*வினீத்-சாக்ஷி நடித்த தெலுங்குப்படமான 'பிரியராலு' தமிழில் 'கண்மணி ஒரு கவிதை' என்ற பெயரிலும், மலையாளத்தில் 'மஞ்சீரத்வனி' என்ற பெயரிலும் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

*'காதல் கோட்டை'பட இயக்குநர் அகத்தியனிடம் லதா என்ற பெண் ஒருவரும் உதவி இயக்குநராகப் பணிபுரிந்து வருகிறார். லதா பத்திரிகையாளராகவும் பணிபுரிந்த அனுபவமுள்ளவர்.

## சூப்பர் குட், சூப்பர் ஹிட்

சூப்பர் குட் படநிறுவன அதிபரின் பெயர் ஆர்.பி.சவுத்திரி. 'நாட்டாமை', 'பூவே உனக்காக' உட்பட பல வெற்றிப்படங்களை தயாரித்தவர். சிக்கனமான செயலில் மாபெரும் வசூல் படங்களை தயாரிப்பவர் என்று பெயரெடுத்திருக்கிறார்.

இப்போது 'லவ்டுடே' நூறுநாளைத் தொடப் போகிறது. மற்றொரு தயாரிப்பான 'சூரியவம்சம்' 'நாட்டாமை' வசூலையும் முடியடித்து சாதனை செய்து கொண்டிருக்கிறது. சரத்குமார், ராதிகா, தேவயாணி நடித்து திரைக்கு வந்துள்ள 'சூரிய வம்சம்' பந்தயத்தில் முன்னணியில் நிற்கிறது. செமர்த்தியான வசூல். சரத்குமாரின் காட்டிலும் மழை. சூப்பர் குட், சூப்பர் ஹிட். சூரிய வம்சம். மூன்றிலும் 'சூ' இருக்கிறது.

## முதலிரவில் நிபந்தனை

ஏகப்பட்ட சீர்வரிசை வாங்கி திருமணம் செய்கின்றனர் மணமகன் வீட்டார். முதலிரவில் மணமகளை நெருங்குகிறான் மணமகன். தழுவ நினைத்து தோளைத் தொடுகிறான். அவள் நகர்ந்து அமர்கிறாள். 'வெட்கமா? என்று மீண்டும் தொட, சீறி எழுகிறாள் மணமகள்.

'நீங்கள் கேட்ட சீர்வரிசை நாம் தந்துவிட்டோம் அது கல்யாணத்திற்காக நாங்க தந்தது. இப்போ என்னைத் தொடணும்னா ஒரு ரேட், முத்தம் கொடுக்கணும்னா ஒரு ரேட், மற்றதுக்கும் ஒரு ரேட்' என்கிறாள் மணமகள். அதிர்ச்சியில் உறைந்து நின்றான் மணமகன்.

இப்படியொரு காட்சி வாசுகி படத்தில் படமானது. மணமகளாக ஊர்வசியும், மணமகனாக ராஜேந்திர பிரசாத்தும் நடித்தனர்.



மகேஸ்வரி

ராம்கி-சங்கவி

படம்: ஆஹா என்ன பொருத்தம்



திரையுலக மறுபக்கம் 15

மித்ரவாசு

# நடிகையின் சாமர்த்தியமான சுருட்டல்

# முத்தான இயக்குநரின் மறுபக்கம்

அந்த நடிகையின் 'ரோஜா' போன்ற கொஞ்சு தமிழைக் கேட்பதற்கென்றே அந்த 'தேவி'க்கு ரசிகர் கூட்டம். எம்.ஜி.ஆர், சிவாஜி இருவருடனும் பல படங்களில் இணைந்து நடித்தவர். முப்பது ஆண்டுகளுக்கு முன்பே இலட்ச ரூபாய் சம்பளம் வாங்கியவர்.

நடிப்பதற்காக சம்பளம் வாங்கியதுபோக மேற்கொண்டு பணத்தாசையால் சிலமுறையற்ற வழிகளையும் பின்பற்றினார். கன்னடத்திலிருந்து வந்த பைங்கிளி அவர்.

அந்த நடிகையை ஒப்பந்தம் செய்ய விரும்பும் படஅதிபர்கள் முதலில் அந்த நடிகையின் வீட்டிற்கு சென்று கதையைச் சொல்ல வேண்டும். உடை அலங்காரங்களை தனது பொறுப்பில் விடும்படி சொல்வார் நடிகை.

நடிகை தானே கடைக்குச் செல்லமாட்டார். சேலைகளை வீட்டுக்கு அனுப்பச் சொல்வார். 'போதாது இன்னும் வேண்டும்' என்பார் நடிகை. அவற்றில் தேர்ந்தெடுத்த சேலைகளை தயாரிப்பாளரிடம் காட்டிவிட்டு வைத்துக்கொள்வார்.

தயாரிப்பாளரும் தேர்ந்தெடுத்த சேலைகள் போக மீதியை அனுப்பிவைக்கும்படி ஆட்களை அனுப்புவார். நடிகையோ 'அனுப்புகிறேன் அனுப்புகிறேன்' என்று நாட்களைக் கடத்துவார்.

இதனால் ஒவ்வொரு தயாரிப்பாளர்களுக்கும் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டது.

இத்தனை சேலைகளையும் நடிகை என்ன செய்கிறார் என்று கண்டறிய தயாரிப்பாளர்கள் முயன்றனர்.

ரோஜதேவி தன் வீட்டுக்கு வந்த சேலைகளை அடுக்கிவைத்து லிஸ்ட்போட்டு பின்னர் சேலைக் கடைக்காரருக்கு ஃபோன் போட்டு வரச் சொல்லுவார். 25 சதவீதம் தள்ளுபடி செய்து விற்றுவிடுவார்.

பிரபல நடிகர்கள் சிலருக்காக இந்த நடிகை செய்யும் காரியங்களை தயாரிப்பாளர்கள் பொறுத்துக்கொண்டனர். நேரம் வரட்டும் என்று காத்திருந்தனர். நேரமும் வந்தது. அந்த நடிகைக்கு புதுப்பட வாய்ப்புக்கள் குறைவதுபோல் தெரிய அத்தனைபேரும் சேர்ந்து ஒதுங்கி விட்டனர்.

இந்த நடிகை அடையாறில் பெரிய நவீன வீடொன்று கட்டியிருந்தார். அதற்கு பல மர்மவாசல்கள் உண்டு. எந்த வழியாக யார் வருகிறார் போகிறார் என்பது தெரியாது. அந்த வீட்டை ஒரு தயாரிப்பாளர் இப்போது வாங்கியிருக்கிறார் என்று தகவல்.

### அவர் சொன்ன விளக்கம்

நவரத்தினங்களில் ஒன்றை தன்பெயரில் கொண்டிருக்கும் முத்தான இயக்குநர் அவர். அன்பானவர். பண்பானவர். அவர் கோபமுற்று நாங்கள் பார்த்ததில்லை. 'ராமன்' அவர் என்று திரையுலகில் நல்ல பெயருண்டு. ஆனால் அவரின் மறுபக்கம்- அதைப்பற்றிச் சொன்னாலே இப்படியும் அவர் நடந்து கொண்டிருப்பாரா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கும்.

இயக்குநரிடம் வாய்ப்புக் கேட்டுவரும் புதுமுக நடிகைகளை உதவி இயக்குநர்களில் ஒருவர் தனியாக அழைத்துச் சென்று முகவரி வாங்கிக் கொள்வார். அடுத்து அசோசியேட் டைரக்டர் (மிக வயதானவர்) அந்த நடிகையரிடம்,

"நாங்கள் கூப்பிடும்போதெல்லாம் நீங்கள் வரவேண்டும். எங்கள் விருப்பத்திற்கேற்ப வளைந்து கொடுக்க வேண்டும். அதற்கு சம்மதமானால் எங்கள் படங்களில் வாய்ப்புக் கொடுக்கப்படும்" என்று கறாராகக் கூறுவார்.

வாய்ப்பு என்றால் ஏதோ கதாநாயகி ஆகிவிடலாம் என்று கனவில் மிதந்து கொண்டிருப்பார்கள் அந்த பெண்கள். ஆனால் வேலைக்காரி வேடம், கதாநாயகிக்கு தோழி, வில்லனுக்கு மசாஜ் செய்யும் எடுபிடி போன்ற வேடங்கள்தான் புதுமுகங்களுக்கு கிடைக்கும்.

மாதத்தில் இரண்டாவது ஞாயிறு இயக்குநர் அண்ட் கோவிற்கு முழு ஒய்வுநாள். அன்று மயிலாப்பூரிலுள்ள லஸ்சர்ச் சாலையிலுள்ள ஒரு வீட்டில் இயக்குநர், ஒளிப்பதிவாளர், உதவி இயக்குநர் ஒருவர், அசோசியேட் டைரக்டர் ஆகியோர் சங்கமிப்பர்.

அவர்கள் வரச்சொன்ன நடிகையும் அங்கு ஆஜராகியிருப்பார். அந்த நடிகையிடம் தம் தேவைகளை நிறைவேற்றிக் கொண்ட இயக்குநர் அண்ட்கோ பின்னர் தமக்கு நெருக்கமான தொழிலதிபர்களின் ஆசைக்கும் இணங்கவைக்கும்.

படப்பிடிப்பில் இயக்குநரை தேடிவரும் புதுமுக நடிகைகள் அவருக்கு அறிமுகமானவர்கள் என்றால், அவர்களிடம், "என்ன நேத்து ராத்திரி என்ன சமாச்சாரம், ஏதாவது... பலன் உண்டா? ஆள் எப்படி? உச்சமா? உனக்கா?" என்று பரிபாஷையில் பேசுவார்.

இவர்களது படப்பிடிப்பில் அந்தப் பெண் நடன இயக்குநர் (ஒரு மிருகத்தின் பெயருள்ள ஊரைச் சேர்த்தவர்) சேர்ந்துவிட்டால் போதும். எழுதமுடியாத வார்த்தைகள் அரங்கேறும்.

புதுமுக நடிகைகளை அனுபவிப்பதற்கு இயக்குநர் சொன்ன விளக்கம்: "நான் வாய்ப்புக் கொடுக்கிறதுக்கு அவர்களிடம் பணமா கேட்கமுடியும்? உடம்பைக் கேட்கிறேன். அவர்கள் வளர்ந்துவிட்ட பிறகு நான் அவர்களைக் கூப்பிட முடியுமா? அதனால்தான் உடனடிப் பலனை இப்போதே பார்த்து விடுகிறேன்."



கதாநாயகனாக நடித்த
இன்னமும் திரையிடப்படவில்லை. ஆனால்
சின்னத்திரையில் பலர் பார்த்துவிட்டனர்.
பாபு கணேஷ் தற்போது கதாநாயகனாக நடி
காதலிக்கிறார்கள். அதில் மூத்தவள் கொலை
கண்டுபிடிக்கிறான் கதாநாயகன். புளித்துப்போன
போகிறார்களாம். எஸ்.பி.பாலசுப்பிரமணியம், பரத்
வுள்ளனர். கதாநாயகியாக புது முகம் ஒருவரை



படிப்பகம்

www.padippakam.com

# காதோடு சொல்லுகிறோம்

'ரா' வில் பெயர் தொடங்கும் ரயில் நடிகையின் வெளிநாட்டுக் கணவர் தமிழ்நாட்டுக்கு ஒரே கும்பிடுபோட்டுவிட்டுச் சென்றுவிட்டார். கிழக்கே போகும் ரயிலிலோ, மேற்கே போகும் ரயிலிலோ செல்லாமல் விமானத்தில் சென்றுவிட்டார். நடிகையின் சமீபத்திய நடவடிக்கைகள் பிடிக்கவில்லையாம். நடிகை அப்செட்டாகி இருக்கிறார். சமரச முயற்சிகள் நடக்கிறதாம்.

சிம்மக் குரலோன் மறுபடி நடித்த படத்தில் நடிக்கும்போது அந்த நடிகைக்கும், இயக்குநருக்கும் இடையே கசப்பு ஏற்பட்டது. அவரது கசப்பை நீக்குவதற்கு அவரது புத்திரரான மூன்றெழுத்து இளம் நடிகர் மூலமாக முயன்றாராம் நடிகை. இளம் நடிகரும் நடிகையின் உபசரிப்பில் மெய்மகிழ்ந்துபோனார். தன் இயக்குநர் அப்பாவுக்கும் நடிகைக்கும் இடையே சமரச தூதராக மாறினாராம். பம்பாய் வரவான அந்த நடிகையின் இதுபோன்ற அதிரடி உபாயங்களால் ஏனைய நடிகைகள் பலரே கதிகலங்கிப் போயிருக்கின்றார்கள்.

ரஞ்சிதமான உயர நடிகை சமூகசேவையில் குதித்திருக்கிறார். சமூகசேவை நிமித்தமாக பல அரசியல் புள்ளிகளை சந்திக்க முடிகிறதாம். அதனால் அவர்கள் மத்தியில் வேண்டப்பட்ட ஒருவராகிவிட்டாராம். நடிகை கேட்கும் உதவிகளை உடனே செய்துகொடுத்து விடுகிறார்களாம் புள்ளிகள்.

அந்த உயரமான கதாநாயக நடிகரின் ரசனையே தனிரகம்தானாம். தனது படங்களில் புதுப்புது ஜோடிகளைத்தான் தேர்ந்தெடுப்பாராம். இறுதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர் 'ர' நடிகை. 'ரம்ப' நடிகையையும் மற்றொரு படத்தில் நடிக்கவைக்க கேட்டிருக்கிறாராம். நடிகைதான் தயக்கம் காட்டியிருக்கிறார் என்று தகவல்.

## தாவணி கொடுத்தவர்

ஆச்சரியம், ஆனால் உண்மை. அந்தி மந்தாரை படத்தின் பின்னர் மறுபடியும் தன் கவர்ச்சியை அடக்கி நடிக்கிறார் சங்கவி.

முல்லைக்கு தேர் கொடுத்தான் பாரி. கவர்ச்சியின் எல்லையில் நிற்கும் சங்கவிக்கு தாவணி கொடுத்திருப்பவர் சேரன். 'பாரதி கண்ணம்மா' பட இயக்குநர் சேரன் இயக்கும் புதிய படம் பொற்காலம். அதில்தான் சங்கவிக்கு காற்றடித்தால்கூட சற்றும் விலகாத தாவணியுடன் நடிக்க வைத்திருக்கிறார்.

சங்கவிக்கு படத்தில் ஜோடி முரளி. எனினும் பாடல் காட்சிகள் மூலம் சங்கவிப் பிரியர்களுக்கு விருந்து வைக்கப்படலாம். ஜொள்ளர்கள் கவலை கொள்ளக.

## நக்மாவுக்கு கல்யாணமா?

நீதிமன்றத்தில் மனைவி தொடுத்த வழக்கு இருப்பதால் நக்மாவை சந்திப்பதை தவிர்த்துவருகிறார் அந்த குமார நடிகர். நக்மா டல்லாக இருக்கிறார். ஒரு சில படங்களை மட்டுமே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

கல்யாணத்துக்கு தயாராவதால் அதிக படங்களில் நடிக்கவில்லை என்பது செய்தி. நக்மாவோ அதனை சத்தமாக மறுக்கிறார். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. மூன்று படங்களுக்குமேல் ஒரே நேரத்தில் ஒப்புக்கொள்ளமாட்டேன். இரண்டு படம் வெளியானால் அதன் பின்னர்தான் புதிதாக இரண்டு படங்களில் நடிக்க ஒப்புக்கொள்வேன். அதுதான் காரணம் என்கிறார் நக்மா. நம்பலாமா?

## பாதுகாப்புப் படை

ஃபெப்ஸி தொழிலாளர்கள் இயக்குநர் பாரதிராஜாவின் காரை அப்பளமாக நொறுக்கிவிட்டார்கள். ஸ்டன்ட் நடிகர்களை வைத்து படமெடுத்த இயக்குநர்களுக்கே ஸ்டன்ட் காட்டிவிட்டார்கள்.

இப்போது பாரதிராஜா தன் பாதுகாப்புக்காக மதுரையில் இருந்து இளைஞர்படை ஒன்றை வைத்திருக்கிறார். கறுப்புப் பூனைப்படை மாதிரி பாரதிராஜாவை சூழ இருந்து பாதுகாக்கிறார்களாம்.

## தாத்தா மணி

லீலைகளில் இளைஞர்போல துள்ளித்திரியும் கவுண்டமணி தாத்தாவாகிவிட்டார். இரண்டு வருடங்களுக்கு முன்னர் திருமணமான மகள்மூலம் பேரக்குழந்தையைக் கண்டுவிட்டார்.

மற்றொரு நகைச்சுவை நடிகரான வடிவேலு தன் மூத்த பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடிக்கொண்டிருக்கிறார். விரைவில் மாமனாராகப் போகிறார் வைகைப் புயல் வடிவேலு. என்ன காரணமோ தெரியாது வடிவேலுவுக்கு முன்பு போல இப்போதெல்லாம் மவுசு இல்லாமல் போய் விட்டது.

## சந்தோஷச் செய்தி

கவுண்டமணியின் முன்னாள் காதலி நடிகை ஷர்மிலி. அவர் ஒரு அவுஸ்திரேலியக்காரரை மணக்கப்போகிறார்.

செய்தி வெளியானதும் கவுண்டமணி மருத்துவமனையில் காணப்பட்டார்.

ஆனால் அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லையாம். ஷர்மிலியின் திருமணச் செய்தியால் பூரித்திருப்பவர் ஷகீலா.


யார் இந்த ஷகீலா? கவுண்டமணியால் தற்போது கவனிக்கப்படுபவர் இவர் தான்.

## ரம்பா திருப்தி

ரம்பா மிக்க உற்சாகத்தில் காணப்படுகிறார். 'வி.ஐ.பி.'யில் சிம்ரானைவிட ரம்பாவுக்குத்தான் ரசிகர்களின் ஜொள் மழையாம்.

அதற்காகவே ரம்பாவை ஏற்ற கோணங்களில் படமாக்கியுள்ளனர். அறிமுகக் காட்சியிலேயே 'கும்'மென்று தோன்றச் செய்கிறார்கள்.

ஜொள் மழை காரணமாக சிம்ரானை வென்றுவிட்ட திருப்தியில் இருக்கிறார் ரம்பா.



பானுப்பிரியா-ராஜீவ் கிருஷ்ணா
படம்: ஆஹா

## கும்ளேயுடன் காதலா?

நடிகை ஷோபனாவுக்கும், இந்திய கிரிக்கெட் வீரர் அனில் கும்ளேக்கும் இடையே காதல் என்று செய்திகள் வெளியாகின.


கும்ளேயை நேரில் பார்த்ததே கிடையாது என்று ஷோபனா மறுத்திருந்தார். காதலும் கிடையாது, கத்தரிக்காயும் கிடையாது என்று நீண்ட பேட்டியே கொடுத்திருந்தார் ஷோபனா.

ஆனால் விபரமறிந்த வட்டாரங்களின் தகவலின்படி ஷோபனாவின் பந்துவீச்சில் கும்ளே கிளீன் போல்ட்டானது உண்மையாம். இருவருமே இரகசியமாகச் சந்தித்துக் கொண்டதும் உண்மைதானாம்.

ஷோபனா தேசிய விருது பெற்ற நடிகை. கும்ளே இன்னும் முன்னேற வேண்டியவர். அதனால் இக் காதல் சமாச்சாரத்துக்கு இருவீட்டாரும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். எதிர்ப்பலையை சமாளிக்கத்தான் மறுப்பெழுதி காகிதக் கப்பல் விடுகிறார் ஷோபனா.

| முகப்பில் | விஜய்–சிம்ரான் |
|---|---|
| கமல் | படம்–ஒன்ஸ்மோர் |

# சினி விசிட்



பிரகாஷ்ராஜ்-சுஹாசினி
படம்: நந்தினி

## போட்டியான சினிமா சங்கங்கள் கமல்-ரஜினி யார் பக்கம்?

தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சங்கத்துக்கும் (ஃபெப்ஸி) போட்டியாக தமிழ்த் திரைப்படத் தொழிலாளர் சங்கம், மற்றும் தமிழ் திரைப்பட படைப்பாளிகள் சங்கம் என்பவை உருவாகிவிட்டன.

கடந்த மாதம் ஜூலை 8ம் திகதி தமிழக முதல்வர் முன்பாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முதல்வரும் தனியாகச் சங்கங்கள் தொடங்க ஆதரவளித்தார். இதனால் தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சங்கத்தினர் கலைஞர் கருணாநிதிமீது அதிருப்தியோடு இருக்கிறார்கள். கருணாநிதியின் கொடும்பாவியைக் கொளுத்தவும் முயன்றார்கள்.

தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சங்கத்தின் பக்கம் கமலும், ரஜினியும் நிற்கிறார்கள். ஆனாலும் கருணாநிதி தலையிட்ட பின்னர் ரஜினி சற்று ஒதுங்கிவிட்டார். கமல் மட்டும் உறுதியாக நிற்கிறார். ஆனாலும் தனியாக சங்கங்களும் தொடங்கப்பட்டு படப்பிடிப்புக்களும் ஆரம்பமாகிவிட்டன.

பாரதிராஜாவுக்கும், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சங்கத்துக்கும் இடையே பிரச்சனை இருந்தது. பாலுமகேந்திராவுக்கும் அச் சங்கத்தினருக்கும் இடையேயான பிரச்சனையை சாக்காக வைத்து பாரதிராஜா பழிதீர்த்துக் கொண்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

பாரதிராஜாவை மட்டுமல்ல, தனது குருநாதர் பாலச்சந்தரையும் எதிர்த்து நிற்கிறார் கமல். 'சில தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குநர்களுக்காக தொழிலாளர்களை பிரித்து மோதவிடணுமா?' என்பதுதான் கமலின் வாதம்.

ரஜனி, கமல்மீது பாரதிராஜா நேரடியாக குற்றம் சாட்டியிருக்கிறார். "இவர்கள் இருவரும் நினைத்தால் பிரச்சனையை எப்போதோ அடக்கியிருக்கலாம். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு இப்போது பேசலாமா?" என்கிறார் பாரதிராஜா.

"நாங்கள் வேடிக்கை பார்க்கவில்லை. நியாயத்தை சொல்கிறோம். அவ்வளவுதான் என்று 'பா' இயக்குநர்கள்மீது பாய்ந்திருக்கிறார் கமல்.

## கல கல ஹாசினி—சோகாசினி

'நந்தினி' படத்தின் முற்பகுதியில் சுகாசினி கலகலஹாசினி. பிற்பாதியில் சற்றே சோகாசினி. கல்யாணமாகியும் உடம்பை கவனமாக பராமரித்திருக்கிறார் என்பது தெரிகிறது. நடிப்பில் மட்டும் முதிர்ச்சி தெரிகிறது.

பிரகாஷ்ராஜை பெரிய தொழிலதிபர் என்று தப்பாக நினைத்து அவரிடம் வேலை கேட்டு அலைவதும், பிரகாஷ்ராஜின் சமாளிப்புக்களும் கல கலப்பு. பிரகாஷ்ராஜின் தயக்கத்தைப் போக்கி தன்னுடன் நெருங்கச் செய்தார் சுகாசினி என்று படப்பிடிப்பின்போது செய்தி வந்தது. படத்தைப் பார்த்ததும் அது உண்மைதான் என்பது பளிச். பாடல்காட்சிகளில் பிரகாஷ்ராஜுக்கு சற்று அதிகமாகவே சுதந்திரம் கொடுத்திருக்கிறார் சுகாசினி.

'தேவதை' படநாயகி கீர்த்தி ரெட்டியும் விளித்தும் நடிக்க அதிகம் வாய்ப்பில்லாமல் வந்து போகிறார்கள். எஸ்.பி.பாலசுப்பிரமணியம் நடிப்பில் பின்னியிருக்கிறார். மணிவண்ணன் வழக்கம்போல வந்து போகிறார். பெண்களுக்கு பிடிக்கக்கூடிய படம். இயக்கம் மனோபாலா.

## பாய்ந்தார் சரத்

'ஜானகிராமன்' படத்தின் கிளை மாக்ஸ் காட்சியில் படப்பிடிப்புக் குழுவினரையே கலங்கடித்துவிட்டார் சரத்குமார்.

படத்தில் வீட்டுக்குள் இருந்து கதவை உடைத்து சரத்குமார் பாய்வது போல ஒரு காட்சி வருகிறது. அக் காட்சியில் 'டூப்' வைத்து எடுக்கலாம் என்று இயக்குநர் சி.சுந்தர் சொன்னாராம். சரத்குமார் கேட்கவில்லை. அவரே அக் காட்சியில் நடித்திருக்கிறார். கதவை உடைத்துக் கொண்டு சரத் பாய்ந்த வேகத்தைக் கண்டு படப்பிடிப்புக் குழுவினரே பதறிப் போனார்களாம்.



மோகினி
படம்: சேரன் சோழன் பாண்டியன்

## காதல் சக்தி

ல்புறா', 'நான் ஒரு இந்தியன்' ஆகிய படங்களில் பாபுகணேஷ். 'நான் ஒரு இந்தியன்' தமிழ்நாட்டில் ன் வீடியோ கசட்டுக்கள் வந்து விட்டன. நம்நாட்டிலும்

படம் 'காதல் சக்தி'. கதாநாயகனை இரு சகோதரிகள் சய்யப்படுகிறாள். கொலைக்கு காரணமானவர்களை த தான். ஆனால் திகில் கலந்து புதுமையாகச் சொல்லப் டிவேலு, ஸ்ரீவித்யா, சின்னி ஜெயந்த் ஆகியோரும் நடிக்க க்க வைக்கப் போகிறார்களாம்.



படிப்பகம்

www.padippakam.com

# அனைவரும் கவனிக்கவும்!
## முன்னெச்சரிக்கைகள்

தலைவலி, இருமல், சளித்தொல்லை, நெஞ்சுவலி, நெஞ்செரிவு, காய்ச்சல், முதுகு உளைச்சல், நாரிப்பிடிப்பு, கழுத்துச் சுளுக்கு ஆகிய பல சிறு தொல்லைகள் நமக்கு ஏற்படுகின்றன. இவை அவ்வப்போது தோன்றிமறையும் உபத்திரவமாகவும் இருக் கலாம்; நம்மை வந்து பீடிக்கப்போகும் பெருவியாதிக்கான முன்னெச்சரிக்கையா கவும் இருக்கலாம், ஆகவே இத்தகைய சிறு சிறு தொல்லைகள் விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட உபாதைகள் 5 நாட்க ளுக்கு மேல் தொடர்ந்து நீடிக்குமானால் கண்டிப்பாக மருத்துவரிடம் ஆலோசனை கேட்டு மருத்துவ உதவி பெறுவதே நல்லது.

சில நோய்களையும் அவற்றுக்கான முன்னெச்சரிக்கைகளையும் பார்ப்போம்:

1. மூச்சுத்திணறல்: போதுமான பிராண வாயுவைச் சுவாசிக்க முடியாதிருந்தால்-

அ.ஆஸ்துமா ஆ.இருதயக்கோளாறு இ.மார்புத்தொற்று ஈ.குளிர்சுரம் உ.ஒவ்வா மைக் கோளாறு போன்ற நோய்களுக்கான ஆரம்பமாக இருக்கலாம்.

2. நெஞ்சு வலி: மார்பில் ஏற்படும் வலி எல்லாமே இருதயத்துடன் தொடர்புடையதாக இருக்க வாய்ப்பில்லை. எவ்வாறிருப்பினும் மருத்துவரிடம் ஆலோசனை பெறுவதே நலம். நோவுக்கான காரணத்தை நீங்களே நிர்மாணிக்க முடியாது. சில சந்தர்ப்பங்களில் இருதயத்துடன் தொடர்புடையதாக இருக்கு மானால், விபரீதம் ஏற்படுமுன் தடுத்துவிட வாய்ப்பிருக்கிறது.

அ.இருதயநோய் ஆ.'புளுரசி' எனப் படும் நுரையீரல் வீக்கம் இ.நெஞ்செரிவு ஈ.பித்தப்பைக் கோளாறு போன்ற நோய்களுக் கான அறிகுறியாக இருக்கலாம்.

கட்டிகள், திரட்சிகள்: எந்த விதமான காரணமுமின்றி உடம்பில் சில பாகங்களில் கட்டிகளோ திரட்சிகளோ ஏற்படலாம். இவை பெரும்பாலும் ஆபத்தானவையல்ல. சில ஒவ்வாமை அல்லது தொற்றுகளினால் தோன்றக்கூடும். இவை தொடர்ந்து வந்து- கவனம் செலுத்தப்படவில்லையானால் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். மூன்றுக்கு மேற்பட்ட இடங்களில் கட்டிகள் வருமானால் இரத்தப்பரிசோதனை செய்து பார்ப்பது அவசியம்.

அ.கழலைகள் நிரந்தரமாக ஏற்படுதல்.
ஆ.தோலுக்கு அடியில் இரத்தம் கட்டுப்படுதல்.
இ.சுரப்புக்களின் தேக்க நிலை.
ஈ. புற்று நோய் போன்ற நோய்களுக்கு அறிகுறியாகவும் இருக்கலாம்.

தொண்டை நோ: தொண்டை அடைத்துக்கொண்டு பேசுவதற்குத் தடையாக இருத்தல், தொண்டைக் கரகரப்பு, உமிழ் நீரை விழுங்குவது கஷ்டமாக இருத்தல் ஆகியவை சாதாரண தொற்றினாலோ குளிரி னாலோ ஏற்படலாம். சிலர் பலமாகத் தொடர்ந்து பேசுவதனாலும் தொண்டையில் நோ ஏற்படலாம். இந்நோவும் ஒரு வாரத் துக்கு மேல் இருக்குமானால்- அ.தொண் டையில் ஏதோ ஒரு வகைச் சவ்வு வளர்தல், ஆ.குரல் வளையுடன் தொடர்புடைய தசைநார்



மற்றும் நரப்புகளின் அழற்சி-ஆகிய உபாதை களுக்கு வித்திடக்கூடும்.

சோர்வும் மயக்கமும்: ஓய்வின்றி உழைப் பதனால் இவை தோன்ற வாய்ப்புண்டு. போதுமான அளவு தூங்காமல் இரவில் அதிக நேரம் விழித்திருத்தல் போன்றவற்றால் உடல் சோர்வடைகிறது. மூளையும் நரம்புக ளும்கூட அதிகபளுவினால் இயக்கத்தில் சற்று வேகத்தைக் குறைத்து விடுகின்றன. மன உளைச்சல் மற்றும் அதிக பளு ஆகிய வையும் மயக்கம் தரத்தக்கன. இவை நீடித்தால்.....

அ.குரல்வளைக் குருத்தெலும்புகள் இயங்க மறுக்கும்- கேடயச் சுரபிகளும் இயக்கத்தைக்குறைத்துக் கொள்ளும்.

ஆ.வைரஸ் கிருமிகள் வேகமாகப்பரவும்

இ.மயக்கம் தொடர்ந்து பலமணி நேரம் நீடிக்கக்கூடும்.

ஈ.தளர்வுத்தன்மை அதிகரிக்கலாம்.

எடை குறைதல்: தொடர்ந்து எடை குறைந்து கொண்டுபோவது பாரதூரமான விளைவினை ஏற்படுத்தக்கூடும். எடை குறை வதுடன் சிறு நீர் அடிக்கடி கழிதல், தாகம் ஏற்படுதல் இருக்குமானால், அது நீரிழிவின் அடையாளமாகும்.

தொடர்ந்து வியர்த்தல், கண்கள் பிதுங்கி



ஒய்வெடுப்பதே கடினமாக இருக்கு மானால் கணச் சுரப்பியின் இயக் கம் பாதிக்கப் படுகிறது என்று கொள்ளலாம்.

எடை குறை வதுடன் வயிற்று வலியும் இருக்கு மானால் சமி பாட்டுக் கோளாறு ஏற்படுவதற்கான காரணம் எனக்கருதலாம்.

அ.நீரிழிவு, மஞ்சள்காமாலை அல்லாது போனால் புற்று நோய்க்கும் காரணமாகலாம்.

ஆ.மூலநோய், நரம்புத்தளர்ச்சி தோன்றலாம்.

இ.மலச்சிக்கல் ஆகிய நோய்கள் நீடிக்க வாய்ப்புண்டு.

தோலில் மாற்றங்கள், மச்சங்கள் இடம் மாறுதல் போன்றவற்றை மிக அவதானமாகக் கண்காணித்தல் வேண்டும். இவை புற்று நோய் தோன்றுவதற்கான அறிகுறியாகவும் இருக்கலாம்.

அடிக்கடி காய்ச்சல் வருவதுகூட வேறு பல நோய்களுக்கு முன்னெச்சரிக்கை சமிக் ஞையாகலாம். காய்ச்சலுடன் தலைவலி, தலைச்சுற்று, ஓங்காளம், ஒளியைக்காண முடியாத கண் கூச்சம் ஆகியவை இருக்கு மானால் நிச்சயமாக மருத்துவ உதவியை நாடவேண்டும்.

இருமலுடன் சளி வெளியேறும்போது இரத்தம் வெளிப்பட்டாலோ மூக்குச் சிந்தும் போது இரத்தம் வந்தாலோ எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும். புற்று நோய் போன்ற நோய்களுக்கும் இது காரணமாக லாம். நெருப்புக்காய்ச்சலுக்கும் இது ஆரம்ப அறிகுறியாகும்.

### சின்ன யோசனைகள்

* கீரை ருசியாக இருக்க, சிறிது சீனி கலந்த நீரில் ஊறவைத்து விட்டுச் சமைத்தால் கீரை ருசியாக இருக்கும்.
* இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் உணவில் எலுமிச்சம்பழம், கறிவேப்பிலை, பூண்டு, வெங்காயம் போன்றவற்றை அதிகளவு சேர்த்து வந்தால் இரத்தக் கொதிப்பு வராது.
* சில சமயங்களில் பால் புளிக்கும் நிலைக்கு வந்துவிட்டால் அடுப்பில் வைத்துக் காய்ச்ச முடியாது. பாலில் ஒரு சிட்டிகை சமையல் சோடாவைப் போட்டுக் காயச் சினால் பாலைத் திரியாமல் காய்ச்சி எடுக்கலாம்.

# ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
## நாமும் உதவணும்

குழந்தைகள் காலடி எடுத்து வைத்து நடக்க ஆரம்பிக்கும்போதே இயல்பாக ஒரு தன்மையினை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். தாயோ தகப்பனோ குழந்தையை நடை பழக்கும்போது ஏதோ ஒரு வகையில் தத்தித்தத்தி நடக்க ஆரம்பிக்கிறது. சில மாதங்களில் தானாகவே நடக்க ஆரம்பித்துவிடுகிறது.

இக்காலகட்டத்தில் தனது தாயோ தந்தையோ அல்லது தன சுற்றாடலிலுள்ள வேறோர் உறவினரையோ பின்பற்றி அதே பாணியில் நடக்க ஆரம்பிக்கிறது. இது இயல்பாகவே இடம்பெறும் ஒரு செயற்பாடே.

வயதாக ஆக சிலருக்கு அதே நடைப்பழக்கம் தொட ரலாம்; ஆனால் பெரும் பாலானோர் சூழலுக்கேற்ற மாதிரி தன் நடையினை மாற்றிக்கொள்வார்கள். இள வட்டங்கள் சினிமாவிலோ தொலைக்காட்சியிலோ தோன்றும் தங்களுக்குப் பிடித்தமான ஒரு நடிக ரையோ நடிகையையோ பின்பற்றி அதே பாணியைக் கைக் கொள்வார்கள்.



இதே போல்தான் தங்கள் அவயவங்களின் தோற்றங்களையும் மாற்றிவிட முனைவார் கள். இம்முயற்சியில் தவறான முறைகளைப் பின்பற்ற நேர்ந்தால் அதுவே ஒரு பழக்கமாகி தீமைகளையும் ஏற்படுத்தக்கூடும்.

பெண்களில் பன்னிரண்டு வயதைத் தாண்டும்போது உடலில் பருவ வளர்ச்சிகள் தோன்றுகின்றன. பெரும்பாலான சிறுமி களை இத்தகைய வளர்ச்சிகள் ஒரு வகைக் கூச்சத்தன்மைக்குத் தள்ளிவிடும். எப்படியா வது அத்தகைய மாற்றங்களை மறைத்து விடமுனைவார்கள்.

இதனால் இருதோள்களையும் முன்புற மாக ஒடுக்கப்பார்ப்பார்கள். இவ்வாறு செய்வதனால் உடல் உள் உறுப்புகள் பாதிப்படைகின்றன. நிரந்தரமாகவே கூனல் தன்மை ஏற்பட்டுவிடும்.

பள்ளி செல்லும் சிறுவர்கள் தங்கள் பாடப்புத்தகங்களைச் சுமந்து செல்ல முது கில், ஒரு பெரும் பாரச்சுமையுடன்கூடிய புத்தகப் பையை ஏந்திச் செல்கிறார்கள். இதனாலும் சிறுமிகளின் பிஞ்சு எலும்புகள் முன்புறமாகக் கூனி நிரந்தர கூனல் ஏற்பட வழியாகிறது.

இளமை முறுக்கேறும் ஆண்களும் 14 அல்லது 16 வயதை எட்டியதும் தங்களிடம் ஏற்படும் உடலியல் ரீதியான மாற்றங்களை மறைக்க முற்படுகின்றனர். தங்கள் முகங் களில் முடிவளர்வதை பெரும்பாலானோர் விரும்புவதில்லை. எவரும் அறியாமல் அப் 'பூனை மயிர்களை' கையால் பிடுங்கி எறிய முற்படுவார்கள். இதனால் முகத்திலுள்ள உரோமக் கண்கள் பாதிப்படைகின்றன. முகம் வீங்கி, பொலிவிழந்து கரடுமுரடாகவும் மாறக்கூடும்.

இயற்கையாக ஏற்படும் பருவ மாற்றங் களை மறைக்க தங்கள் பிள்ளைகள் முயலும் போது பெற்றார்- குறிப்பாக தாய்மார் கவனமெடுத்துத் தடுக்க வேண்டும்.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பார்கள். சிறு பராயத்தில் பிள்ளைகளிடம் தொற்றும் பழக்க வழக்கங்கள் பெரியவர் களானாலும் சில சமயம் விட்டுப் போவ தில்லை.

இத்தகைய செயல்களினால் ஏற்படக் கூடிய தீமைகளை பிள்ளைகளிடம் பக்குவ மாகச் சொல்லி நெறிப்படுத்த வேண்டும். தங்களுடைய நடவடிக்கையை பெற்றார் அவதானித்து விட்டார்களே என்ற குற்ற உணர்வு அவர்களை வருத்தவே செய்யும்

ஆகவே அவர்களுடைய உள வளத்தைப் பாதிக்காத முறையில் புத்தி கூறுவது அவசி யம். முரட்டுத்தனமாகக் கட்டளையிடுவது இளம் உள்ளங்களைப் பெரிதும் பாதிக்க நேரிடும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## மூதூர் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**செல்வி ம.சிவகௌரி.**
**கட்டைபறிச்சான்-7, மூதூர்.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# அழகம்மா ~ அழகம்மா

உடலின் பல முக்கிய உறுப்புக் களுக்கான அழகுக் குறிப்புக்களை இங்கு பார்ப்போம்:

**1. கண்:**

அப்பிள் பழத்தை நறுக்கி தேனில் தொட்டு அவ்வப்போது சாப்பிட்டு வந்தால் கண்கள் ஒளியும், அழகும் பெறும்.

* வெள்ளரிக்காயை வட்டமாக நறுக்கி கண்களின் மேல் சிறிது நேரம் வைத்துக் கொண்டால், கண்கள் குளிர்ச்சியடைந்து, கருவளையங்கள் மறைய ஆரம்பிக்கும்.

**2. புருவம்:**

*தேங்காய் எண்ணெய், தோங்காய்ப் பால் இரண்டையும் வாணலில் வைத் துக் காய்ச்சி தினமும் புருவங்கள் மீது தேய்த்து வர முடி நன்கு வளரும்.



* தினசரி பசுவெண்ணெய் சிறிது சாப்பிட்டு வர புருவத்தில் முடி நெருக்கமாக வளர ஆரம்பிக்கும்.

**3. நெற்றி:**

* நெற்றியில் பொட்டு வைத்த இடத்தில் அலர்ஜியா அல்லது தழும்பா? கடுக்காயைச் சந்தனக் கல்லில் உரைத்து பூசுங்கள்- சரியாகி விடும்.

**4. உதடு:**

* நெய் அல்லது வெண்ணெய் தடவி வந்தால் உதடு வெடிப்புக்கள் மறையும்.
* எந்த நேரமும் உதட்டில் லிப்ஸ்டிக்கோடு இருப்பது நாளடைவில் உதடுகளுக்கு அவ்வளவு நல்லதல்ல.

**5. பற்கள்:**

* எலுமிச்சம்பழத்தை நறுக்கி சாறு எடுத்து, அதில் உப்பு சேர்த்து பிரஷ்ஷினால் தொட்டுத் தேய்த்து வந்தால் பற்களின் மஞ்சள் நிறம் மாறும்.
* வேப்பங்குச்சியால் பல் துலக்கும்போது அதிலிருந்து கிடைக்கும் நிப்டின், நிரம்பின், நிம்போஸ், எடரல், டனின்,மார்கோசின் ஆகிய சத்துக்கள் பற்களை முழுமையாகப் பாதுகாக்கின்றன.

# கர்ப்பகாலம் பொறுமை கற்றுத்தரும்



முதல் முறையாக மனைவி கர்ப்பமடைந்ததும் கணவன், மனைவி உறவில் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. முதலாவது கணவனுக்கும், மனைவிக்கும் ஏற்பட்டிருக்கும் காதலும், அன்பும், உறவும் பலப்படுகின்றன. கணவன் முன்பை விட மனைவியிடம் மிகுதியாக அன்பு கொள்வான்.

கர்ப்பமாக இருக்கும் மனைவி என்ன கேட்டாலும் கணவன் உடனே வாங்கிக் கொடுத்து விடுகிறான், விவரம் தெரிந்தவனாக இருந்தால், அவள் செய்யும் வேலைகளில் தானும் பங்கு கொண்டு அவளுக்கு உதவி செய்வான். அவள் விரும்பிய தின்பண்டங்களை வாங்கிக்கொண்டுப்பான்.

பிள்ளை பிறந்ததும், பிள்ளையைப் பார்த்துக் கொள்வதிலேயே பெரும்பாலான நேரம் கழிந்து விடுகிறது. பிள்ளை பிறந்ததும் சில பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அடிக்கடி கால நேரமின்றிக் குழந்தை வீல் என்று அழும். தூங்கிக் கொண்டிருக்கும் கணவனும் மனைவியும் எழுந்து கொள்வார்கள். தாய் அடிக்கடி பிள்ளைக்குப் பால் கொடுக்க வேண்டியிருக்கும். புட்டிப்பால் கொடுப்பதென்றால் பாலைக் கலக்கிப் புட்டியில் உற்றிக்கொடுக்கக் கணவன் உதவி செய்ய வேண்டியிருக்கும்.

மனைவி, குழந்தையை வைத்துக் கொண்டு கணவனிடம் சில சில்லறை வேலைகளை வாங்கும்போது கணவனுக்குக் கொஞ்சம் சலிப்பு ஏற்படும்.

இந்த மாறுதல்களால் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படுமா? ஆகாது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள் நிபுணர்கள். ஒரு குழந்தை பிறந்ததுமே கணவனுக்கும், மனைவிக்கும் சகிப்புத்தன்மை மிக அதிகமாகி விடுகிறது. ஆகையால் இருவரும் எதையும் பொறுத்துக் கொள்கிறார்கள் என்பதுதான் உண்மை.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CD

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிர சுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16-08-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது சுந்தரி

## கோதுமை +பாதாம் அல்வா

**தேவையானவை:**

முழுக் கோதுமை - 600 கிராம்
பாதாம் பருப்பு (கோது உரித்தது) - 200 கிராம்
சீனி - 800 கிராம்
கற்கண்டு - 200 கிராம்
ஏலக்காய் (கோது நீக்கியது) - 5 கிராம்
ஜாதிக்காய்த்தூள் - 5 கிராம்
நெய் - 200 கிராம்

**செய்முறை:**

முழுக்கோதுமையை இரு நாட்கள் தண்ணீரில் உறவிட்டு பின்னர் அரைத்தெடுக்கவும். பின்னர் தண்ணீர் விட்டுக் கலக்கியபின் இருமணி நேரம் தெளியவிடவும். பின்னர் துணியால் வடிகட்டி நீரை அகற்றவும். மாவு மட்டும் தெளிந்து வெண்ணெய் பதத்தில் இருக்கும்.

ஓர் அகலமான வாணலியை அடுப்பில் வைத்து அளவாகத் தண்ணீர்விட்டு- கொதிக்கும்போது 200 கிராம் நெய்யையும் விட வேண்டும். இதில் சிறு சிறு துண்டாக நறுக்கிய பாதம் பருப்பை போடவும். ஐந்து நிமிடங்களானதும் சீனி, ஏலக்காய், ஜாதிக்காய் ஆகியவற்றைப் போட்டுக் கிளறவும். மேலும் ஐந்து நிமிடம் கொதித்ததும் கோதுமை மாவை சிறிது சிறிதாகப் போட்டுத் தொடர்ந்து கிளற வேண்டும்.

இக்கலவை கெட்டியாகிப் போகாமல் எஞ்சியுள்ள நெய்யை விட்டுக்கிளறி, தாம்பா ளத்திலும் நெய்யைத் தடவி அதில் பரவும் வகையில் விட வேண்டும்.

பல நாட்களுக்குக் கெட்டுப்போகாமல் அல்வா நல்ல பதமாக இருக்கும்.


**தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி**

**தினமுரசு— அருள் ஜுவலர்ஸ்**

**பரிசுக் கூப்பன் இல 23**

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

## ஏழேழு பௌர்ணமிகளாய் ஏமாந்தவள்!

பாலை நிலங்களில்,
நீண்ட பாதைகளில்–அவள்
நினைவுகள் போகின்றன!
0*0
வளம் மிகுந்த
வாழ்வின் கனவுகள்–அவள்
விழிநீர்ச் சுவடுகளில்
வீழ்ந்து அழிகின்றன!
0*0
உன் மீது வைத்த
அன்பின் மிகுதியால்
அணையாத எரிமலைகளின்
வாயில்கள்–அவள்
இதயத்தில் திறந்தன:
கொதித்துப் பொங்கும்
தீக்குழம்புகள்–அவள்
நெஞ்சுக்குள் உருவெடுத்தன!
0*0
நடைப்பிணமாகப் போகும்
அவள் பாதையில்
இன்னொரு வாழ்க்கையோ,
இன்னொரு காதலோ
சவனங்கள் எறிந்து
குறுக்கிடப் போவதில்லை!
0*0
உனைக் காதலித்த போதும்
உன் பிரிவால் துடித்த போதும்,
உனது பெயரைக்
கூவியழைத்தன்றோ
அவளது உள்ளம்
ஆறுதல் தேடியது!
0*0

உனை இழந்த நாளில்
உலக சக்திகள்
அனைத்தின் முன்னிலையிலும்
அனாதரவானாள்!
உனது அன்பை நம்பிக்
கட்டிவைத்திருந்த
பல கோடிக் கனவுகளோடு
நொறுங்கி வீழ்ந்தாள்!
0*0
அவள் உணர்வுகள் யாவும்
உயிருடன் புதையுண்டு போக,
விரக்தியும்
வேதனையும்–அவளது
இளமையைச் சூழ,
கல்லறைச் சுவர்களாய்
எழுந்தன!
0*0
அவளது வசந்தங்கள்
தீராத துயரங்களோடு
தனக்கென்றொரு
தனிவழியைத் தேடியவாறு
தொலைதூரம் போயின!
0*0
அந்தப் பால் வீதியில்
எண்ணற்ற விண்மீன்கள்
அணிவகுத்திருந்த போதிலும்
அவள் உலகுக்கு வந்து போன
'தூமகேது' ஒன்றினை நம்பி
ஏழேழு பௌர்ணமிகள்
கடந்து போன பின்னரும்
காத்திருந்தாள்:
அவள் தேடிய தூமகேது
இன்னொரு வானத்தில்
வலம் வருவதை அறியாமல்!
0*0

பஹீமா ஜஹான்– மெல்சிரிபுர.


## அழகிய கனவு!

என்ன தேசமிது?
நிம்மதி தொலைந்து போன
பயங்கர ராத்திரிகள்
இருள் கலையாமலேயே
இன்னு முள்ளனவே!
***
வெடி குண்டின் தீப் பொறிக்குள்
வெந்து போச்சே வாழ்க்கை!
நாங்கள்–
சாவின் அவலங்களுக்குள்
சீரழிந்து போவதுதான்
சீவியமாய் ஆகுமோ?
***
யுத்தப் பிசாசின்
கோர நகங்கள் கீறி
ஆறாத காயங்கள்
ஆயுள் முழுக்க!
***
இன்னும்–
இருப்பிடம் தொலைத்து
இருப்பையும் தொலைத்து
முகாம்களுக்குள்
அழுகையால்
கரைந்து போய்க்
கொண்டிருக்கின்றோம்!
***

வெள்ளைப் புறாவின்
அணி கலனாய்
ஆக வேண்டிய
தீர்வுப் பொதிகள்
துப்பாக்கி முனைகளிலே
தொங்க விடப்பட்டிருக்கின்றனவே!
***
எப்படி–
எங்கள் கனவுகளில்
வெளிச்சம் தருகின்ற
விடி வெள்ளி தோன்றும்?
***
நம்பிக்கைகள்
வெடித்து சிதறுகின்றன:
கண்ணி வெடியில் சிக்கிய
கவச வண்டி போல!
***
இன்னும்–
நாளையும் இருக்கிறது:
பலவீனப்பட்ட
நம்பிக்கையும் இருக்கிறது:
ஒரு முடிவு பற்றிய
அழகிய கனவும் இருக்கிறது!
***

காத்தான்குடி அனு.

## தேன் கிண்ணம்



## பதிலேது நீ சொல்லு..?

கண்ணுக்குள் உனையிருத்தி
காத்திருந்த நாள் மறந்து,
நெஞ்சுக்குள் உனையிருத்தி
நினைத்திருந்த நாள் மறந்து,
போனதென்ன எனை மறந்து?
என்னுயிரே என்னுயிரே!
உறவென்ன பிரிவென்ன?
பதிலேது நீ சொல்லு??
–0–
காதலை நீ தொடுத்து
காலமெல்லாம் உனை நினைந்து
காத்திருந்ததை மறந்து
கண்ணீரை எனக்களித்து
காததூரம் போனதென்ன?
–0–
என்னுயிரே என்னுயிரே!!
காதலென்ன கண்ணீரென்ன?
அழகென்ன அன்பென்ன?
பதிலேது நீ சொல்லு??
–0–

கனவுகள் பல தொடுத்து
கற்பனையில் சிறகடித்து
காதல் படகேற்றியவனே! ஆசை
உன் மேல் வைத்ததனால்
அணுவணுவாய் எனை வதைத்து
அத்தனையும் தீயிலிட்டு!
சூன்ய வாழ்வை என்னில்
வழி சமைத்துப் போனவனே!
–0–
என்னுயிரே என்னுயிரே!
பாசமென்ன பணமென்ன?
வாழ்வென்ன சாவென்ன?
பதிலேது நீ சொல்லு?
பதிலேது நீ சொல்லு???
–0–

தெ.ரஞ்ஜனா– இறம்பைக்குளம்,வவுனியா.

## உணர்வுகள்...!

எழுச்சி மிக்க
என் எண்ணங்கள்
எத்தனைமுறை
சூறையாடப்பட்டன!
**
நீ மட்டுமல்ல
நான் நேசித்த
அயலவனும் கூட!
**
எத்தனை முறை
என் கூடு
உன்னால் குலைந்தது
ஆனாலும் நான் சிலந்தி!
**
வெட்ட வெட்ட
துளிர்க்கும் புளியங்கொம்பு
எனது நினைவுகள்!
**
துகிலுரியப்பட்ட
கனவுகளையும்

விலங்கிடப்பட்ட
நினைவுகளையும்
வாரிச்சுருட்டி
வேப்பமரத்தடி
பங்கருக்குள் பதுக்கிவிட்டேன்!
**
வானத்து மின்மினியை
வரவேற்கும் கூரையின் கீழ்
சாயம் வெளுத்த
என் கற்பனைகளை
இரை மீட்டுப் பார்க்கின்றேன்!
**
உணர்வுகளைப்
பிரசவிக்கத் துடிக்கும்
என் உள்ளத்தின்
அறியாமையை
யாருக்கும் தெரியாமல்
புரட்டிப் பார்க்கின்றேன்!
**

ஜே.ஜஸ்டின்– வவுனியா.

## அடடா!

பொதி வருது, பொதி வருது!
பொறுத்திடுங்கோ கொஞ்சம்,
புகழ் மிக்க பொதி அடாடா!

அதி சிறப்பான பொதி,
அழகான நல்ல பொதி,
ஆற்றிடும் பொதி அடாடா!


பட்டினிப் பட்டாளப்
பசிதீர்க்க வல்ல பொதி,
பதமான பொதி அடாடா!

கட்டோடு முள்ளபொதி,
களபொருள் கொண்ட பொதி,
கதியான பொதி அடாடா!

'விண்ணாங்கன்'
திரு/இலிங்கநகர்

## நினைவிருக்கும் வரை...!

காதல்...!
உன்னைப் போல்தான்
எனக்கும்
என்னைப்
பிடிக்கவில்லை!
••
செத்துத்
தொலையச் சொல்லி
தெருவில்
எறிந்துவிட்டேன்!
••
என்ன அதிசயமோ
தெரியாதடி...!
••
என் உயிர்க்குருவி
இன்னும்
பிழைத்துக்
கிடக்கிறது.
உன்



நினைவுகளை
மட்டும்
சப்பிக்கொண்டு!
••

த.தயாபரன்,
ஆரையம்பதி.



1



2




3

## யார் இவர்கள்?

இவர்கள் உங்களுக்கு நன்கு அறிமுகமான சினிமா நட்சத்திரங்கள். பெண் தோற்றத்தைக் கண்டு ஏமாந்து விடாமல் கண்டு பிடியுங்கள். சிறுமிகளாக வேஷமிட்டுள்ள சிறுவர்கள் இருவரும் இன்று பிரபல ஹீரோக்கள். முன்றாவதாக இருப்பவர் யாரென்றால்.... வேண்டாம்... சிரிப்பாக இருக்கும்; நீங்களாக கண்டு பிடியுங்களேன்!



5



4

பெண்கள் ஆண் வேடமிட்டு அசத்துகிறார்கள். ஆண் நடிகர்கள் மட்டும் பெண்களாக வேடமிடலாம் என்று சட்டமா என்ன? இந்த இருவரும் யார் என்று தெரிகிறதா? கண்டு பிடிப்பது சுலபம். விடைகள் பக்கம் 18இல்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(10.08.1997 தொடக்கம் 16.08.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மனக்குறை நீங்கும், பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- தொழில் மேன்மை, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- காரியானுகூலம், இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- உறவினர் உதவி, கடன்சுமை நீங்கும். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| **வியாழன்**- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 3 | மணி |
| **வெள்ளி**- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4**

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மனக் கலக்கம், வீண் விரோதம். | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- தொழில் கேடு, பணக் கஷ்டம். | பகல் | 11 | மணி |
| **செவ்வாய்**- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- வீண் முயற்சி, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| **சனி**- காரியக்கேடு, மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 1 | மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6**

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 3 | மணி |
| **வெள்ளி**- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. | 1 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் நஷ்டம், பணவரவு குன்றும். | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- வீண் மனஸ்தாபம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. | 1 | மணி |
| **சனி**- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன். |
| சிம்மம் | - இராகு, புதன். |
| கன்னி | - வெள்ளி. |
| துலாம் | - செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |

சந்திரன்- துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| **திங்கள்**- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- தொழில் உயர்ச்சி, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பகல் | 11 | மணி |
| **சனி**- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 1 | மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, ஆடம்பரச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- தொழில் நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| **செவ்வாய்**- வீண்குறை கேட்டல், பலவிதபேறு. | பி.ப. | 2 | மணி |
| **புதன்** - எதிர்பார்த்த நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7**

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் கஷ்டம், மனக் கவலை. | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- உயர்ந்த எண்ணம், பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- வீண்குறை கேட்டல், அந்நியர் பகை. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- முயற்சி பலிதம், தொழில் மந்தம். | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| **வெள்ளி**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| **சனி**- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, ஆடம்பரச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- தொழில் நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| **செவ்வாய்**- வீண்குறை கேட்டல், பலவித பேறு. | பி.ப. | 3 | மணி |
| **புதன்**- எதிர்பார்த்த நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- வீண் முயற்சி, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7**

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், கடன் சுமை. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |
| **சனி**- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5**

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், பண வரவு. | பகல் | 11 | மணி |
| **செவ்வாய்**- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், பலவித பேறு. | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| **சனி**- வீண்குறை கேட்டல், இனச்சன விரோதம். | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7**

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- பெரியோர் நன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | பகல் | 11 | மணி |
| **வியாழன்**- கடன் சுமை, யோசனை மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- பிரயாண மிகுதி, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| **சனி**- உறவினர் இழப்பு, மனக் கவலை. | பி.ப. | 3 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3**



படிப்பகம்





பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை
பெற்றுவிட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்ச மென்பதில்லையே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## வினை விதைத்தால்...

சீன நாட்டில் ஒரு கிராமத்தில் ஒரு பணக்காரர் இருந்தார். இவர் தன்னிடம் வேலை செய்யும் ஆட்களை அடிமைகளைப் போல நடத்தி வந்தார்.

இவரிடம் சுங் என்னும் ஒருவன் வேலை செய்து வந்தான். மிகவும் விசுவாச முள்ள ஊழியன். அத்துடன் நன்றாக வேலை செய்வான். இருப்பினும் பணக்காரர் அவனை அடிப்பார், திட்டுவார். தனது வறுமை காரணமாக சுங் இவற்றை எல்லாம் பொறுத்து வந்தான்.

ஒருநாள் அந்தப் பணக்காரரை பக்கத்து ஊர்க்காரர் ஒருவர் விருந்துக்கு அழைத்திருந்தார். பணக்காரரும் சுங்கைத் துணையாக அழைத்துக்கொண்டு அங்கு சென்றார்.

பணக்காரருக்கு நல்ல விருந்து கொடுக்கப்பட்டது. வயிறு முட்டச் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்காரருடன் வெளியே வந்தார் பணக்காரர்.

வெளியே குதிரையுடன் நின்ற சுங்கைக் கண்ட வீட்டுக்காரர் திடுக்கிட்டார். அவர் பணக்காரரைப் பார்த்து,

"இவனை ஏன் வெளியே நிற்க வைத்தாய்? இவனையும் விருந்துக்கு அழைத்து வந்திருக்கலாம் அல்லவா?" என்றான்.

"பரவாயில்லை, நான் சாப்பிட்டால் அவன் சாப்பிட்ட மாதிரித்தான்," என்று கூறினான் பணக்காரர்.

இதைக் கேட்டு சுங் மிகவும் கவலைப்பட்டான். ஆனாலும் அவன் எதுவும் பேசாமல் பணக்காரருடன் சென்று விட்டான்.

• • •

ஒருநாள் பணக்காரரும், சுங்கும் பக்கத்து ஊருக்குப் புறப்பட்டனர். அந்த ஊருக்குப் போவதென்றால் ஓர் ஆற்றைக் கடக்க வேண்டும். இருவரும் படகொன்றில் ஏறி ஆற்றில் சென்று கொண்டிருந்தனர். திடீரென்று ஒரு பெருங்காற்று வீசியது.



இதனால் படகு கவிழ்ந்தது. இருவரும் ஆற்றில் விழுந்து விட்டனர். சுங்கிற்கு நன்றாக நீச்சல் தெரியும். எனவே அவன் கரையை நோக்கி நீந்தத் தொடங்கினான்.

நீந்தத் தெரியாத பணக்காரர், கெஞ்சும் குரலில்,

"சுங்! என்னைக் காப்பாற்று! காப்பாற்று!" என்று சத்தமிட்டார். நீந்திக் கரைசேர்ந்த சுங் பணக்காரரைப் பார்த்து,

"பரவாயில்லை ஐயா, நான் ஆற்றைக் கடந்தால், அது நீங்கள் ஆற்றைக் கடந்த மாதிரித்தான். நான்போய் வருகிறேன்." என்று கூறிவிட்டு சுங் நடக்க ஆரம்பித்தான்.

தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்த பணக்காரருக்கு, 'வினை விதைத்தவன் வினையைத்தான் அறுவடை செய்ய வேண்டும்,' என்று அப்போதுதான் புரிந்தது.

## அதிசயம் - ஆனால் உண்மை!



**கடல் முயல்**

இது நான்கு மாத காலத்திற்குள் 47 கோடி 80 இலட்சம் முட்டைகள் இடும்.

**மடோனா ஓவியம்**


ஸ்பெயின் நாட்டுப் படை, இத்தாலிய நாட்டு பியோரனோ அரண்மனையை ஆக்கிரமித்து, அதைத் தீக்கிரையாக்கியது. எல்லாம் அழிந்தும்கூட அதற்குள் இருந்த மடோனா ஓவியம் ஒரு கீறல் கூட விழாமல் விந்தையாகத் தப்பியது.



**சேர்ச் ஒ.்ப் கிறைஸ்ட்**

அவுஸ்திரேலியாவில் பலன்டீன் என்ற இடத்தில் உள்ள இந்தத் தேவாலயம் ஒரே நாளில் கட்டி முடிக்கப்பட்டது.

1913ம் ஆண்டு ஜனவரி மாதம் 4ம் திகதி 120 பேர் சேர்ந்து இதனைக் கட்டி முடித்தனர். மறுநாளே இங்கு பிரார்த்தனை நடைபெற்றது.



**பச்சோந்தியின் கண்கள்**

பச்சோந்தியின் கண்கள் இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பின்றித் தாமாக இயங்கும் தன்மையுடையன. பச்சோந்தியால் ஒரே நேரத்தில் இருதிசைகளில் பார்க்க முடியும்.



## வாரம் ஒரு நாடு

## கேப்வேர்ட்

| | |
|---|---|
| தலைநகர் | - பிராயா |
| பரப்பு | - 4,033 சதுர கிலோமீட்டர் |
| மக்கள் தொகை | - 4 இலட்சம் |
| மொழி | - போர்த்துக்கீஸ், கிரியோலோ |
| எழுத்தறிவு | - 37% |
| சமயம் | - கிறிஸ்தவம் |
| நாணயம் | - எஸ்குடோ |
| தனிநபர் வருமானம் | - 800 டொலர். |



**அமைவிடம்:**

கிழக்கு அட்லாண்டிக் கடலில் அமைந்துள்ளது. பல தீவுக் கூட்டங்களால் ஆன கேப்வேர்ட், டாக்கரில் இருந்து 600 கிலோமீட்டர் மேற்கில் அமைந்துள்ளது.

**வரலாறு:**

டிகோ கோமஸ் என்பவர் 1460ல் இத் தீவுக் கூட்டங்களைக் கண்டுபிடித்தார். 1587ல் போர்த்துக்கேயரின் ஆளுகைக்குட்பட்டது. 1975ல் சுதந்திரமடைந்தது. 83 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கிறது. சுமார் 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட கேப்வேர்டியன்கள் அயல்நாடுகளில் வாழ்கின்றனர்.

**பொருளாதாரம்:**

உப்பு, மீன், கோப்பி போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தேங்காய், கரும்பு, பழவகைகள் முக்கிய விவசாயப் பொருட்கள். கைத்தொழிற்துறையில் முன்னேற்றம் அடையவில்லை.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.08.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 205
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 203

பரிசுக்குரியவர்:
சி.அன்பழகன்,
மன்/நானாட்டான் ம.வி, நானாட்டான்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம்.பரமேஸ்வரி, ஸ்ரீ முத்துமாரி அம்மன் தமிழ் மகா வித்தியாலயம், கம்பளை. | ஜெ.பிரதாபன், மட்/ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம், ஏறாவூர்-4. |
| அ.அ.முஹம்மத் அஸாம், சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | மு.அ.மு.பதீக், மில்லத் மகளிர் மகா வித், காத்தான்குடி-03. |
| கி.ஹேமவாசன், தி/சூனித்தீவு நாவலர் வித்தி, சம்பூர். | செல்வி வி.பிரதீபா, சைவமங்கையர் கழகம், வெள்ளவத்தை. |
| எம்.எம்.நிலூஜான், களு/ஜீலான் மத்திய கல்லூரி, ஹேனமுல்லை, பாணந்துறை. | ஐதா இராஜகிளி, காக்கை தீவு,மட்டக்குளிய, கொழும்பு-15. |
| செல்வி சாந்தப்பிரியா கோபாலசிங்கம், விபுலாந்தா மத்திய கல்லூரி, காரைதீவு-04. | செல்வி .்.பாத்திமா .்.பய்ஹா .்.பாரீஸ், கேம்பிரிட்ஜ் சர்வதேச பாடசாலை, மாத்தளை. |

## அபூர்வ ஒற்றுமைகள்

ஒருவருடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் சரியாக 100 வருடங்களுக்குப் பின்னர், அதே துறையில் இருந்த இன்னொருவருடைய வாழ்க்கையில் பல ஒற்றுமைகளுடன் நடந்திருக்கின்றன.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான



லிங்கன்



கென்னடி

ஆபிரகாம் லிங்கனும், ஜோன் கென்னடியினதும் வாழ்க்கையிலேதான் இந்த அபூர்வ ஒற்றுமைகள் நிகழ்ந்துள்ளன.

1860ல் அமெரிக்க ஜனாதிபதியாக ஆபிரகாம்லிங்கன் தேர்ந்தெடுக்கப்பட்டார். சரியாக 100 வருடங்களுக்குப்பின் 1960ல் கென்னடி ஜனாதிபதியானார்.

லிங்கனின் உதவியாளர் பெயர்: கென்னடி. கென்னடியின் உதவியாளர் பெயர்: லிங்கன்.

இரண்டு ஜனாதிபதிகளுமே கொலை செய்யப்பட்டனர். இருவர் இறக்கும் போதும் அவர்களுடைய மனைவியர் அருகிலேயே இருந்தனர். இருவர் இறந்த நாளும் வெள்ளிக்கிழமை.

லிங்கனை தியேட்டர் ஒன்றில் இருந்து கொன்றவன் களஞ்சியச்சாலை ஒன்றில் இருந்து பிடிபட்டான். கென்னடியைச்சுட்டவன் தியேட்டர் ஒன்றில் இருந்து பிடிபட்டான்.

இரண்டு கொலையாளிகளின் பெயர்களும் 15 எழுத்துக்கொண்டவை. விசாரணைக்கு வருமுன்னரே இரண்டு கொலையாளிகளும் இறந்து விட்டனர்.

லிங்கனுக்குப் பிறகு ஜனாதிபதியாக இருந்தவர் அன்ட்ரூ ஜோன்சன். இவர் பிறந்தது 1808. கென்னடிக்குப் பிறகு ஜனாதிபதியாக இருந்தவர் லிண்டன் ஜோன்சன். இவர் பிறந்தது 1908. இரண்டு ஜோன்சன்களின் பெயரில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை 13.

## விடுகதைகளும் விடைகளும்

1. முத்துக்கள் இருக்கும்: ஆனால் யாருமே பிரமிக்க மாட்டார்கள்.
அது என்ன?
2. வெளிச்சத்தில் உடன் வருபவன்; இருட்டில் வர ம்ாட்டான்.
அவன் யார்?
3. நாளுக்கொரு வளர்த்தி கொண்டவன்; நாநிலம் மயங்கும் இசையுடையவன்.
அவன் யார்?
4. ஒட்டியவன் ஒருவன், பிரித்தவன் இன்னொருவன்.
அது என்ன?
5. நோயுமில்லை, நொடியுமில்லை; ஆனாலும் நாளும் மெலிகிறான்.
அவன் யார்?
6. நீளமாய் வளர்ந்திருக்கும்; நிழலும் இல்லை, உயிருமில்லை.
அது என்ன?
7. கோவிலுக்குள்ளே வெள்ளை, கோவிலைச் சுற்றி கறுப்பு.
அது என்ன?
8. மூன்றெழுத்துப் பெயராகும், முற்றும் வெள்ளை நிறமாகும்.
அது என்ன?
9. அடர்ந்த காட்டின் நடுவே ஒற்றையடிப்பாதை, யாரும் நடக்காத பாதை.
அது என்ன?
10. சின்னதாய் சிவப்பு, முழுசாய் பச்சை.
அது என்ன?

**விடைகள்**

1. வெண்டைக்காய் 2. நிழல்
3. மூங்கில் 4. கடிதம் 5. நாட்காட்டி
6. வழிப்பாதை 7. சோற்றுப்பானை
8. பஞ்சு 9. தலைவகிடு 10. கிளி

தொகுப்பு: செல்வி.எஸ்.றிஸ்மியா.

## பெரிகிரின் பறவை

பிற உயிரினங்களைப் பிடித்துக் கொன்று தின்னும் பறவைகளுள் ஒன்று தான் பெரிகிரின் பறவை. புறா, குயில் மற்றும் கடற்பறவைகள்தான் இதன் பிடித்த உணவு.



பெரிகிரின் பறவை உயரத்தில் பறந்து கொண்டிருக்கும்போது சிறு பறவைகளைக் கண்டால், பருந்தைப் போன்று திடீரென்று கீழே பறந்து பிடித்துவிடும்.

பெரிகிரின் பறவை குஞ்சு பொரிக்கும் காலங்களில் மட்டும் கடற்கரைப் பிரதேசங்களில் வாழும். கடற்கரை ஓரங்களில் காணப்படும் பாறைகளின் பள்ளங்களில் இது முட்டையிடும். சில சமயங்களில் கடற்கரை ஓரங்களில் உள்ள மரங்களில் காணப்படும் வேறு பறவைகளின் கூடுகளைத் தனதாக்கி அதில் முட்டையிடும்.

இனவிருத்தி செய்யும் காலங்களில் பெண் பெரிகிரின் பறவைகள் கூட்டிலேயே இருக்கும். அக்காலங்களில் ஆண் பறவைகள் தான் இவற்றிற்கும் சேர்த்து இரை தேடும். பெண் பறவைகள், ஆண்பறவைகளை விட உடலமைப்பில் மிகவும் பெரியவை.

ஆசிய நாடுகளில் அதிகமாக உள்ள பெரிகிரின் பறவையை மனிதர்கள் பழக்கி அதனைச் செல்லப் பிராணியாக வீடுகளில் வளர்க்கின்றனர்.

## ஒருவரிச் செய்திகள்

* உலகிலேயே தக்காளி அதிகம் உற்பத்தியாகும் இடம்-அமெரிக்கா.
* உலகில் கோப்பி அதிகமாக விளையும் இடம்- பிரேஸில்.
* உலகில் பருத்தி அதிகம் உற்பத்தியாகும் நாடு- சீனா.
* உலகிலேயே திராட்சை அதிகம் விளையும் இடம்- ஃபிரான்ஸ்.
* உலகில் தங்கம் அதிகம் கிடைக்கும் நாடு- தென் ஆபிரிக்கா.
* உலகில் பார்லி அதிகம் உற்பத்தி செய்யப்படும் நாடு- ரஷ்யா.
* உலகிலேயே கம்பளி அதிகமாக உற்பத்தி செய்யப்படும் இடம்- அவுஸ்திரேலியா.

www.padippakam.com



# உடைந்த இரவு




**சென்றவாரம்**

திடுக்கிட்டுப் போன மைத்ரேயி கதவைத் திறக்கிறாள். பாஸ்கர் கட்டிலுக்குக் கீழே ஒளிகிறான். வாசலில் வையாபுரியின் மனைவி, 'மாமாவிற்குத் தலைவலி' என்கிறாள்,

தலைவலி மாத்திரையை எடுத்துக் கொடுத்து விட்டுக் கதவைச் சாத்துகிறாள் மைத்ரேயி. பாஸ்கருக்கு ஃபர்ஸ்ட் எய்ட் முடித்து வீட்டிலிருந்து அனுப்பிவிடுகிறாள்.

மறுநாள் அலுவலகத்தில் ஊழியர்களின் முழு விபரங்களையும் கம்பியூட்டரில் ஆராய்கிறாள். பாஸ்கர் சந்தேகப்படும் ஆவடி முகவரி எதுவும் பெண் ஊழியர்களில் இல்லை. ஆண்களில் பட்டாபி என்ற வெல்டர் மட்டும்தான் ஆவடியிலிருக்கிறான்.

அத்தகவலை பாஸ்கருக்கு தொலைபேசியில் தெரிவிக்கிறாள்.

**இனி...**

பாஸ்கர் அந்த முற்பகல் வேளையில் தன்னுடைய பைக்கை அந்த டிடெக்டிவ் ஏஜென்ஸிக்கு முன்பாய் நிறுத்திவிட்டு மாடிப்படிகள் ஏறி மேலே போனான்.

'ஹெல்ப்பிங் ஹாண்ட்' என்ற பெயர்ப் பலகை சுவரில் அப்பியிருக்க அதையொட்டி கதவு திறந்திருந்தது.

பாஸ்கர் உள்ளே நுழைந்தான்.

டைப்ரைட்டிங் மெஷினைத் தட்டிக் கொண்டிருந்த ஒரு பெண் தற்காலிகமாய் தட்டுவதை நிறுத்தி விட்டு நிமிர்ந்தாள். போட்ட மேக்கப் அவளை அழகி என்று சொல்ல வைத்தது. உதடுகளில் தீற்றியிருந்த லிப்ஸ்டிக் அழிந்துவிடாமல் ஜாக்கிரதையாய் பேசினாள்.

"யார் ஸார் வேணும்...?"

"இங்கே 'தாமு'ன்னு...?"

"பக்கத்து ரூம்ல இருக்கார்... போங்க!" போனான்.

டெலிஃபோன் பேசிக் கொண்டிருந்த அந்த இருபத்தைந்து வயது தாமு பாஸ்கரைப் பார்த்ததும் மலர்ந்தான். டெலிஃபோனை கட் செய்துவிட்டு "வாடா" என்றான். நாற்காலியை கண்களால் காட்டி "உட்கார்" என்றான்.

"உட்கார நேரமில்லை- ஒரு நிமிஷம் வெளியே வாறியா?"

"ஏதாவது முக்கியமான விஷயமா?"

"இல்லாமே வருவேனா...?"

"ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ண முடியுமா?"

"எதுக்கு...?"

"என்னோட பாஸ் இன்னும் ஆபீஸுக்கு வரலை. அவர் இல்லாத சமயங்கள்ல நான் ஆபீஸ்ல இருந்தாகணும். ஏன்னா முக்கியமான ஃபோன்கால் ஏதாவது வரலாமில்லையா...?"

"உன்னோட பாஸ் பத்து நிமிஷத்துக்குள்ளே வந்துடுவாரா?"

"வந்துருவார்ன்னு நினைக்கிறேன். சில சமயங்களில் லேட்டாக கூட வரலாம்!" சொன்ன தாமு கேட்டான், "என்ன விஷயம்..?"

"அது வந்து...."

"நீ வெளியே போய் சொல்ல வேண்டியதை இங்கேயே சொல்லலாம். யாரும் வரமாட்டாங்க...."

பாஸ்கர் உட்கார்ந்தான்.

"எனக்கு உன்னோட ஆபீஸில் இருக்கற யாருக்கும் தெரியக்கூடாது. நீ என்னோட ஸ்கூல்மேட் என்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் வந்தேன்."

தாமு சிரித்தான்.

"விஷயம் வெளியே யார்க்கும் தெரிஞ்சுடக்கூடாதுங்கிறதுக்காத்தானே டிடெக்டிவ் ஏஜென்ஸியை வெச்சு நடத்திட்டு வர்றோம். உன்னோட பிரச்னை என்ன... மொதல்ல அதை சொல்லு?"

பாஸ்கர் குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னான்:

"ஒரு ஆளைப் பத்தின விஷயங்களை ரகசியமாக சேகரிச்சு கொடுக்கணும்...."

"இவ்வளவுதானே...? இதுக்கா இவ்வளவு பீடிகை போட்டே.... இந்த மாதிரியான வேலைகளை பண்றதுக்காத்தானே நாங்க டிடெக்டிவ் ஏஜென்ஸியை வெச்சிருக்கோம்.... ஆள் யார்ன்னு சொல்லு. இருபத்திநாலு மணி நேரத்துக்குள்ள அந்த ஆளைப்பற்றி எல்லா தகவல்களும் என்கையில் இருக்கும்..."

"தாமு.....! இது என்னோட பர்சனல் மேட்டர் விஷயம் உன்னோட பாஸுக்கோ இந்த ஏஜென்ஸியில வேலை பார்க்கிற மத்தவங்களுக்கோ தெரியக்கூடாது."

"தெரியாது! ஆள் யார்ன்னு நீ சொல்லு...."

"நோட் பண்ணிக்க. பேர் பட்டாபி. வயசு இருபத்தேழு. தொழில் வெல்டர். அட்ரஸ் நெம்பர் நூத்தி நாற்பத்தியொண்ணு, ஏரிக்கரை ரோடு, மஹாராணி நகர், ஆவடி...."

தாமு குறித்துக்கொண்டு கேட்டான். "இந்த பட்டாபியை உனக்குத் தெரியுமா...?"

"தெரியாது...."

"பார்த்திருக்கியா....?"

"இல்லை."

"எந்த கம்பெனியில் வேலை பார்க்கிறான்?"

"மேகா இண்டஸ்ட்ரீஸ்"



## க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

"இவனால உனக்கு என்ன பிரச்னை பாஸ்கர்?"

"ஸாரி...! அது உனக்கு வேண்டாம். வெளியே சொல்ல முடியாதபடி பிரச்னைகள் இருக்கு..."

"இட்ஸ் ஓ.கே....! இந்த பட்டாபியை பத்தி முக்கியமா உனக்கு எந்த மாதிரியான விபரங்கள் வேணும்...?"

"அவனைப் பத்தி உன்னால் எவ்வளவு தகவல்கள் சேகரிக்க முடியுமோ அவ்வளவையும் சேகரி...."

"சரி. நாளைக்கு இந்நேரம்... இதே வேளைக்கு வா...! பட்டாபியை பத்தின எல்லா தகவல்களும் கிடைக்கும். உன்னால இங்கே வரமுடியாத பட்சத்துல ஃபோன் பண்ணு."

"ஃபோனெல்லாம் வேண்டாம். நான் நேர்லயே வந்தடறேன்." பாஸ்கர் எழுந்து கொண்டான்.

தாமு கேட்டான், "இன்னும் பேச்சிலர் தானா...?"

"ஆமா..."

"எப்பத்தான் கல்யாணம்....?"

"கூடிய சீக்கிரம்...."

"ஏதாவது லவ் விவகாரம் உண்டா...?"

"அதெல்லாம் கிடையாது..."

"சீக்கிரமா கல்யாணத்தைப் பண்ணுடா. முன் மண்டையில் முடி கொட்ட ஆரம்பிச்சுருச்சு. தலை வழுக்கையாயிட்டா உன்னோட பர்சனால்டி மிஸ்ஸாயிடும்..."

"ம்....ம்...." சிரித்துக் கொண்டே வெளியேறினான் பாஸ்கர்.

தாமு பட்டாபி பற்றிய குறிப்புகளை மறுபடியும் படிக்க ஆரம்பித்தான்.

மறுநாள் மத்தியானம் இரண்டு மணி...

பகல் உணவை முடித்துக் கொண்டு படுக்கையறைக்குள் நுழையப்போன மைத்ரேயியை ஹாலில் இருந்த டெலிஃபோன் கூப்பிட்டு நிறுத்தியது. போய் ரிஸீவரை எடுத்தாள்.

மறுமுனையில் பாஸ்கர்.

"மைத்ரேயி..."

"சொல்லுங்க பாஸ்கர்...."

"வீட்ல இப்ப யாரும் இல்லையே..?."

"இல்லை. நான் மட்டும்தான்.."

"உன் புருஷனோட தாய்மாமாவும் அத்தையும் ஊருக்கு போயிட்டாங்களா....?"

"இல்லை.... ரெண்டு நாள் இருந்துட்டுத்தான் போவாங்களாம். இப்ப மகாவலிபுரம் போயிருக்காங்க. ராத்திரி வீட்டுக்கு திரும்பிவர எப்படியும் எட்டுமணியாயிடும்..."

"டெல்லியிலிருந்து உன் புருஷன் ஃபோன் பண்ணினாரா?"

"நேத்து ராத்திரி பண்ணினார்..."

"மெட்ராஸ் எப்ப வர்றார்...?"

"அநேகமா நாளைக்கு வரலாம். எந்த ஃபிளைட்ல வர்றார்ன்னு உறுதியா தெரியாது.. அது சரி... பட்டாபியைப் பத்தி விபரம் ஏதாவது தெரிந்ததா...?"

"தெரிந்தது... அதைச் சொல்லத்தானே ஃபோன் பண்ணினேன்...."

"சொல்லுங்க...."

"நாம் சந்தேகப்பட்டது சரி. நம்ம ரெண்டு பேரோட நிம்மதி குலைவுக்குக் காரணம் அந்த பட்டாபிதான்...."

"ஃபோன்ல மிரட்டிட்டிருக்கிறது ஒரு பெண்ணாச்சே. அது பட்டாபியா எப்படி இருக்க முடியும்....?"

"அது பட்டாபிதான்!"

"பாஸ்கர்! நீங்க என்ன சொல்றீங்க?"

"ஹெல்ப்பிங் ஹாண்ட் டிடெக்டிவ் ஏஜென்ஸியில் இருக்கிற என்னோட ஃபிரண்ட் தாமு பட்டாபியைப் பத்தி சேகரிச்ச தகவல்கள்ல ஒரு அதி முக்கியமான தகவல் என்ன தெரியுமா?"

"என்ன?"

"உன்னோட கம்பெனியில வேலை பார்க்கிற நேரம் போக அவன் ஒரு பார்ட் டைம் ட்ராமா ஆர்ட்டிஸ்ட். மிமிக்ரி நல்லா தெரியும். பெண் குரலிலேயும் ஆண் குரலிலேயும் மாத்தி மாத்தி டூயட் பாடுறதுல கில்லாடி."

"ஈஸிட்...?"

"ஆமா...! பட்டாபிதான் பெண் குரல்ல டெலிஃபோனில் உன்கிட்ட பேசியிருக்கணும்...."

"அந்த மாதிரி எனக்கு தெரியவே இல்லையே...?"

"அதுதான் அவனோட திறமை...! டெலிஃபோன்ல உன்னை மிரட்டும் அளவுக்கு ஒரு பொண்ணுக்கு அவ்வளவு தைரியம் வராது... அது நிச்சயம் பட்டாபிதான். முந்தநாள் ராத்திரி உன்னோட வீட்டுக்கு வந்து என்னை தலையில் அடிச்சு தாக்கிவிட்டு போனதும் அவனாகத்தான் இருக்கணும்...."

"சரி அவனைப் பற்றி வேறு என்னென்ன தகவல் கிடைச்சுது?"

"கவிதை எழுதுவானாம்...."

"அப்புறம்...?"

"சமூக சேவை செய்யறதுல நாட்டமாம்."

"நமக்கு தொல்லை தர்றது பட்டாபிதான்னு எப்படி உறுதிய தெரிஞ்சுக்கிறது. பாஸ்கர்...?"

"சந்தர்ப்பம் பார்த்து மடக்கி கேட்க வேண்டியதுதான்."

"அவன் உண்மையை ஒத்துக்குவானா?"

"கேட்கிற விதத்துல கேட்டா... உண்மை தன்னால வெளியே வந்து விழும்...."

"பாஸ்கர்! நாம ஒரு காரியத்தை பண்றதுக்கு முந்தி நிறைய யோசிக்கணும். தப்பான ஆளை தண்டிச்சுட்டா பிரச்னைகள் வரும்..."

"பட்டாபி தப்பான ஆள் இல்லை. நாம சரியாகத்தான் புள்ளி வெச்சு பிடிச்சிருக்கோம்...இனிமே அவனைப் பத்தி நீ கவலைப்படாதே... மைத்ரேயி. அவன் நம்ம வழிக்கு வராதபடிக்கு பார்த்துக்க நானாச்சு..."

"பாஸ்கர்! ஜாக்கிரதை...."

"பயப்படாதே... எந்த ஒரு பிரச்சனையையும் எப்படி டீல் பண்றதுன்னு எனக்குத் தெரியும். பிரச்னையை சால்வ் பண்ணிட்டு மறுபடியும் உனக்கு ஃபோன் பண்றேன்..."

"ராத்திரி இங்கே வரமாட்டீங்களா?"

"வேண்டாம். உன் புருஷனோட தாய்மாமனும். அத்தையும் வீட்ல இருக்கும் போது நானும் அந்த வீட்ல இருக்கறது ரொம்பவும் ரிஸ்க். பிரச்னைகளை தீர்த்துகிட்ட பின்னாடி வரப்போகிற ஒவ்வொரு ராத்திரியும் நமக்குதான்"

"பாஸ்கர்..."

"ம்.... என்ன....?"

"பட்டாபியைப் பார்த்து டீல் பண்ணுங்க."

"கவலையேபடாதே!"

"உங்க ஃபோனை மறுபடியும் நான் எப்போ எதிர்பார்க்கட்டும்...?"

"நாளைக்குக் காலை பத்து மணிக்குள்ளே!" சொல்லிவிட்டு பாஸ்கர் மறுமுனையில் ரிஸீவரை வைத்துவிட மைத்ரேயியும் ரிஸீவரை வைத்துவிட்டு ஒரு பெருமூச்சோடு நகர்ந்தாள்.

பத்தடி நடந்திருப்பாள்.

ஃபோன் மறுபடியும் அலறியது...

போய் ரிஸீவரை எடுத்தாள். குரல் கொடுத்தாள்.

"ஹலோ...!"

"என்ன மைத்ரேயி...? ரொம்ப நேரமா உனக்கு டயல் பண்றேன்... லைனே கிடைக்கலை. யார்கிட்ட பேசிட்டிருந்த...?"

அதே பெண் குரல்.

மைத்ரேயி பதட்டமானாள்.

"நீ....நீ...நீ...நீ....?"

"உன்னோட மனச்சாட்சி..."

மைத்ரேயி அந்தப் 'பெண்' குரலை உற்று கவனித்தாள்.

ஒரு ஆண், பெண் குரலில் பேசுகிற மாதிரியான உணர்வு அதில் தென்படவில்லை. ஒரு பெண் பேசுவது போலவே இருந்தது.

மறு முனையில் பெண் குரல் சிரித்தது.

"என்ன மைத்ரேயி பேச்சையே காணோம்?"

"இப்ப உனக்கு என்ன வேணும்...?"

"நீ உன் புருஷனுக்கு துரோகம் பண்ணக்கூடாது. நிறுத்தணும். நான் ஏற்கனவே கொடுத்திருக்கிற அவகாசத்துக்குள்ளே ரெண்டு கோரிக்கையும் நிறைவேற்றப்படணும்.. இல்லேன்னா தண்டனை உனக்காக காத்திட்டிருக்கு...."

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: வி.மகேஸ்வரன்,
வயது: 26
முகவரி: வசந்தவிளான், தெல்லிப்பழை, யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: நியாஸ்,
வயது: 21
முகவரி: ஜிகாத் நகர், மூதூர்-7.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஆர்.சிவா,
வயது: 19
முகவரி: REICHENBACHER STR-14, 48336 SASSENBERG, GERMANY.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கரப்பந்து.

பெயர்: ஜே.மரியதாரணி,
வயது: 15
முகவரி: 48, அண்ணா வீதி, தோணிக்கல், வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: எம்.பைஸர்,
வயது: 25
முகவரி: 152, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11.
பொழுது போக்கு: கிரிக்கெட், ரீ.வி.

பெயர்: ஏ.வாஹிட்,
வயது: 25
முகவரி: P.O.BOX-368, AL-KOBAR-31952, K.S.A.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், ரீ.வி.

பெயர்: ஏ.காதர்,
வயது: 23
முகவரி: 266, டாம் வீதி, முஸ்லிம் கொலனி, தெல்தோட்டை.
பொழுதுபோக்கு: வழமையானவை,

பெயர்: எம்.அன்ஸார்,
வயது: 23
முகவரி: 21ஏ, முனாமலை, வட்டகொடபிட்டிய, அக்குரணை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம்.

பெயர்: ஏ.புஷ்பராஜா,
வயது: 24
முகவரி: 6ம் வட்டாரம், உடப்பு,
பொழுது போக்கு: வானொலி, பேனாநட்பு.

பெயர்: ஏ.குணசீலன்,
வயது: 22
முகவரி: டயரபா மேற்பிரிவு, பண்டாரவளை.
பொழுது போக்கு: பேனாநட்பு, கரப்பந்து.

பெயர்: வி.கமலநாதன்,
வயது: 24
முகவரி: LEONROD STR-31, 80636 MUNCHEN, GERMANY.
பொழுது போக்கு: ரீ.வி., கால்பந்து.

பெயர்: எம். நஸீர்,
வயது: 21
முகவரி: பிரதான வீதி, கிண்ணியா-2.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.


படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

## அத்தியாயம் 23

**இதுவரை** சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப் பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான். கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.

உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்துசேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

கணேசனுக்கும் தனக்குமிடையே காதல் மலர்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறாள். **இனி...**

சுமதி. அப்பள்ளிக் குழந்தைகளின் நிகழ்ச்சிகளை பெருவிருப்போடு பார்த்துக் களித்தாள். சின்னஞ்சிறிய, தத்தித் தத்தி, தளர் நடை நடந்து மழலை பிதற்றி அந்தக் குழந்தைகள் செய்த ஆடலும் பாடலும் அவள் உயிருக்குள் உரம் ஏற்றுவதாக இருந்தது.

ஒரு குழந்தை தட்டுத் தடுமாறி மேடையில் தோன்றியது. சட்டென்று மேடையில் பாய்ந்து வந்த வெளிச்சம் அக்குழந்தையின் கண்ணைக் கூச வைப்பதாக இருந்தது போலும். அது மிரண்டு நின்றது. யாரோ வந்து அக்குழந்தையின் முன் மைக்கை வைத்தார்கள். பிறகு அதன் காதுகளில் குனிந்து 'ம் பாடு' என்பது போல எதையோ சொன்னார்கள். அந்தக் குழந்தையோ வாயில் விரலை வைத்துக் கொண்டு சொன்னவரையும், அந்த மைக்கையும் வினோதமாகப் பார்த்தது. பிறகு திடுமென்று அது, அந்தப் பாட்டைப் பாடியது.

*"திருட்டு நரி வந்ததாம்*
*திராட்சைத் தோட்டத்தைப் பார்த்ததாம்*
*தித்திப்புப் பழம் தின்னும் ஆசையுடனே*
*திராட்சைக் குலையை*
*எட்டி எட்டிப் பாய்ஞ்சச்சாம்*
*பழத்தைப் பறிக்க முடியாமல்*
*பாவம் அந்த நரியுமே,*
*சீச்சி இந்தப் பழம் புளிக்கும் என்றே*
*சீறிவிட்டு ஓடிச்சாம்....."*

தட்டுத் தடுமாறிப் பாடிவிட்டு ஓடிச் சென்றது அந்தக் குழந்தை. சுமதிக்குப் பளிச்சென்று ஓர் புதிய சிந்தனை இந்தப் பாடலில் இருந்து தோன்றியது. அதன் அடுத்த நிகழ்ச்சியாக, மூன்று குழந்தைகள் சேர்ந்து நாடகம் ஒன்றை நிகழ்த்தினார்கள்.

"பாட்டி வடை சுட்டுக்கொண்டிருந்தாளாம். ஒரு காக்கை. அது திருட்டுக் காக்கை. அது, பாட்டி சுட்டு வைத்த வடையைக் கவ்விக் கொண்டு மரத்தின் உச்சியில் போய் உட்கார்ந்து கொண்டது. ஒரு நரி அந்தப் பக்கமாக வந்தது. நரிக்கு, காக்கையின் வடையைத் தட்டிப் பறிக்க ஆசை ஏற்பட்டது. அது காக்கையைப் பார்த்து, "காக்கையே, காக்கையே...! நீ ரொம்ப அழகாகப் பாடுவாயாமே! எங்கே பாடு?" காக்கை புகழ்ச்சிக்கு மயங்கி வாயைத் திறந்து 'கா, கா' என்றதாம். வாயில் இருந்த வடை கீழே விழுந்தது. நரி வடையை எடுத்துக்கொண்டு ஓடியது." இதை அந்த மூன்று குழந்தைகளாலும் நடிப்பதைச் சக குழந்தைகளும், பெற்றோர்களும் ஆசிரிய ஆசிரியைகளும் மிகவும் இரசித்து மகிழ்ந்து கை தட்டி ஆரவாரம் செய்தார்கள்.

சுமதி மனதில் மீண்டும் அந்தச் சிந்தனை ஒளி சுடர் விட்டது. அந்தக் கதைகள் ஏனோ இடறுவதாகப்பட்டது அவளுக்கு. மேம் போக்காகப் பார்த்தால், அவைகள் வெறும் கதைகள் என அவளுக்குத் தோன்றினாலும், உள்ளூடாகத் தவறான கருத்துக் களைச் சொல்லுகிற கதைகளாக அவளுக்குப் பட்டது.

கடைசி நிகழ்ச்சியாக ஒரு பெண், அவள் வயது சுமார் பதினாறு- பதினேழு இருக்கும் மேடையில் தோன்றி, இசைத் தட்டில் ஒரு பாட்டைப் போட்டு அதற்கு அபிநயம் பிடித்தாள்.

"கண்ணன் வருவானா?" என்று தொடங்கியது அந்தப் பாடல். மேற் பார்வையில் அந்தப்பாடல் சிருங்கார ரஸத்தைச் சொன்னாலும், அடி ஆழத்தில் மோசமான பெண் அடிமைத்தனத்தைப் பிரசாரம் செய்வதாக அவளுக்குப்பட்டது.

*'காமன் செய் களேபரத்தால்*
*என் கைவளை கழன்றது அந்த*
*காதலன் செய்த மோசத்தால்*
*இன் இடை ஆபரணம் கீழ் விழுந்தது.*
*மேனிப்பசலை கொடியாய் படர்ந்தது;*
*மெச்சினைச் சொன்ன ஊரார்*
*ஏனிப்படி என்று அவா வளர்ந்தது;*
*எப்படியோ பிழைப்பு ஆச்சு- காற்றினால்*
*எதிர்ப்படும் பஞ்சு போ வாச்சு-உயர்*
*நீரின் மேல் தெப்ப மாச்சு-கண்கள்*
*மூடிப் பல நாளாச்சு...."*

என்றெல்லாம் அந்தப்பாடல் வரிகள் சென்றன. குழந்தைகளும், இளம் சிறார்களும் பொருள் புரியாமல் ஆட்டத்தை ரசிக்க, பெற்றோர் சிலர் இடத்தில் அசைய, விசித்திரமான ஆடலாக ஒரு வழியாக அந்தப் பாடல் நடந்து முடிந்தது.

இந்தப் பாடலும் தீவிரமான சிந்தனையை அவளுக்குள் ஏற்படுத்தத் தவறவில்லை.

நிகழ்ச்சி ஒருவாறு முடிய பரிசு வழங்கி, மாணவர்களைப் பாராட்டிப் பேச அவள் அழைக்கப்பட்டாள். குழந்தைகளுக்குப் பரிசு வழங்கினாள். ஒவ்வொரு குழந்தையும் பரிசு வாங்கிக்கொண்டு, அவளிடம் கை குலுக்கி விட்டுச் செல்லும் போதெல்லாம் அவள் நெஞ்சம் நிறைந்தது. மனப்பூர்வமாக அந்தக் குழந்தைகளை மனசுக்குள் ஆசீர்வதித்தாள். தன் தாய்வீட்டில் வளரும் தன் குழந்தைகளை ஒரு கணம் நினைத்துக் கொண்டாள். அவளை அறியாமல் அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. பிறருக்குத் தெரியாத வண்ணம், தன்னை அடக்கிக்கொண்டாள் அவள். பிறகு அந்தக் குழந்தைகளை வாழ்த்திப் பேசத்தொடங்கினாள் அவள்.

அவளுக்கு முன் ஒரு கடமை இருப்பதை அவள் உணர்ந்தாள். எல்லாப் பேச்சாளர்ப் பிரமுகர்களும், செய்வது மாதிரி அந்தக் குழந்தைகளை வாழ்த்திவிட்டு அவள் வரலாம். சிறந்த பேச்சாளர் என்றபெயரைப் பையில் போட்டுக் கொள்ளலாம். தமிழறிஞர்கள் என்று சொல்லப்படுபவர்களின் வருமானம் மிக்க தொழில்கூட அது. கம்பன் விழாப் பேச்சாளராகிக் காசு பண்ணலாம். ஆனால் இதெல்லாம் இழிவு என்று அவள் எண்ணினாள். மனசில்பட்ட உண்மைகளைச் சொல்வதே உண்மை அறிவு என்று நம்பினாள். ஆகவே மனசுக்குள் எழும் கருத்துக்களுக்கு உருவம் கொடுக்கத் தொடங்கினாள் அவள்.

"ரோஜாச் செடிகளைப் போலவும், கொத்து மல்லிகைச் சரம் போலவும் இந்தக் குழந்தைகள் பேசவும், பாடவும், ஆடவும் செய்ததைக் கண்டு நான் மெய் மறந்தேன். இந்த முயற்சி அவர்கள் வாழ்நாள் முழுமையும் தொடர நான் என் மனப்பூர்வமாக அவர்களை வாழ்த்தவும் செய்தேன். இந்தக் குழந்தைகள் அனைவரும் பாடிய, பேசிய அனைத்தும் மிகச் சிறப்பாகவே இருந்தது என்பது நிஜமே. இவைகள் இலக்கணம் இல்லாதவையாக, பயிற்சி அற்றதாக இருக்கலாம். ஆனால் இந்த இலக்கணமும் ஒழுங்கும் இல்லாதவை தானே மழலை என்பது. மழலையைக் காட்டிலும் மிகச் சிறந்த பாஷை உலகத்தில், வேறு உண்டா? இல்லை என்பதே உண்மை. பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் செல்வங்களின் ஆட்டத்தை, பாட்டைப் பார்த்தும் மழலையைக் கேட்டும் ஆனந்தம் அடைந்திருப்பீர்கள். உங்கள் ஆனந்தத்தில் நானும் பங்கேற்றிருக்கிறேன் என்று கூறிக் கொள்கிறேன்.

நல்லது. இத்துடன் நான் என் பேச்சை முடித்துக் கொள்வேன், எனில், கடமை தவறியவள் ஆவேன். இந்த மழலைச் செல்வங்கள் இதுகாறும் சொன்ன கதைகளைக் கேட்கையில் எனக்குத் தோன்றுவது- இந்தக் கதைகள் மிகவும் முடத்தனமான, குழந்தைகளுக்குச் சொல்லித் தரக்கூடாத, பிற்போக்குத்தனமான கதைகள் என்பதே.

'நரி, திராட்சைத் தோட்டத்துக்குள் சென்றது; பழத்தைத் தின்ன முயற்சித்தது. முடியாமல் ஏமாந்து திரும்பியது' என்று கதை கற்றுக் கொடுக்கிற ஆசிரியர், இந்தக் கதையின் ஊடாக, 'முயற்சி தோற்கும்' என்கிற கருத்து பெறப்பட்டு, இளம் பிஞ்சுகள் மனதில் நம்பிக்கை வறட்சியை ஏற்படுத்தி விடுமா, விடாதா? அதே ஆசிரியர், அடுத்த நாள் 'முயற்சி திருவினை ஆக்கும்' என்று எப்படிச் சொல்லிக் கொடுப்பார்? அது முரண்பாடு ஆகாதா? எத்தனை காலத்துக்கு இந்த அர்த்தமற்ற கதையைச் சொல்லிக் கொடுக்கப் போகிறீர்கள்? மாறாக, இந்தக் கதையைச் சற்றே மாற்றியமைத்துப் பாருங்கள். நரி தோட்டத்துக்குச் சென்றது. பழத்துக்கு முயற்சி செய்தது. தோற்றது. ஒரு முறை முயன்றது. தோற்றது. இரண்டாம் முறை முயன்றது. தோற்றது. மூன்றாம் முறை முயன்றது. வென்றது. ஆகவே முயற்சி திருவினை ஆக்கும் என்று சொல்லிக் கொடுங்கள். இதன் பெயரே கல்வி.

காக்கை வடையைத் திருடுவதாகச் சொல்கிறீர்கள். வடை வேண்டுமானால் அதற்கு வழி திருடுவதல்ல. உழைத்துச் சம்பாதிப்பது. காசு சம்பாதிப்பது. காசைக் கொண்டு வடை வாங்குவது. உன் உணவை உழைத்துச் சம்பாதிக்க முயல் என்று சொல்லுவது தானே கல்வி? நரி போல் ஏமாற்றி உண், என்பதா கல்வி? தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். நாளைத் தலைமுறைக்கு, கல்வியின் பெயரால், முயற்சியின்மையையும், ஏமாற்றுதலையும், தட்டிப்பறித்தலையுமா சொல்லிக் கொடுக்கப் போகிறீர்கள்? யோசியுங்கள்.

ஒரு பெண், கண்ணன் மேல் காதல் கொண்டு கைவளை கழல, இடை ஒட்டியாணம் நெகிழ, மோகம் கொண்டு பாடியதை நீங்கள் பார்த்தீர்கள். கேட்டீர்கள். நான் உங்கள் முன் வைக்கிற கேள்வி இதுதான்: இன்னும் எத்தனை காலம் பெண்களாகிய நீங்கள், ஆண்களுக்காக ஏங்கப் போகிறீர்கள்? அவனுக்காக நீங்கள் கைவளை நெகிழ்வதும், இடை ஒட்டியாணம் நெகிழ்வதுமாக எத்தனை காலத்துக்கு ஏங்கப் போகிறீர்கள்? இரண்டாயிரம் ஆண்டு காலமாக, இப்படி ஏங்கியே இளைத்துப் போவதைக் குறித்து, என்றேனும் நீங்கள் வெட்கப்பட்டதுண்டா? ஒரு மாறுதலுக்காகவேனும், கொஞ்ச காலத்துக்கு உங்களுக்காக, கண்ணன்கள் நெகிழட்டுமே, ஏங்கட்டுமே? ஏன் செய்யக் கூடாது? இது போன்ற உணர்வுக்கு இரண்டு பேரின் ஒன்றிணைப்பும் தேவை தானே? இருகைகளும் சேர்ந்தால்தானே இசை பிறக்கும்? பெண்ணை அடிமை செய்யும் இது போன்ற சிந்தனையின் வேர் எது? ஆண் என்பவன் வெளி உலகத் தொடர்பு உடையவன். பெண் என்பவள் வீட்டில் இருப்பவள். ஆண் சம்பாதிப்பவன். பெண் சமையல் செய்பவள். ஆண் பல பெண்களுடன் இன்பம் துய்ப்பான். பெண் அவனை எதிர்பார்த்து வீட்டில் இருப்பவள்-போன்ற கருத்துக்களிலேயே கொண்டு சேர்க்கும். ஆகவே, இனியும் பழம் பாடல்களை, பழம் பொருள்களில் பாடும் நிலை நீங்க வேண்டும். புதிய வாழ்க்கையை, புதிய சிந்தனைகளை கதை ரூபத்திலும் பாடல் ரூபத்திலும் நாம் உருவாக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். உருவாக்கினால் மட்டுமே, நாம் புதிய மனிதர்களை உருவாக்கியவர் ஆவோம். காலத்துக்கு ஏற்ற புதிய வாழ்க்கை நெறிகளை உருவாக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். மொத்தத்தில் நாம் புதிய மனிதர்களை உருவாக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்."

விழா முடிந்து வெளியே வந்தார்கள் சுமதியும் கல்பனாவும்.

கல்பனா சொன்னாள்!

"ஊருக்கு உபதேசம் என்பார்களே, அது மாதிரித்தானே?"

"என்ன சொல்றே?"

"காலத்துக்கு ஏற்ற புதிய நெறிகளை உருவாக்க வேண்டும் என்கிறாய். நீ மட்டும் பத்தாம்பசலியாக, ஒரு கயவனிடம் சிக்கிக் கொண்டு, அந்தக் கயவனைக் கணவன் என்று தொழுது கொண்டு இருக்கிறாய். இது முரண்பாடாகத் தோன்றவில்லையா?"

"இந்த பந்தத்தை அவ்வளவு சுலபமாக அறுத்தெறிய முடியவில்லையே, கல்பு?"

"ஏன் அறுத்தெறிய முடியாத அளவுக்கு அது என்ன கல்லில் வெட்டிய எழுத்தா? கல்யாணம், கணவன் எல்லாம் உயர்வானது தான். இல்லை என்று சொல்லவில்லை, ஆனால், கல்யாணத்தின் தத்துவத்தை உணர்ந்து மனைவியைக் கௌரவப் படுத்துகிற கணவனை அடைந்தவளுக்கு அது பெரிதுதான். ஆனால்; மனைவியைச் சந்தேகப்படுகிற- மனைவியைச் சதா கைதொட்டு அடிக்கிற, அன்பாய் இரண்டு வார்த்தை அவளிடம் பேச முடியாத ஒருவனை மணந்த பெண்ணுக்குக் கல்யாணம், உயர்வானதாக, மரியாதைக்குரியதாக இருக்கும் தானா? பழங்காலத்து ராஜகுமாரி கதைகளில் படித்திருப்பாய். யாராவது அசுரர்கள், ராஜகுமாரியை, ஏழு கடல் தாண்டி ஒரு தீவில் தூக்கிக் கொண்டு போய்க் குடி வைப்பார்கள். அந்த ராஜகுமாரி சந்தோஷமாக இருப்பாளா? யாராவது இளவரசன் வந்து சிறை எடுக்க மாட்டானா என்றுதானே எதிர்பார்த்துக் கொண்டு இருப்பாள்?"

(தொடர்ந்து வரும்)

**பிரபஞ்சன்**





# உறுதி

மங்களேஸ் ஞாயிற்றுக்கிழமைகளில் செய்யும் முதல்வேலை, அந்தவாரம் வந்த கடிதங்களுக்குப் பதில் எழுதுவது. அதன் பின் தான் ஏனைய வேலைகளில் ஈடுபடுவான்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருமலைக்கு மாகாணசபை நிறுவனமொன்றில் எழுதுவினைஞர் வேலை கிடைத்து வந்து, இரு வருடங்களுக்கு மேலாகியும் இன்னும் விடுமுறையில் வீடு செல்லவில்லை.

தாய், சகோதரங்கள், நண்பர்களைப் பார்த்து நீண்டநாட்களானாலும், அவர்களுடன் கடிதமூலமாவது தொடர்பு கிடைக்கிறதே என்ற நிம்மதியில்தான் மங்களேஸ் இருந்தான்.

"....தம்பி, உன்னுடைய பொறுப்பிலைதான் உன்னுடைய தங்கைகள் இருவரும் இருக்கிறார்கள். குடும்ப நிலையை உணர்ந்து நடந்துகொள். அவர்களுக்கு நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுத்த பின்தான் நீ உனக்கொரு வாழ்க்கையை அமைக்க வேணும், இதை உனக்குச் சொல்லத் தேவையில்லை; உனக்கே விளங்குந்தானே!" அம்மாவின் கடிதத்தில் இருந்த வரிகள்தான் இவை.

மங்களேஸ் தன் இதயத்தில் தர்சனாவுக்கு இடம் கொடுத்துவிட்டான் என்பது அவன் தாய்க்கு தெரியாது.

"மங்களேஸ்! உங்களது நட்பு எனக்குக் கிடைத்தது பெரும் பாக்கியம். உங்கள் நட்பே எனக்குக் கிடைத்ததைப் பெரும் பாக்கியமாக நினைக்கிற எனக்கு, நீங்களே என் வாழ்க்கை முழுவதும் துணையாக் கிடைச்சிட்டா எவ்வளவு நல்லா இருக்கும்," என ஒரு நாள் தர்சனா சொன்னதை மங்களேஸ் எதிர்பார்க்கவில்லை.

"தர்சனா! எனக்கு உங்களைப் பிடிக்கவில்லையென்றால் அது பொய். ஆனாலும் எனது குடும்ப நிலமைக்காக நான் எனது ஆசைகளை தவிர்க்க வேண்டியநிலையிலை இருக்கிறன். அதனாலை எனக்குக் காதல் சரிவராது," என்றான்

"அப்போ குடும்பக் கஷ்டத்துக்காக கல்யாணமே செய்து கொள்ளப்போவதில்லையா?" தர்சனாவின் கேள்வியிலும் நியாயமிருந்ததுதான்.

"காதல் வேறை, கல்யாணம் வேறை, கல்யாணம் செய்ய வேண்டிய நேரத்திலை செய்யத்தான் வேண்டும். காதலைத்தான் நான் வேண்டாமெண்டுறன். அதனாலை நிறையப் பிரச்சனை வரும்."

"ஏன் என்னை நீங்கள் காதலிக்கிறதாலை என்ன பிரச்சனை வரப்போகுது?"

"பிரச்சனை வருவதற்கு வழி சொல்ல வேண்டியதில்லை. காதலித்துக் கொண்டிருக்கும் போது, உங்கவீட்டுக்கு அது பிடிக்காமப்போய் உன்னை வேறை இடத்திலை கல்யாணஞ்செய்து வைக்கப்போனால், நான் உன்னை வேளைக்கே கல்யாணஞ்செய்ய வேண்டிய நிலை வரும். வந்தால் என் குடும்ப நிலமை என்னவாகும்?" என்ற மங்களேஸுக்கு "இதுக்காகத்தான், என்னை காதலிக்கத் தயங்குகிறீர்களா?" என்ற தர்சனாவின் அலட்சியமான கேள்வி அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"என்ரை வீட்டை உங்களைப் பிடிக்காமல் என்னை வேறை ஒருத்தருக்குக் கல்யாணஞ்செய்ய நினைத்தால், நான் ஒத்துக்கொண்டால்தானே அப்பிடிச் செய்ய முடியும்?" என்றவள் தொடர்ந்தாள்,

"எங்கடை வீட்டை எதிர்த்து உங்கள் கடமைகளை முடிச்சு நீங்கள் வரும் வரை உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்க என்னாலை முடியும்."

தர்சனாவின் உறுதி, மங்களேஸின் உறுதியைத் தளம்பச் செய்துவிட்டது.

"...அம்மா! நீங்கள் தங்கைச்சியாட்களின் கல்யாணத்தைப் பற்றி எந்த நேரமும் யோசிச்சு மனதைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருக்க வேண்டாம்.

தங்கைகளுக்கு ஒரு வழி செய்திட்டுத்தான் நான் என்ரை வாழ்க்கையைப்பற்றிச் சிந்திப்பன்.

அவர்களுக்குக் கல்யாணஞ் செய்து வைச்ச பிறகுதான், நான் ஒரு வாழ்க்கையை அமைச்சுக் கொள்ளுவன்." என தாய்க்கு நீண்ட பதில் கடிதம் வரைந்து கொண்டிருந்தான் மங்களேஸ், கதவு தட்டப்படுகிறது. "வாங்க....!" கடிதம் எழுதியவாறே அழைத்தான். தர்சனாவின் தர்சனம் மங்களேஸுற்குக் கிடைத்தது. "என்ன தர்சனா! இந்த நேரம் உங்களை எதிர்பார்க்கவில்லையே!" என ஆச்சரியத்துடன் கேட்டான். ஆனால்,-

அவளது முகத்தில் வழக்கமாக மின்னிக் கொண்டிருக்கும் பிரகாசத்தை இன்று காணவில்லை.

"உங்களைப் பார்க்க வேணும்போலை இருந்தது. அதுதான்..." என்றவளின் பேச்சிலும் இருந்த சோர்வை அவதானித்த மங்களேஸ், "என்ன! ஒரு மாதிரியா இருக்கிறியள்? என்ன நடந்தது?" என்றான்

**"தர்சனா! எனக்கு உங்களைப் பிடிக்கவில்லையென்றால் அது பொய்"**

"ஒன்றுமில்லை," என்று அவளது தலையசைப்பு ஏதோ நடந்துவிட்டது என்பதை மங்களேஸுக்குச் சொன்னது.

மீண்டும் "என்ன தர்சனா? என்ன நடந்தது?. எதுவாக இருந்தாலும் சொல்லுங்க!" என்றான் மங்களேஸ். பதிலில்லை.

தர்சனா தயங்கினாள்.

'எப்படிச் சொல்வது? எவ்வளவு உறுதியோடு சொன்ன விடயத்தை இன்று காப்பாற்ற முடியவில்லை என்பதை எப்படிச் சொல்வது?' தயங்கினாள்.

எவ்வளவு தான் உறுதியாக இருந்தாலும் விதி நினைத்தால் நம் வாழ்க்கையை எப்படி வேண்டுமென்றாலும் மாற்றிவிடும், என்பதை நடைமுறையில் உணர்ந்தாள்.

"எங்கடை காதல் விசயம் வீட்டுக்குத் தெரிஞ்சுபோய் பெரிய பிரச்சனை; எனக்கு உடனடியா வேறை இடத்திலை கல்யாணஞ் செய்ய அலுவல் பார்க்கிறாங்கள். நிச்சயம் கட்டாயத் திருமணம் செய்துவைப்பாங்க. என்னால உங்களைத் தவிர வேறை ஒருத்தரோடையும் இனி வாழமுடியாது. இதற்கு இரண்டு வழிதான் உண்டு. நான் சாகவேணும்; இல்லையென்றால் நீங்க என்னை ஏற்க வேணும்" என்றவள். தொடர்ந்தாள்.

"உங்கடை நிலைமையை நீங்கள் முதலிலையே சொல்லியிருக்கிறியள், இருந்தாலும் இதைத்தவிர வேறை என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை."

இதற்குமேல் மங்களேஸால் என்ன சொல்ல முடியும். குடும்பத்திற்காக காதலையோ, காதலுக்காக குடும்பத்தையோ விட முடியுமா?

தாய்க்கு எழுதிய கடிதத்தை கிழித்து குப்பைக் கூடைக்குள் போட்டான். அவனது மூவாயிரத்து இருநூறு ரூபா சம்பளத்தில் தர்சனாவும் பங்கு பெறப்போவது உறுதியாகி விட்டது.



யாழ் மு.கலை



படிப்பகம்

www.padippakam.com

# அக்கரையில் கரைபவர்கள்

**கலைவாணி இராஜகுமாரன் — கனடா**

**"என்ன கட்டிலெல்லாம் அமர்க்களப்படுது?"**
**"அது தெரியாதே? கனடாவில் இருந்து மூத்த பொடியன் வாறானாம்!"**

அரவங்களற்ற ஒரு ஞாயிற்றுக் கிழமையின் சோம்பல் மதியம். கொழும்பு நகரத்தின் பரபரப்புக்களிலிருந்து ஓரளவு தள்ளி இருக்கிற தெஹிவளைப் பகுதியிலுள்ள வீடொன்றின் முன்புறம்-சாய்வு நாற்காலியில் நான்....

உறக்கத்திற்கும் விழிப்புக்குமாகத் தாவிக் கொண்டிருந்த என்னை உலுக்கி எழுப்பினாள் மனைவி. நான் கண்டு கொண்டிருந்தது ஒரு சுகமான கனவு...! மாமர நிழலில் கூழ் குடித்துக் கொண்டிருந்தவனை அற்ப காரணத்திற்காக எழுப்பி விட்டாளே, என்கிற ஆதங்கத்தில் கத்தினேன்.

"என்ன குடிமுழுகிப் போச்சே....,"

"இல்லை. அங்கை பாருங்கோ...."



அவள் கை காட்டிய திசையில் அதாவது எதிர் வீட்டின் முன்பாக ஒரு லொரி நின்றிருந்தது. அதிலிருந்து சிலர் புதிய கட்டில் ஒன்றை இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

"என்ன உவையள் கனடாவுக்குப் போவேல்லையோ...?" நான் மனைவியைக் கேட்டேன்.

."போகத்தான் போகினம். அதுக்கு இன்னும் நாள் கிடக்குத்தானே.... அது வரைக்கும் கீழயே படுக்கிறது?"

"அது சரிதான்..." நான் மனைவியை ஆமோதித்தேன்.

அப்போது திடீரென எங்கிருந்தோ முளைத்தார் சுந்தரம். அவருக்குக் கனடியக் கனவெல்லாம் கிடையாது. விசுவாசமான அரச ஊழியர். நாலாயிரம் ரூபா சம்பளத்தில் அவர் குடும்ப வண்டியை குடை சாயாமல் ஓட்டுவதில் எனக்கும் மனைவிக்கும் ஆச்சரியமான ஆச்சரியம். நாங்களோ பிள்ளைகள் வெளிநாட்டிலிருந்து அனுப்பும் டாலர்களை ரூபாய்களாக்கி, அது செய்யும் 'ஜிபூம்பா' வேலைகளை கண்ணாரக் கண்டு கொண்டிருப்பவர்கள். அந்த சுந்தரத்திற்கு எதிர் வீட்டு விஷயங்கள் என்றால் பாயாசம் சாப்பிடுவதுபோல... அவரிடம் மெதுவாக விசாரித்தேன்.

"என்ன கட்டிலெல்லாம் அமர்க்களப் படுது...?"

"அது தெரியாதே...? கனடாவில் இருந்து மூத்த பொடியன் வாறானாம்..." என்றார்.

"அப்பிடியே சங்கதி ? எங்கடை கரனிடம் சொன்னால் ஏதாவது குடுத்து விடுவான்." பிரகாசமானாள் என் மனைவி. பெருமூச் செறிந்தார் சுந்தரம்.

"என்ன..?" நித்திரை கலைந்து வம்புக்கு அலைந்தது மனம்.

"உள்ளூரிலை இருக்கிறதுகளே தாம் தூம் எண்டு செலவழிக்குதுகள்.... சனி ஞாயிறு எண்டா காச்சா மூச்சா எண்டு ஒரே பாட்டுச் சத்தம்... வெளியிலை இருந்து வாறவனைப் பற்றிக் கேக்க வேணுமே...." கூறியபடி எழுந்தார் சுந்தரம்.

●●

"வந்திட்டாங்கள் போலை கிடக்கு!" என்றாள் என் மனைவி.

நான் திடுக்கிட்டுப் போனேன்.

கொழும்பில் வாழ்கிறவர்கள்-குறிப்பாக தமிழர்கள் எப்போதும் தயார்நிலையில் இருக்க வேண்டும். எப்போதும் யாரையோ அல்லது எதையோ எதிர்பார்த்திருப்பது போல ஒரு பயம்.

"ஆர் வந்தது....?"

"அதுதான் முன் வீட்டுப் பொடியனைக் கூட்டிக்கொண்டு ஏர்போட்டாலை வந்திட்டினம்..." சாவதானமாகக் கூறிவிட்டு வேடிக்கை பார்ப்பதற்காக முன்னறைக்குப் போகவென எழுந்தாள் என் மனைவி.

எனக்கு எரிச்சலாகிவிட்டது.

"இனி எழுவாய் பயனிலை இல்லாமல் கதைச்சுப்பார்.... நடக்கிறதே வேறை. வந்திட்டாங்கள் எண்டு சொல்ல நெஞ்சடைச்சுப் போச்சு...." கோபத்தோடு கத்தினேன்.

"சும்மா கத்தாமல் ஒழுங்காப் போய் பாத்துக்கொண்டு வாங்கோவன்!"

கரன் எதிர் வீட்டுப் பையனிடம் கொடுத்துவிடுவதாகக் கூறிய சேலைகளைப் போல அவள் கண்கள் பளபளத்தன.

நரைத்து விட்ட தலையை கொஞ்சம் கறுப்பாக்கி, வெயிலுக்குத் தோதாக அரைக் காற்சட்டை ஒன்றை மாட்டி, சோலாப்புரியை கால்களில் கொழுவிக் கொண்டு எதிர் வீட்டை அடைந்தேன்.

'கனடாவிலிருந்து வந்த பையன்' என்று சற்று மினுமினுப்பாய் இருந்த ஒருவனை நானாக நினைத்துக்கொண்டு கை நீட்டினேன். "அவன் நானில்லை. இவர்தான்," ஓரமாய் உட்கார்ந்திருந்த ஒல்லியான உருவத்தைக் காட்டினான். அவன் மிக ஸ்நேகமாக "வணக்கம்" என்றான்.

நாக்கு நுனிவரை வந்து விட்ட 'ஹலோ' வை உள்ளனுப்பி "வணக்கம்" என்று அசடு வழிந்தேன்.

"பிறகு கனடா எப்படி!" என்று தொடங்கி ஏதேதோ விசாரணை நடத்திவிட்டு கடைசியாக சற்று தயக்கத்தோடு அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தேன்.

"தம்பி அங்கை என்னவேலை?"

"குக்...!" என்றான்.

எனக்குச் சரியாக விளங்கவில்லை. மறுபடி "என்ன?" என்றேன்.

"ரெஸ்ரோரண்ட் ஒண்டிலை சமையற்காரனாய் இருக்கிறேன்!" என்றான்.

அவனுடைய அருமைச் சகோதரர்களில் ஒருவன் சங்கடத்தோடு எழுந்து அறைக்குள் போனான். மற்றவர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கரைந்து போனவர்கள்போல உன்னிப்பாக அதை முறைத்தபடி உட்கார்ந்திருந்தார்கள்.

"வேலை கஷ்டமோ....?"

"ஓமோம்..! கஷ்டம்தான்... அந்த வேலை முடிய இரவு 'கிளீனிங்' (Cleaning) ஒண்டுக்கும் போறனான்."

"அப்ப நித்திரை....?" ஆச்சரியத்தோடு கேட்டேன்.

"இரவு வேலை நாலு மணிக்கு முடியும். மற்ற வேலை எட்டு மணிக்குத்தானே..." என்றான் அவன். பின்பு தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொள்வது போலவும் என்னைச் சந்தோஷப்படுத்துவது போலவும் கூறினான்:

"ஞாயிற்றுக்கிழமை முழுக்க நித்திரை தான்."

அந்த வெளிப்படையான எளிமையான பொறுப்பான பேச்சு என்னை நெகிழ்ந்து போகச் செய்தது. விடைபெற்றுக் கொண்டு வெளியே வருகிறேன்.

என்னுடைய கையில் கரன் கொடுத்தனுப்பிய பார்சல் கனக்கிறது.

'மகனே....! உன்னைக் கரைத்து அனுப்பும் டாலர்களையா நாங்கள் கரைத்துக் கொண்டிருக்கிறோம்?' கையிலுள்ள பொதி அதிக கனமாக இருக்கிறது. ■

# மாறியது நெஞ்சம்

**— ரூபராணி —**

**"என்மீது உங்களுக்கு உண்மையான அன்பிருந்தா நான் சொல்வதைக் கேட்கமாட்டிங்களா?"**

"என்னங்க...! நான் எத்தனமுறை சொன்னாலும் அது உங்க காதுக்குக் கேட்கமாட்டேங்குதே?" தேவிகாவின் முகத்தில் கடுகு வெடித்தது. அவள் அப்போது தான் நீராடி விட்டுத் தன் நீளமான கூந்தலைப் பின்னிக் கொண்டிருந்தாள்.

செந்தூரன் காதில் எதுவும் விழுந்ததாகத் தெரியவில்லை. அவன் அவசர அவசரமாக எதையோ எழுதிக் கொண்டிருந்தான்.

"தூங்குறவங்களை எழுப்பலாம். தூங்குறமாதிரி நடிப்பவங்களை எழுப்புறது கஷ்டந்தான்." சொல்லிக் கொண்டே தேவிகா அவள் கணவன் செந்தூரன் அருகே வந்து உட்கார்ந்தாள்.

அவள் ஜடையில் இருந்த மல்லிகைப் பூ வாசம் அவன் முகத்தில் மோதியிருக்க வேண்டும். பேனாவை மெதுவாக வைத்து விட்டு தேவிகாவின் முகத்தை ஆராய்ந்தான். அப்பழுக்கற்ற அந்த முகத்தின் உதட்டுக்கு மேல் ஒரு கறுப்பு மச்சம்.

"என்னங்க! எந்த உலகத்தில் இருக்கிறீங்க?" தேவிகா செந்தூரனின் பார்வையைத் திசை திருப்பினாள்.



"உங்களுக்கு என் மீது நேசமா?" தேவிகா கேட்ட கேள்வியின் குழந்தைத் தனத்தைக் கண்டு வாய்விட்டுச் சிரித்தான் செந்தூரன்.

"நான் சீரியசாக் கேட்டா நீங்க சிரிக்கிறீங்களே?" தேவிகாவின் குரலில் சுரத்தில்லை.

"உங்கள் அப்பாவை என்ன செய்வதாய் உத்தேசம்?"

செந்தூரனுக்கு நெற்றிப் பொட்டிலடித்தது. "உன்னை நேசிப்பதுக்கும், அப்பாவுக்கும் என்ன சம்பந்தம்?" எதிர்க் கேள்வி கேட்டான் செந்தூரன்.

"சம்பந்தம் இருக்கு. என்மீது உங்களுக்கு உண்மையான அன்பிருந்தா நான் சொல்வதைக் கேக்கமாட்டீங்களா?"

"இதோபார் தேவிகா பெற்ற தகப்பனை என்ன செய்யலாம் என்று நீ நினைக்கிறாய்?" செந்தூரனின் கேள்வியில் கவலை ஊசலாடியது.

"ஏன் நீங்க மட்டுந்தான் மகனா? இரண்டு மகன்மாரும் இரண்டு மருமகள்களும் இன்னும் உயிரோடு இருக்கிறாங்களே. அவங்களுக்குக் கடமை இல்லையா? பாசமில்லையா? உங்களுக்கு மட்டும் என்ன தலைவிதி? தேவிகா படபடத்தாள்.

"நல்லாய் யோசித்துப்பார்! சுரேசும் சுந்தரும் அப்பாவுக்குப் பிள்ளைகள்தான். அவங்க ரெண்டு பேருமே அப்பாவைப் பொறுப்பேற்க மறுத்துவிட்டார்கள். அதுக்காக நானும் அப்பிடி. நடக்கவேணுமேண்டு நீ எதிர்பார்க்கிறாயா?" செந்தூரன் அமைதியாகக் கூறிவிட்டு தேவிகாவின் முகத்தை நோட்டம் விட்டான்.

"நான் ஒரு வழி சொல்லட்டுமா?" தேவிகா பரபரத்தாள்.

"சொல்லேன்...."

"அப்பாவ வயோதிபர் மடத்தில் சேர்த்திட்டா என்ன?" செந்தூரன் அதிர்ந்து போனான்.

"ஆமா தேவிகா இன்று பலபேருக்குத் தெரிந்த சுலபமான வழி இதுதான். பெத்தவங்களிட்ட எல்லாம் அனுபவிச்ச பிறகு. அவங்களிடமிருந்து எதுவும் பெறமுடியாதென்ற நிலைவாரப்போ வயோதிபர் மடம்-அனாதை மடம் என்று தள்ளிவிட வேண்டியதுதானே?" சொல்லிவிட்டு ஏக்கப் பெருமூச்சு விட்டான் செந்தூரன்.

"நீங்களும் உங்கப்பாவும் பட்டது பாடு; எனக்கென்ன?" கோபத்தைக் கொப்பளித்து விட்டுச் சமையலறையை நோக்கி விரைந்தவளைப் பேச்சுக்குரல் தடுத்து நிறுத்தியது.

●●●

"ராமநாதா.... என் மருமக ஆயிரத்தில் ஒருத்தி, எனக்கு வேண்டியதெல்லாம் மனங்கோணாமச் செய்யிறவ. அவ எனக்கு மருமகளில்ல- மகளப்பா."

"அது சரி... நீ வேல செய்த கடையில விலகிறப்போ ஏதாச்சும் உதவி பண்ணினாங்களா?"

"பண்ணினாங்க! கிடைச்ச பணத்த வாற வழியில வங்கியில என் மருமக தேவிகா பேரில டிப்போசிட் பண்ணிற்றன். பாவம்- பின்னுக்கு அவ கஷ்டப்படக் கூடாது பார்!"

கூடத்திலிருந்து உரையாடியவர்கள் செந்தூரனின் அப்பாவும் அவர் நண்பர் ராமநாதனும்.

தேவிகாவின் இதயத்தில் ஈரம் கசிந்தது. கண்களில் நீர் வழிந்தது. ■

# "காலமறிந்த காரியம்"

**தி/இளையவன்**

**"தம்பி இவ்வளவு வளர்ந்திருந்தும் உனக்கு புரியாமற் போயிட்டே! இப்போ நாம காலத்தையறிஞ்சுதான் நடக்கவேனும்...!"**

அக்காவிடமிருந்து இறுக்கமான அந்த வார்த்தையைக் கேட்டதும் அவன் நடுங்கிப் போனான். இப்போ அவனுக்கு அன்பு, ஆதரவு, பாதுகாப்பு எல்லாமே தன் அக்கா வீடுதான். அதற்கும் பிரச்சனை ஏற்பட்டுவிட்டதே என்ற ஆதங்கத்தை அவன் முகத்தில் தெளிவாகவே காணக்கூடியதாகயிருந்தது.

"செய்தது தப்பு என்று சொல்றியாக்கா...?"

"இப்போ சரி பிழை பார்த்துக்கொண்டிருக்கிற நேரமில்லை. நம்ம காலம் கெட்டுப் போய் ரொம்பநாளாச்சு. இந்த சூழ்நிலையில எது நடந்தாலும் நாம ஊமையாகத்தான் இருக்கணும். அதுதான் நமக்கு நல்லது. நீயென்னவென்றால்...!"



"அதுக்காக நாங்கள் வீணாக அடிபடலாமா...?"

"என்னபேச்சுப் பேசுகின்றாய் நீ?" சற்று சலிப்படைந்து போனாள். "தம்பி! காலத்தையும் நாம கொஞ்சம் அனுசரிக்கத்தான் வேணும். வேறு வழி...? இது அவங்களோட பகுதி. எல்லாம் நல்லாகத் தெரிந்திருந்தும் நீ அப்படி நடந்து கொண்டதைப் பார்த்தால் வியப்பாக இருக்கு. பெடியனோட சில ஆட்கள் இங்கு வந்து அதட்டலாகப் பேசியதை நினைச்சால் இன்னும் நடுக்கமாக இருக்கு."

"நான் விரோத எண்ணத்தில் அந்தக் காரியத்தை செய்யேல்லை!"

"எதுவோ, அதைப்பற்றியெல்லாம் சிந்திக்க இப்போ நேரமில்லை. எனக்கு மனசுல படுறதெல்லாம் ஒன்றுதான். நீ அப்படி செய்திருக்கவே கூடாது!"

"வீண் பொய் சொல்லலாமாக்கா...?"

"எது பொய்? மத்தவங்களைப்போல நீயும் வாயைமூடிக்கொண்டு இருந்திருக்க வேண்டியதுதானே? உனக்கு மட்டும் என்ன நம்ம சனங்கமேல இப்படியொரு அக்கறை?"

"......................................................."

"தம்பி! இவ்வளவு வளர்ந்திருந்தும் உனக்குப் புரியாமற்போயிட்டே! இப்போ நாம காலத்தையறிஞ்சுதான் கதைக்கணும், நடந்துக்கவேணும். உன்னோட நினைப்பால் வந்திருக்கின்ற பிரச்சனைகளை இப்போ நீ மட்டுமல்ல நாங்களும் அனுபவிக்க வேண்டியிருக்கு....."

"அது வந்துக்கா..."

"போதும், மேல எதுவும் கதைக்காதே!" வரண்ட வார்த்தையினால் தீர்க்கமானதொரு முடிவுக்கு வந்தாள். இந்த சூழ்நிலைமைக்கு ஏற்ப தன் குடும்பமாவது நிம்மதியாக வாழ வேண்டும். அதற்கு தம்பியைப் பிரியத்தான் வேண்டும் என்ற நிலை. வேறு பதிலுக்கு காத்திராமல் வாசற்கதவையும் பலமாகச் சாத்திவிட்டு வீட்டினுள்ளே சென்றதும், அவன் செய்வதறியாது குழப்ப நிலைக்காளானான். அவனுக்குள்ளே மீண்டும் ஒரு வினா. 'நான் நடந்து கொண்டது சரியா....?'

●★●

பிரதான வீதியுடன் காசுத்தெரு சந்திக்கும் முச்சந்திக்கு அவன் வந்ததும் விசயம் விளங்கிப்போச்சு! இன்றைக்கும் ரொம்ப நேரமாகும், நல்லமாட்டுத்தான். திரும்பி வேறுவழியாக எப்படியும் விரைவாக வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ண மேலீட்டில் சற்றுபின்னாடி சைக்கிளைத் தள்ளி மத்திய வீதியுடன் இணையும் காசுத் தெரு சந்தியைப் பார்த்தான். அங்கும் நீண்ட வரிசையில் ஆட்கள்தான்.

"தம்ஸ போலிமட யன்ட" (நீ வரிசையாகப் போ) மறுவார்த்தைக்குக் காத்திராமல் கூட்டத்தோடு கூட்டமாக நின்று கொண்டான். ஆங்காங்கே சில மின்சார விளக்குகளே சுடர் விட்டுக்கொண்டிருந்தன. சந்திப் பகுதி மெல்லிய வெளிச்சத்திலும், ஏனைய வீதிகள் அனைத்திலும் ஆட்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடியும் காணப்பட்டமையினால் அப்பகுதி பயங்கரத்தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. வரிசையில் நின்றவர்களில் சிலர் 'விலாசம்' காட்டவும் தொடங்கினர்.

இராணுவத்தினரினால் சுற்றிவளைக்கப் பட்ட பகுதிக்குள்ளே கலகலப்பாக எல்லோருடனும் கதைத்துக்கொண்டு சகஜமாகப் பழகிக் கொண்டிருந்தான் ஒருவன். சகஜமாகப்பழகியவன் அவனுக்குரிய சந்தர்ப்பம் வந்ததும் உசாரானான். யாரும் எதிர்பார்க்காத வேளையில் அச்சம்பவம் நடந்தது. அனைத்து இராணுவத்தினரும் தீவிரமடைந்தனர்.

"கௌத....? கௌத....? வலவுவ எத்துல கீல பலன்ட (யார்? யார்? வளவுக்குள்ளே போய்ப்பாருங்கள்)

சுற்றிநின்ற அனைத்து இராணுவத்தினரும் மதிலால் பாய்ந்தவனைப் பிடிப்பதற்காக வளவிற்குள் நுழைந்து வீட்டினுள் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களையும் வீதிக்கு இழுத்து வந்தனர். பரபரப்பாக விசாரித்தும் பாய்ந்தவன் யாரென்று கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள். யார்யாருடன் அவன் சகஜமாகப் பேசிக்கொண்டிருந்தானோ அவர்களை மாத்திரம் தனியாகப்பிரித்து மற்றவர்களை பரிசோதித்து அனுப்பிய பின்னர் தீவிரமாக விசாரிக்கத் தொடங்கினர்.

விசாரணையின் உச்சத்தில் பலருக்கும் அடி விழத்தொடங்கியது. ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது வெளிவரவில்லை. அனைத்தையும் அவதானித்துக்கொண்டிருந்தவனுக்கு வேதனை அளவுக்கும் மீறியது. வீணாக அடிபடுகின்றார்களே என்ற ஆதங்கம் அதிகமாகியதனால் அவனையறியாது அப்படியொரு துணிச்சல் வெளியாகியது.

"மஹத்தையா அர கொல்லா மட தன்னவா...." (ஐயா அந்த பொடியனை எனக்குத் தெரியும்)

அவனைமாத்திரம் தனியாக எடுத்து அருகே இருந்த ஜீப்பில் ஏற்றிக்கொண்டு அந்த முஸ்லிம் பகுதியை நோக்கிச் சென்றனர் இராணுவத்தினர் சிலர்.

★★★

"தம்பி உதயா கொஞ்சம் நில்....!" ஊர்ப்பெரியவர் தன்னை அன்போடு அழைத்தது கண்டு அவனுக்குள் ஆனந்தம்.

"சொல்லுங்க ஹாஜியார்..."

"தம்பி ஊருக்குள்ளே சிலர் உன்னை தப்பா நினைக்கிறாங்க. ஆனால் நாங்க வீணாக யாரையும் சந்தேகப்படமாட்டோம். ரெண்டுபக்க ஞாயத்தையும் நல்லா விசாரிச்சுப்பார்த்துத்தான் ஒரு முடிவுக்கு வருவோம். நான் சொல்றேன்-நீ தப்பு செய்யல. அந்தப் பெடியன் ராசிக்கோட நடத்தை சரியில்லை. கொஞ்சம் திமிர் பிடிச்சவன்தான். அவனுக்கு சில ஆமிக்காரர்கள் பழக்கமாம். அந்த துணிச்சலில் அப்படி செய்துபோட்டான். ஆண்டவன் புண்ணியத்துல பெரிய பிரச்சனையில்லாமல் வெளியே வந்துட்டான். நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க. கொஞ்ச நாளைக்குள்ள எல்லாம் சரியாகிடும்." ■



படிப்பகம்

www.padippakam.com



# மாலையும் மையலும்

## இலக்கிய நயம்

### தருவது- ரசிகன்

"மணிமாறா- மணிமாறா?"
தேன் குரலில் அழைத்தது யார்?

"நான்" என்றாள்.
"காண்" என்றாள்.
பருவமழை போலவொரு
பால் நகையைத்தான் பொழிந்தாள்.

செவ்வாயில் சிரிப்புதிர
செங்கனிகள் பணிந்துயர
கொல் அம்பெய்யும் புருவத்தில்
வெல்லும் அம்பாக விழிகளாட
நனைக்க வந்தாளோ அன்பில்
பிணைக்க வந்தாளோ அணைப்பில்?

மணிமாறன்
வீழ்ந்துபோனான் வியப்பில்!

"என்னவேண்டும்?
கேள் மாறா?"
வண்ணமகள் வாய் திறந்தாள்.

"என்ன வேண்டும்?
என்றா கேட்டாய்?
எண்ண வேண்டும்,-உன்னை
எந்நாளும் எண்ண வேண்டும்."

"கட்டழகா! கட்டழகா!
கொட்டும் வண்டழகா
தொட்டு விட்டாய் நெஞ்சத்தை
கட்டழகா! கட்டழகா!"

"மொட்டழகி! மொட்டழகி
கெட்டியான இரு மொட்டழகி
கொட்டிக் கொடு அதரத்தில்
மொட்டழகி! மொட்டழகி!"

"இனிதான மொழிபேசி
கனிவான மஞ்சத்தில்
தனியான விருந்து தரவா?
மணியான உன் மார்பில்
கனியாக நான் ஆடவரவா?"

"செவ்வான நிறமான
பொன்னான கன்னத்தில்
என் வாயால் கோலமிடவா?
தடந்தோளில் நான் வீழ்ந்து
கிடந்தாடி பின்னர் எழவா?"

"இரும்பான கையாலே
கரும்பாக என்னைப் பிழிவாய்
துரும்பாக உன் கையில்
நானாக விரும்பாமல் ஒடிவிடுவேன்"

"மானாக நீ ஓட
அம்பாக நான் பாய்ந்து
ஊனாக உன்னை அடைவேன்."

"பொங்கியெழும் மோகத்தில்
மங்கிய நிலவொளியில்
விம்மியெழும் தோள்மீதில்
தொங்கித்தான் ஆடி மகிழ்வேன்."

"பொங்கும் அழகெல்லாம்
தங்கும் தேகமிதோ
தொங்கும் கனியிரண்டு
தாங்கும் தேகமிதோ
மங்கும் பொழுதினிலே
தேங்கும் கேள்விக்கெல்லாம்
தங்கம் உன் உடலில்
தேடி விடை சொல்வேன்."

மஞ்சள் பூசிய
மாங்கனிக் கன்னம்
மாறன் சொன்ன சேதியால்
செக்கச் சிவந்தது!

கன்னம் வருடியவன்
சின்னம் என முத்தம்
கன்னம் இரண்டில் இட்டான்!

நூல் இடை பற்றிட-அவள்
வேல் விழி மூடிக்கிடந்தாள்
நூல் என விரிந்தமேனியில்-அவன்
மேல் விழுந்தொரு பாடம் படித்தான்!

தேனிதழ் திறந்தவள் நாவினில்
அன்னவன் நாவும் கலக்க
"நஞ்சினை உன் இதழினில்
பூசினும் அதுகூட அமுதமாகும்."
என்றவன் கூறினான்-சுவை
கண்டவன் புலம்பினான்.

"பொய்கையும் நீயே-அங்கே
பூக்கும் பூவும் நீயே!"
குங்கும நெற்றியில்-தன்
இதழ் ஒற்றினான்.

'மோகத்தை கொன்றுவிடு-அன்றேல்
மூச்சை நிறுத்திவிடு'
சொன்னவன் தமிழ்க் கவி-அடியே
மோகத்தை கொல்ல
உன் தேகத்தை தந்துவிடு!"

மேகத்தை கேட்டது பூமி
தாங்காத தாகத்தால்!
வெப்பத்தில் வெடித்த பூமிக்கு
தெப்பமாய் நனைய விருப்பம்!

"என் மேகம் நீயடி
என் மழை நீயடி
வான் மழை பொய்ப்பினும்
உன் மழை பொய்க்குமோ?"

'கட்டழகா! கட்டழகா!
உனக்கு நான் மேகம்
எனக்கு நீ மேகம்
பருவமழை இங்கே பரிமாற்றம்
உருவங்கள் இங்கே உருவேற்றம்
இதயங்கள் இங்கே இடமாற்றம்.'

கட்டழகா! கட்டழகா!
முத்தத்தால் மூச்சை நிறுத்திவிட்டாய்;
கட்டிக் கொண்டென்னை-காதல்
பித்தத்தால் கொன்றுவிட்டாய்!
வெப்பத்தால் உடல் தகிக்கையிலே
முத்தத்தால் உடல் நனைத்தாயே

கப்பம்தான்! கப்பம்தா! -உன்
வாலிபத்தை கப்பம் தா!
கப்பம் தா! கப்பம்தா!
உலக சுகங்களை கப்பம் தா!

மார்பு துடித்தது மன்னா
மனதில் இருந்து நீ துள்ள!
கண்கள் துடித்தது கண்ணா
கனவில் வந்து நீ கிள்ள!

தந்தேன் தந்தேன்
எடுத்துக் கொள்!
செந்தேன் உனக்கே
குடித்துக் கொள்!
வெந்தேன் என்னை
அணைத்துக் கொள்!"

மாறன் அணைப்பில்
சிக்கிக் கொண்டான்!

ஆஹா ஆஹா
என்ன சுகம்?
பாகாய் இனிக்குது
இந்தச் சுகம்!

கைகளை விரித்தவன்
காற்றில் வீசினான்
கண்களைத் திறந்தவன்
கலங்கிப் போயினான்!

கண்டது கனவா-அமுதம்
உண்டதும் கனவா?

பகல் கனவு பலிக்காது-இது
மாலைக் கனவும் பலிக்காதோ?

கனவில் தோன்றிய கானமயில்
நனவில் தோன்ற மாட்டாளோ?
உணவில் அறுசுவை உள்ளதுபோல்



கனவில் நறுசுவை தந்தவளே
நனவில் குறுநகை பொழிவாயோ
கனவில் கண்டதை தருவாயோ?

தினமும் மாலையில் கனவுவர
மனமும் மயங்கி தினம்வாட
மாலைமீதே வருத்தம் கொண்டான்!

"காதல் கொள்ளும் பருவத்தார்
மாலை மயக்கம் மிகக் கொள்வார்.
மயக்கும் மாலைப் பொழுதினிலே
அறிவு மயங்கி வருந்திடுவார்
பொழுதும் மயங்கும்-என்னைப்போல்
இந்த ஊரும் மயங்கும்"
எல்லோருக்கும் இது பொதுநீதி
காதல் பருவ பொது நியதி!

மாறன் தனக்குத்தானே
சாந்தி சொன்னான்

"பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து"
குறள்-1229, அதிகாரம்-123.

ஸ்போர்ட்ஸ்

# அ..ப்ரிடி மீது விசாரணை!



பாகிஸ்தான் அணியின் அதிரடி ஆட்டக்காரர் ஷஹிட் அஃப்ரிடி. ஒருநாள் போட்டியில் மிகக் குறைந்த பந்துகளில் செஞ்சரி அடித்த சாதனைக் குரியவர். இளம் ஆட்டக்காரரான இவர் மீது அண்மையில் புகார் ஒன்று கூறப்பட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன் இலங்கையில் நடந்த ஆசிய கோப்பைக்காக இலங்கைக்கு வந்த பாகிஸ்தான் அணியினர், தமது நாட்டிற்கு விமானத்தில் திரும்பிக் கொண்டிருந்தனர்.

விமானத்தில் அஃப்ரிடியின் அருகில் மூன்று பெண்கள் பயணம் செய்தனர். அருகில் இருந்த பெண்களிடம் அஃப்ரிடி சில்மிஷம் செய்தார். அந்த விமானத்தில் பயணம் செய்த பெண்களின் சகோதரர் இச்செயலைக் கண்டித்தார்.

அந்த நபரிடம் அஃப்ரிடி சண்டை போட்டார். மரியாதைக் குறைவான வார்த்தைகளால் அவரைத் திட்டினார். அந்த நபர் அஃப்ரிடியின் இச்செயலை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் புகார் செய்துள்ளார். இவ்வாறு செய்திகள் வெளியாகியுள்ளன.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் செயலாளர் வக்கார் அகமது கூறும் போது,

"இந்தப் புகார் விசாரிக்கப்பட்டு வருகிறது. விசாரணையின் முடிவில் அஃப்ரிடி தவறு செய்திருந்தால் அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் தயங்க மாட்டோம்" என்று கூறியுள்ளார்.

பாகிஸ்தான் அணியுடன் இலங்கை வந்திருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சங்க தலைமைச் செயலாளர் மஜித் கானும், பாகிஸ்தான் கப்டன் ரமீஸ் ராஜாவும் இப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

## மற்றுமொரு நீக்கம்

உலக குத்துச்சண்டை கழகத்தின் ஹெவி வெய்ட் சாம்பியன் பட்டத்திற்கான போட்டியில் மைக் டைசன் எதிர் வீரரான ஹோலி ஃபீல்டின் காதைக் கடித்தார் என ஆட்ட நீக்கம் செய்யப்பட்டார்.

இதே போன்று தனது தவறான ஆட்டம் காரணமாக இன்னொரு குத்துச் சண்டை வீரரும் போட்டியில் இருந்து நீக்கப் பட்டுள்ளார்.

கடந்த மாதம் நடுப்பகுதியில் அமெரிக்காவில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் அகின் வாண்டே, லெனாக்ஸ் லூயிஸ் ஆகிய இருவரும் மோதினார்கள்.

ஆரம்பம் முதல் லெனாக்ஸ் விட்ட பலமான குத்துக்களால் நிலை குலைந்த வாண்டே, லெனாக்ஸை பலமுறை கட்டிப் பிடித்தார். நடுவர் கடுமையாக எச்சரித்தும் மீண்டும் மீண்டும் வாண்டே அப்படிச் செய்ததால் ஆட்ட நீக்கம் செய்யப்பட்டார். சாம்பியன் பட்டம் லெனாக்ஸிக்குக் கிடைத்தது.

மைக் டைசன், அகின் வாண்டே ஆகிய இருவருக்கும் முன்னர், 1930ல் ஐக் ஷார்க்கியும், 1941ல் பட்டி பேயரும் தமது தவறான ஆட்டத்தால் ஆட்ட நீக்கம் செய்யப்பட்ட குத்துச் சண்டை வீரர்கள் ஆவர்.

## இவர்கள் தான் அவர்கள்


1 விஜய்


2 அர்ஜுன்


3 விவேக்


4 சங்கவி


5 பானுப்பிரியா

★ இந்திய மீனவர் பிரச்சனையில் தமிழக முதல்வரின் நிலைப்பாடு என்ன?

என். இராமநாதன், நீர்கொழும்பு.

வழக்கம்போல குதர்க்கம்தான்! மீனவர் தாக்குதல் தொடர்பாக இலங்கை அரசின் விளக்கத்தை மறுக்காமலும், ஏற்காமலும் நழுவியிருக்கிறார் கலைஞர்.

□□□

★ போரின் மூலம் இன்றைய இனப்பிரச்சனைக்கு தீர்வு ஏற்படுமா சிந்தியா?

எஸ். நவேந்திரன், களுவாஞ்சிக்குடி.

பஞ்சைப் போட்டு தீயை அணைக்கலாமா நவேந்திரன்? 'ஒப்பரேஷன் சக்சஸ்; பேஷன்ற் டைட்' என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதேதான் போர் தொடர்ந்தால் நாட்டு மக்கள் நிலையும்!

□□□

★ டியர் சிந்தியா! சச்சின் டெண்டுல்கர் இல்லாத இந்திய அணி எப்படியிருக்கும்?

எம்.என். அவிசாவல.

கப்டன் இல்லாத கப்பல் மாதிரி.

□□□

★ சிம்ரானிடம் இருப்பது அதிஷ்டமா? திறமையா?

எம். கனகராஜா, மட்டக்களப்பு.

படவுலகுக்கு வருவதற்கு படவேண்டியவர்கள் கண்களில் அவர் பட்டது அதிஷ்டம். தேவையானவர்களைக் கைக்குள் போட்டுக் கொள்வது திறமை. பின்னதுதான் இப்போது நன்கு உபயோகமாகிறது. நடிப்பைத்தான் காணோம்!

□□□

★ சிந்தியா! பெண்ணின் அழகு அவள் கண்களிலா?

ஏ. இராசேந்திரன், தலைமன்னார்.

கண்களிலும்!

□□□

★ மாணவிகளைக் கண்டபடி கிண்டலடிக்கும் மாணவர்களை என்ன செய்யலாம்?

பி. சித்திரா, கொழும்பு-06.

கூட்டமாகச் சேர்ந்துவிட்டால் மாணவிகள் மட்டும் கிண்டலடிப்பதில்லையாக்கும்! கல்லூரி மாணவ, மாணவிகளின் அகராதிகள் பலரகம். தமிழக சஞ்சிகை ஒன்றில் நான் கண்டது அதில் ஒரு ரகம். பாருங்கள்:

**வோட்டர்லூ:** இரகசியமாக தண்ணி அடிக்கும் இடம்.
**சேப்பாக்:** வழுக்கை மாணவன்.
**நாய்வண்டி:** கல்லூரி பஸ்.
**ஐக்கிய முன்னணி:** பெண்கள் கூட்டம்.
**கூரியர்:** காதலுக்கு தூது செல்பவன்.
**கால்நடை:** பைக் ஓட்டத் தெரியாதவன்.
**சுல்தான்:** வசதியான போய் ஃபிரண்ட்.
**பப்பி:** ஃபாலோ செய்பவர்.
**மழைக்கோழி:** காதல்வயப்பட்ட பெண்.
**மேல்நாட்டு மருமகள்:** பொப் தலை லெக்சரர்.
**பெர்மிட் ஹோல்டர்:** லேடீஸ் டெய்லர்.
**ஓல்ட் மொங்க்:** ஜொள் விடும் வயதானவர்.

□□□

★ டெஸ்ட் போட்டிகளில் இலங்கையை இந்தியா ஜெயிக்குமா?

கே. இலட்சுமணன், பதுளை.

சுதந்திரக் கிண்ணத்தைத்தான் அங்கேயே கோட்டை விட்டார்கள். சுதந்திரப் பொன் விழா கொண்டாட்டத்துக்காவது வெற்றிச் செய்தியை இங்கிருந்து அனுப்பும் ஆர்வத்தோடு ஆடுகிறார்களா பார்க்கலாம். கடைசி வரை முன்னேறி விளிம்பில் வந்து தவறவிட்டு விடுகிறார்கள் வெற்றியை- அதுவே வழமையாகிவிட்டது.

□□□

★ கிசு கிசு இல்லாத நடிகைகளே கிடையாதா?

எஸ். ஆ..ப்தீன், மட்டக்களப்பு.

இருந்தாரே கே.பி. சுந்தராம்பாள்! (ஞானப்பழத்தை பிழிந்து நம் காதுகளுக்குள் ஊற்றியவர்)

□□□

★அரசியல்வாதிகளைத் திருத்த என்ன வழி?

மா. நாகராசா, வவுனியா.

முதலில் நாங்கள் திருந்தவேண்டும். அண்மையில் படித்த ஒரு செய்தி சபாஷ் போடச் செய்துவிட்டது. இது நடந்தது மும்பாயில்.

"தேர்தல் பிரசாரத்தின்போது நாங்கள் சுமக்க வேண்டிய பாடப் புத்தகங்களின் எடை குறித்து வருத்தப்பட்டீர்கள். குழந்தைகள் வளையக்கூடாது நிமிர்ந்து நிற்க வேண்டும்; வளையக்கூடாது என்று சொன்னீர்கள். எங்கள் சுமையைக் குறைக்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? என்று தெரிந்து கொள்ளலாமா?"

இப்படி கடிதம் எழுதியிருக்கிறாள் ஒரு பள்ளிச்சிறுமி. சிவசேனை இயக்கத் தலைவருக்குத்தான் இந்தப் பகிரங்கக் கடிதம் போடப்பட்டிருக்கிறது. இந்தச் சிறுமிபோல விழிப்பாகவும், ஞாபகசக்தியுடனும் இருந்தாலே போதும்!

□□□

★ ஒருகை ஓசையால் பயன் கிடையாது என்பது தமிழ்க் கட்சிகளுக்குத் தெரியாதா? தெரிந்துமா பிரிந்து நிற்கிறார்கள்?

கி. விஜயகுமார், கொழும்பு-13.

ஒரு கையாலும் ஓசையெழுப்ப முடியும், எங்காவது தட்டவேண்டும். அதுதான் நம் தலையில் தட்டிக் கொண்டிருக்கிறார்கள். நாம் குனிந்து கொண்டிருக்கிறோம்!


சிம்ரான

□□□

★ தமிழ்ச் சினிமாவின் கவர்ச்சியின் கடைசி எல்லை எது?

திருமதி தி. புவனேஸ்வரி, நாவலப்பிட்டி.

**நிருபர்:** உயிரைப் பணயமாக வைச்சு ஒரு காட்சி எடுத்தீங்கன்னு கேள்விப்பட்டேன். அது என்னமாதிரியான காட்சின்னு சொல்ல முடியுமா?

**இயக்குநர்:** கதாநாயகியின் தொப்புள்ள பாலை ஊற்றி பாம்புக்கு பால் வார்க்கிற காட்சி தான் அது!

இப்படியான வித்தியாசமான சிந்தனைகளுக்கு ஏற்ப கவர்ச்சியின் எல்லை விரிந்து கொண்டே இருக்கும். சுருங்காது, நீவிர் அஞ்சற்க!

□□□

★ ஏட்டிக்குப் போட்டியென்றால் என்ன?

பாத்திமா சியாதா, தெகிவளை.

நான் பாம்புக்கு பால்வார்த்தால், நீங்கள் கீரிக்கு பால்வார்க்கவேண்டும். அதுதான் சரியான ஏட்டிக்குப் போட்டி.

□□□

★ விஜயகாந்த்-சரத்குமார் மோதல் என்னாச்சு சிந்தியா?

கே. ரவிகரன், திருமலை.

சினிமாவில் வரும் திருப்பம் மாதிரியாச்சு! சினிமாத் தொழிலாளர் பிரச்சனையில் கமல், சத்யராஜ், பிரபு, விஜயகுமார், நெப்போலியன், கார்த்திக் ஆகியோர் ஒருபக்கம். புதிய சங்கத்தின் பக்கம் நிற்பவர்களில் முக்கியமானவர்கள் விஜயகாந்தும், சரத்குமாரும். அதற்காக விஜயகுமார் அணியிலிருந்து விலகி ராதாரவியுடன் சமரசமாகி, விஜயகாந்துடனும் கைகுலுக்கிக் கொண்டார் சரத்குமார். ரஜினிமட்டும் வழக்கம்போல இதிலும் சஸ்பென்ஸ்.

□□□

★ பூனை குறுக்காலே ஓடினால் கூடாது என்று நம்புவது சரியா?

வ. சிவராமன், ஜா-எல.

எப்போதாவது, எங்காவது நடந்த ஒரு சம்பவத்தை வைத்து உருவாக்கப்பட்ட நம்பிக்கைகள் அவை. அதையெல்லாம் நம்பினால் உருப்பட்டமாதிரித்தான்.

1903ம் ஆண்டு நடந்தகதை ஒன்று:

அமெரிக்காவிலே இரும்புவேலை செய்யும் தொழிலாளி ஒருத்தர் இருந்தார். அவரது பட்டறைக்கு தினமும் காலையில் ஒரு நரி வருமாம்.

நரியின் தொல்லை தாங்காமல் அதனை விரட்டியடிப்பார் அந்தத் தொழிலாளி. நரியோ ஓடிவிட்டு மறுநாள் காலையிலும் ஆஜராகிவிடும்.

ஒருநாள் காலையில் நரியின் தொல்லை தாங்கமுடியாமல் பெரிய சுத்தியலைத் தூக்கி நரியை நோக்கி வீசினார். ஆனால் சுத்தியல் நரியின் மீது படாமல் தூரத்தில் சென்று விழுந்தது.

விழுந்த இடத்தில் கிணுகிணுப்பான ஒலி கேட்டது. தொழிலாளிக்கு ஆச்சரியம்.

சத்தம் வந்த இடத்தில் போய்ப் பார்த்தால் ஒரு வெள்ளி உலோகம் கிடந்தது. மேலும் அந்த இடத்தை கிளறிப் பார்க்க மேலும் மேலும் வெள்ளிப்பாளங்களாக வந்தன.

பின்னர் தோண்டத் தோண்ட வெள்ளிச் சுரங்கமே கிடைத்தது. இரும்புத் தொழிலாளி பெரிய செல்வந்தராகிவிட்டார். இதுதான் கதை. அதற்காக நரியை வீட்டில் வளர்த்து அதன் முகத்தில் தினமும் முழித்துப் பார்த்தால் அதிஷ்டம் கொட்டப் போகிறதா என்ன? மரம்தான் வளர்க்கமாட்டோம், இப்படி அதிஷ்டம் வருமென்பது உறுதியானால் வீட்டுக்கொரு நரி வளர்க்க மாட்டோமா என்ன?!

□□□

## சிந்தியா பதில்கள்

★ சினிமா உலகில் கால் அழகி யார்?

செ. பகீரதன், குருநாகல்.

மேக்-அப் இல்லாமல் பார்த்தால் பல நடிகைகள் 'கால்' அழகிகள்தான். கொஞ்சம் டச்அப் செய்தால்தான் முக்கால் அழகிகள். முழு அழகிகள்.... ம்ஹூம் தேறவில்லை. அவர்கள் சினிமாவுலகுக்கு வெளியேதான் இருக்கிறார்கள். (நண்பிகளே! சந்தோஷம்தானே?)

□□□

★ சினிமாவில் வன்முறைக் காட்சிகளை அதிகம் காண்பிப்பது சரியா?

கா. ஆனந்தன், கந்தப்பளை.

சுரேஸ்கோபி நடித்த தவறுதான்! குமட்ட குமட்ட வன்முறை!

'மாஃபியா கேங்' என்றொரு படம் வந்திருக்கிறது. மலையாளத்தில் இருந்து தமிழுக்கு 'டப்' செய்திருக்கிறார்கள். ஒரே அடிதடி- நாக்கைத் துண்டாக்குவதைக்கூட காட்டுகிறார்கள்.... யப்பா! அந்தளவுக்கு அனுமதிக்கக்கூடாதுதான்!



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 95

இராமபிரான் அருகிலேயே நின்றிருந்த இலக்குவன் போர்க்களத்தில் அப்போது நடந்து கொண்டிருந்த சம்பவங்களை அவதானித்த வண்ணமிருந்தார். சுக்கிரீவனைத் தொடர்ந்து அனுமன் இராவணனுடன் மோதியபோது அங்கெழுந்த வீரசாகச் செயல்களை இராமபிரானுடன் இலக்குவனும் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்.

**வார்த்தைகளைக் கொண்டும், அடர்த்தியான முடிகள் நிறைந்த தோள்களைக் கொண்டும், வெண்மையான பற்களைக்கொண்டும் போரிட வந்திருக்கும் உங்களை வில் கொண்டு தாக்குவது தகாது என்று எண்ணி இருந்து விட்டேன். நான் உங்களை வில் போன்ற ஆயுதத்தைப் பயன்படுத்தித் தாக்கினால் உங்களால் வெற்றியீட்ட முடியுமா?" என்று இராவணன் ஏளனமாகக் கேட்டான்.**

வில்லிலிருந்து சரங்களை அரக்கர் படை மீதும் இராவணன் மீதும் தொடர்ந்து எய்து கொண்டிருந்தார். வகை தொகையற்று அரக்கர் படையினர் வீழ்ந்தனர், யானை, குதிரைகள்- பாணங்கள் உடலில் பாய்ந்தமையினால் பயங்கர ஓசையை எழுப்பிய வண்ணம் தரையில் சாய்ந்தன. தேர்களும் சிதைந்து போயின. மழைத்துளிகள் இடைவிடாமல் பொழிவது போன்று இலக்குவனின் சரங்கள் எங்கும் பாய்ந்து அரக்கர் படைக்குப் பெரும்

★★★

## நேரடி மோதலில் இலக்குவனும் இராவணனும்

இராவணனுடைய தேர்ப்பாகன் ஆஞ்சநேயரின் தாக்குதலால் தரையில் வீழ்ந்ததும் உடனடியாகவே மற்றுமொரு தேர்ப்பாகன் ஓடிச்சென்று தேரில் ஏறி அமர்ந்து கொண்டான். மற்றும்பல அரக்கவீரர்கள் ஓடிவந்து தேரின் பழுது பட்ட முன்பகுதியைத் திருத்தி அமைத்தனர்.

ஆஞ்சநேயர் ஒரு மரத்தை வீசி இத்தனை சிதைவுகளை ஏற்படுத்தி தனது தேர்ப்பாகனையும் கொன்றுவிட்டமையினால் இராவணனின் சினம் தீக் கடலெனச் சீறிப்பாய்ந்தது. அதுவரை ஆஞ்சநேயரை- 'சாதாரண வானரம்தானே!' என்று இழிவாகக் கருதிய இராவணன், தெய்வாம்சம் பொருந்திய பல நூறு சரங்களை எடுத்து, அவற்றுக்குரிய மந்திர உச்சாடனங்களையும் செய்து அனுமன் மீது செலுத்தினான். அவை அத்தனையும் அவருடைய உடல் முழுவதும் பரந்து பாய்ந்தன. குருதி கடலெனப் பாய்ந்தோடியது. இராவணன் தொடுத்த சரங்கள் ஏராளமான வானர வீரர்களையும் வீழ்த்தின. அசுரப் படைவீரர்கள் குதூகலத்தால் கூத்தாடினர்.



அனர்த்தத்தை விளைவித்தன.

**கட்டு அமை தேரின் மேலும்**
**களி நெடுங்களிற்றின் மேலும்**
**விட்டெழு புரவி மேலும்**
**வெள் எயிற்று அரக்கர் மேலும்**
**முட்டிய மழையின் துள்ளி**
**முறையின்றி மொய்க்குமாப்போல்**
**பட்டன பகழி எங்கும்**
**பரந்தன குருதிப் பவ்வம்**

(யுத்த காண்டம்-1101)

இலக்குவன் எய்த கணைகள் எண்ணற்ற தீங்கினை அரக்கர் படைக்கு ஏற்படுத்தியபோதும், தயக்கமின்றி- முன் வரிசையில் வந்தவர்கள் வீழ்ந்ததும் அடுத்தடுத்த வரிசைகளில் வருபவர்கள் முன் அணிக்குத் தாவி வந்து வானரப் படையுடன் பொருதவே செய்தனர். இலக்குவன் எய்த பாணங்களுக்கு முன்னால் அவர்களால் தாக்குப்பிடிக்க முடியாமல் வீழ்ந்தனர். அரக்கர்படைவீரர்களின் சடலங்கள் மலைகள் போல் குவிந்தன. அம்மலைகளிலிருந்து ஆறு பெருக்கெடுப்பதுபோல் குருதி வெள்ளம் பெருக்கெடுத்துப் பாய்ந்தது.

தன்னுடலில் பாய்ந்த அம்புகள் ஏற்படுத்திய காயங்களினால் ஆஞ்சநேயர் ஓரளவு தளர்ச்சி அடைந்தாரெனினும் உடல் சரியவில்லை. கண்களை மூடி இராம ஜெபம் பண்ணியவண்ணம் நின்றிருந்தார்.

### இலக்குவன் போர்க்கோலம்

அனுமன் செயலிழந்து நிற்பதைக்கண்ட இராவணன், தனக்கு போரில் வெற்றி நிச்சயம் என்று இறுமாப்படையலானான். தான்-வில், வாள், கதாயுதம் போன்ற ஆயுதங்களுடன் தேரில் ஆரோகணித்து- குதிரை, யானை, தேர் மற்றும் காலாட்படைகளுடன் போர் புரியப் புறப்பட்டு வந்திருக்கும் போது, தன்னை எதிர்த்துப் போர்புரிய வானரங்களே வந்து எதிர்கொண்டு நிற்பதைக் கண்டு மீண்டும் மனம் வருந்தினான், தன்னுடன் போர் புரிய- தன்னை நிகர்த்த எவரும்- உரிய ஆயுதங்களுடன் வரவில்லையே என்று அவனுக்குச் சங்கடமாக இருந்தது. இருப்பினும் கற்கள், காட்டு மரங்கள் போன்றவற்றையும் தங்கள் கூரிய பற்களைக் கொண்டும் வானரர்கள் சளைக்காமல் போர் புரிவதில் காட்டிய வீரமும் ஆற்றலும் போற்றிப் பாராட்டுதற்குரியதே என்றும் இராவணன் கருதினான். தன் முன்னால் கடலலைபோல் பொங்கிய வண்ணம் நின்ற வானர சேனையைப்பார்த்து,

**"கல் கொண்டும் மரங்கள் கொண்டும்**
**கை கொண்டும் களித்த நும் வாய்ச்**
**சொல் கொண்டும் மயிரின் புன் தோல்**
**தோள் கொண்டும் தள்ளி வெள்ளிப்**
**பல் கொண்டும் மலைகின்றாரின்**
**பழிகொண்டு பயந்தது யானோர்**
**வில் கொண்டு நின்ற போது**
**விறல் கொண்டு மீள்திர் போலாம்.**

(யுத்த காண்டம்: 1096)

**பொருள்:**

"கற்களையும் மரங்களையும் கைகளையும் கொண்டும், வீரப் பேச்சுக்களைப் பேசுகின்ற உங்கள் வாயிலிருந்து எழுகின்ற வெறும்

### இராஜகுமாரன்

ஆஞ்சநேயரின் நிலையை சற்றுத் தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த இலக்குமணன், அண்ணன் இராமபிரானின் தாள் தொட்டு வணங்கினார். இராமபிரானும் இலக்குவனின் சிரசைத்தொட்டு வருடி, புன்முறுவல் பூத்தவராக போர்க்களம் செல்ல விடைகொடுத்தார்.

தன்னுடைய வில்லிலிருந்து கணையானது எத்தகைய வேகத்தில் சீறிப்பாய்ந்து செல்லுமோ அதைவிடப் பன்மடங்கு வேகத்துடன் இலக்குவன் வேங்கை போலப்பாய்ந்து சென்றான். தடுமாறிக்கொண்டு நின்ற வானரப் படைகளின் நடுவே நின்றவாறு தனது வில்நாணை ஒருமுறை தட்டி விட்டான். அந்த நாணொலி விண்ணுலகையும் அதிரவைத்தது. அரக்கர் படை கதிகலங்க, சிதறி நின்ற வானரப் படைகள் ஓடோடி வந்து தத்தமது அணிகளில் இணைந்து கொண்டன.

### இராவணன் திருப்தி

இப்போதாவது தன்னுடன் போர்புரிய ஒரு மனிதன் வருகிறானே... அதுவும் வில், அம்பு போன்ற போர்க்கருவிகளுடன் வருகின்றானே, என்று இராவணனும் சற்றுத் தென்படைந்தான். போர்க்கருவிகளற்ற வெறும் குரங்குப்படையுடன் போரிடுவதால் தன் ஆற்றல் பற்றி மிகக் கேவலமான கண்ணோட்டம் ஏற்பட்டு, அவமானம் மேலிடுமே! என்று இராவணன் அதுவரை அங்கலாய்த்திருந்தான். தற்போது தனக்கு நிகரான ஒரு வீரன் களத்தில் இறங்கியிருந்தமையினால், தனக்கு ஏற்படவிருந்த அபகீர்த்தி இனிமேல் தனக்கில்லை என்பதனையும் இலங்காதிபன் உணர்ந்து கொண்டான்.

இராவணனின் கணைகளால் வானரப் படைகள் பட்ட பாட்டைக் கண்டறிந்த இளைய பெருமாள் இலக்குவன், இராவணனுக்கு நல்லதொரு பாடம் புகட்டவேண்டியது தன் கடமை என "உணர்ந்தவனாக- தன்

### "வீழ்த்தாமல் விடமாட்டேன்!"

"கானகத்தில் சீதாப்பிராட்டியாரைப் பாதுகாத்து நின்ற என்னை உன் மாயவிளையாட்டால் தடுமாற வைத்து, பிராட்டியாரை வஞ்சகமாகக் கவர்ந்துபோன உன்னை என் பாணத்தால் வீழ்த்தாமல் விடமாட்டேன்!" என்று கூவிய வண்ணம் சக்தி வாய்ந்த கணைகளை தன் அம்பறாத் தூணியிலிருந்து எடுத்து இராவணன் மீது வீசினான். இவ்வாறு சீறி வந்த கணைகளைத் தன் மீது படாதவாறு, மாற்றுக் கணைகளைத் தொடுத்து இராவணன் தடுத்தான். இராவணன் வீசிய பாணங்களை அவ்வாறே இலக்குவனும் தடுத்தார். இதனால் இருவருக்குமிடையில் நின்று போரிட்ட இருதரப்புப் படையினரும் பெரும் தாக்குதலுக்குள்ளாயினர்.

அதிசக்தி வாய்ந்த அம்புகளை இலக்குவன் சரமாரியாக எடுத்து வீசுவதை எப்படியாவது தடுத்தாக வேண்டும் என்று எண்ணிய இராவணன், இலக்குவன் மீது கொடிய பாணங்களை வீசிக் கொல்ல நினைத்தான். அவ்வாறு எய்யப்பட்ட கணைகளை இலக்குவன் சுலபமாக- தன் எதிர்க் கணைகளால் செயலிழக்க வைத்தார். இதனால் இராவணன் தந்திரமாக ஒரு கணையினை இலக்குவனின் அம்பறாத் தூணியை நோக்கி வீசினான். இக்கணைபட்டதும் அம்பறாத்தூணியிலிருந்து அம்புகளை எடுக்க முடியாத நிலை இலக்குவனுக்கு ஏற்பட்டது.

இதே சமயத்தில் ஆஞ்சநேயர் அயர்வு நீங்கியவராக, ஒரே பாய்ச்சலில் இராவணன் தேர் முன் போய் நின்றார். அனுமனை அங்கு கண்டதும் முன்னணியில் நின்றிருந்த அரக்க வீரர்கள் சிதறி ஓடலாயினர். "இலங்காதிபதியே! நீ இப்பொழுது செய்யும் போரை உடன் நிறுத்து! நான் நிராயுதபாணியாக இதோ வந்திருக்கிறேன். என்னிடம் கற்களோ மரங்களோ கிடையாது. நீயோ மூன்று உலகங்களையும் வென்றவன்; தேவேந்திரனையும் அடிமை கொண்டவன்; எட்டுத்திக்குகளையும் தாங்கி நிற்கும் யானைகளையும் வென்றவன். உன் ஆயுதங்களை விடுத்து என்னுடன் நேரடியாக மோத வா!" என்று இராவணன் முன்பாக நின்று ஆஞ்சநேயர் கர்ஜித்தார்.

ஆஞ்சநேயர், தன் முன்னே வந்து நின்று வீரகர்ஜனை செய்ததைக்கண்ட இராவணனுக்கு பெருவியப்பாக இருந்தது. 'என்னுடன் நேரடியாக மற்போர் புரியும் ஆற்றல் இந்த வானரத்துக்கு இருக்க முடியுமா? என்னுடைய இருபது கரங்களில் ஒன்றின் குத்தைக்கூடத் தாங்கும் சக்தி இவனுக்கு இருக்க முடியுமா?' என்று பலத்த சிந்தனையுடன், "நல்லதொரு கருத்தினை இங்கு தெரிவித்தாய்! இதோ வந்துவிட்டேன்!" என்று கூறியவாறு இரதத்திலிருந்து தரையில் குதித்தான் இராவணன்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 93**
**சரியானவிடை:- நீலன் -**

| | |
|---|---|
| 1. வே.மஞ்சுளா, வெரல்லைவ் பத்தன, மடுல்சீமை. | 3. சந்தனம் வசந்தகுமார், பலாவலை எஸ்டேட், உட- நிரிஎல்லை, இரத்தினபுரி. |
| 2. செல்வி ஸுபியா ஹஸன், 184,மெயின் வீதி, மாத்தறை. | 4. செல்வி ஆ.பிறஸ்ரீடா, 2/2, முதலாம் குறுக்கு முனைத் தெரு, மட்டக்களப்பு. |

5. செல்வி எஸ் அர்சிதா, அல்-அஷ்ரப் மகாவித்தியாலயம், மாபோல, வத்தளை.

**போட்டி இல. 95** கேள்வி:- வில்லிலிருந்து எய்யப்படும் கூர்மையான ஆயுதத்துக்கு 3 பெயர்கள் உள்ளன. அவை

ஆகஸ்ட் 16 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி- இல.95, தினமுரசு வாரமலர், த.பெ.இல- 1772, கொழும்பு.**

# காட்டுக்குள் வீரப்பன்

காதிலை பூ கந்தசாமி

**செ: வணக்கமண்ணே! எனக்கொரு சந்தேகமண்ணே.**

வீ: (மீசையை தடவியபடியே) என்னப்பா சந்தேகம். சட்டுப்புட்டுன்னு கேட்க வேண்டியதுதானே?

**செ: நான் சட்டுன்னு கேட்டாக்க, நீங்க பட்டுன்னு சுட்டுப்புட்டாக்க என்னண்ணே செய்யிறது?**

வீ: நிம்மதியா செத்துடவேண்டியதுதான். நீ காட்டுக்க வரும்போதே நம்மாளுக உன்னைச் சுடத்தான் நினைத்தாங்க. நான்தான் தடுத்துப்புட்டேன்.

**செ: என்னண்ணே, நீங்கதானே வரச் சொன்னீங்க. வரச் சொல்லிப்புட்டு வாக்குத்தவறலாமாண்ணே?**

வீ: வாக்குத் தவற நான் என்ன அரசியல்வாதியாப்பா? சும்மா தமாஷ் பண்ணினேன்பா. ம்.. உன் சந்தேகத்தைக் கேள்?

**செ: உங்க மீசை செயற்கையா, இயற்கையா?**

வீ: நீயே தொட்டுப்பாரேன்.

**செ: (இழுத்துப்பார்க்கிறார்) சந்தேகம் போயே போயாச்சு.**

வீ: நடிகங்களும், நடிகைகளும்தான் பெரிசு பெரிசா எல்லாமே செயற்கையாக வைச்சுப்பீங்க. நாம நடிகங்க கிடையாதுப்பா. எல்லாமே ஒரிஜனல்தான். சண்டை போடறப்போகூட 'டுப்' வைச்சுக்க மாட்டோம், தெரியுமில்லை.

**செ: நீங்க ஏனண்ணே சரண்டராகுறீங்க. இனிமே வெட்டி விக்கிறதுக்கு சந்தன மரமே இல்லையாண்ணே?**

வீ: யோவ், சும்மா லொள்ளுப் பண்ணாதேய்யா.

**செ: இல்லையண்ணே எல்லோருக்கும் கடைசிவாழ்க்கையில, வீடு போ போ என்னும், காடு வா வா என்னும், உங்களை என்னடான்னா காடு போ போ என்னுது, நாடு வா வா என்னுது, பட்டுன்னு போய் சரண்டராகிட வேண்டியதுதானே!**

வீ: வாடா வீரப்பா என்னு அழகா கூப்பிட்டு, உங்க அரசியல்வாதிக அல்வா கொடுத்திட்டாங்கண்ணா என்ன பண்ணுறது?

**செ: ஏனண்ணே உங்களுக்கு உயிர்மேல ஆசையே கிடையாதுங்களா?**

வீ: அட... போப்பா, ஆறிலும் சாவு, நூறிலும் சாவு. நம்மாலே இன்னும் நூறுபேர் சாவக்கூடாது பாரு, அதுதான் சரண்டராகிறேன், நீங்க உங்க உயிரைக் காப்பத்திக்குங்கடா என்னு சொல்லுறேன். இல்லே, வீரப்பா நீ சரண்டராகினா கோட்டுக்கு வரணும், கேசுக்கு வரணும் என்டாங்கன்னா நமக்கு சரிப்பட்டு வராது. நம்ம ரூட்டிலேயே போய்க் கிட்டிருப்பேன். இங்கிருக்கிற சந்தன மரத்தையெல்லாம் வெட்டிக்கிட்டேயிருப்பேன், கண்ணில படுறவங்களை யெல்லாம் சுட்டுக்கிட்டே இருப்பேன். எப்படி நம்ம கரெக்டர்?

**செ: சினிமாவிலே வாரடயலாக் மாதிரி இருக்கண்ணே.**

வீ: சினிமாவிலே நீங்க சொல்லித்தாறதைத்தான் பேசுவீங்க. நாங்க செய்யிறதைத்தான் பேசுவோம்.

**செ: உங்க எதிர்கால இலட்சியம் என் ணண்ணே?**

வீ: அந்தப் பொம்பளை மாதிரி மாறணும்

**செ: யாரு, ஜெயலிதாமாதிரியா?**

வீ: சேச்சே.. நாங்க காட்டைத்தான் கொள்ளையடிப்போம், நாட்டை கொள்ளையடிக்க மாட்டோம். நான் சொல்லுறது பூலான்தேவிமாதிரியாகணும்.

**செ: அண்ணே, பண்டிட் குயின் என்னு படம் எடுத்தமாதிரி, பண்டிட் கிங் என்னு உங்களை வைச்சு ஒரு படம் எடுத்துரலாமண்ணே. நான் வேணுமின்னா ஹீரோவா நடிக்கிறேனண்ணே.**

வீ: (மீசை துடிக்கிறது) துடிக்கிறது மீசை, அடக்கு அடக்கு என்று நீ நாடிவந்த நட்பு தடுக்கிறது.

**செ: (நடுங்கியபடியே) அண்ணே! நீங்க பன்றியைச் சுட்டிருப்பீங்க, எருமையைச் சுட்டிருப்பீங்க, கன்றிலேயிருந்து வந்திருக்கிற என்னைச் சுட்டுடாதீங்கண்ணே. வேணுமின்னா கவுண்டமணி மாதிரி நாலு உதை உதையுங்க. நான் வாங்கிக்கிறேன்.**

வீ: இங்க பாரு, கவுண்டமணி உதைச்சா நீ அடுத்த சீனில எழுந்து நிற்பே, நான் உதைச்சேன் என்னுவைமி, அடுத்த சென்மத்திலேகூட எழுந்திருக்கமாட்டே. கவுண்டமணி உதைச்சா உனக்கு பணம் கிடைக்கும், இந்த வீரப்பன் உதைச்சா உன் பிணம் தான் கவர்மெண்டுக்கு கிடைக்கும். வசதி எப்படி?

**செ: (பொத்தென்று காலில் விழுகிறார்) அண்ணே! என்னை மன்னிச்சுக்குங்க. நானும் நீங்களும் என்னைக்குமே மூழ்காத ஷிப்பா இருக்கணுமண்ணே.**

வீ: நீ என்ன காட்டுக்கு வந்தாயா? கடலுக்கு வந்தாயா? எங்கேயிருக்கிறது ஷிப். வேண்டுமென்றால் கேள் ஆட்டுச் சூப் வைத்துத் தரச்சொல்கிறேன்.

**செ: அண்ணே, மூழ்காத ஷிப் என்னா ஃப்ரெண்ட் ஷிப்பண்ணே.**

வீ: ஹாஹாஹா... புதுசாக இருக்கிறதே?

**செ: நீங்க நம்ம சினிமாப் பாட்டுக்களையே கேட்கிறதில்லையாண்ணே.**

வீ: காட்டுக்குள்ளேயே போதுமான இரைச்சல் இருப்பதால், உங்க பாட்டுக்குள்ளிருந்து வரும் இரைச்சலை யாம் கேட்பதில்லை.

**செ: தப்பிச்சீங்க போங்க. வீடியோவில படம் பார்ப்பீங்களா?**

வீ: என் பெயரைவைச்சே எத்தனை படம் எடுத்திருக்கீங்க. பார்க்காமே இருப்பேனா?

**செ: ஆமாண்ணே, நீங்க காட்டிலே இருந்து நாட்டுக்கு வந்தா முதல்லே நஷ்டப்படுற துறையே சினிமாத் துறைதாண்ணே. கடைசியா என்ன படமண்ணே பார்த்தீங்க?**

வீ: வி.ஐ.பி., யாரய்யா அந்தக் குட்டி? பந்து விளையாடிக்கிட்டே வருகுது பாரு, எங்கிருந்தய்யா பிடிச்சுக்கிட்டு வாறீங்க? அந்தக் காலத்தில பாடுவாங்க பாடு, ஆடை கட்டி வந்த நிலவோ? என்னு. நிலவுக்குக்கூட ஆடை போட்டு கற்பனை பண்ணினாங்க. இப்பென்னடான்னா பாலில இருக்கிற ஆடையைக்கூட விடமாட்டேங்கிறீங்க.

**செ: அண்ணே அது பேரு சிம்ரான்.**

வீ: சிம்பன்சி என்னு வைச்சிருக்காலாமே, அந்தத் தாவு தாவுது.

**செ: தாவினாத்தாண்ணே சான்ஸைப் பிடிக்கலாம். காவினாத்தானண்ணே சுமையைத் தாங்கலாம். மேவினாத் தாணண்ணே உயரச் செல்லலாம். எப்படியண்ணே நம்ம பொயின்டு?**

வீ: இப்பதாம்பா புரியுது, கவுண்டமணி கிடைத்த சாக்கோட உன்னை ஏன் உரமா உதைக்கிறாறென்னு.

**செ: சரியண்ணே, நாங்க ஜென்ரலா பேசுவோமா? உங்க கனவில யாரெல்லாம் வருவாங்க?**

வீ: பொலிஸ்காரங்கதானப்பா வாறாங்க.

**செ: கனவிலையாவது நீங்க பிடிபட்டிருக்கீங்களா?**

வீ: கனவில கூட அந்தக் கதை நடக்காதுப்பா. நேத்து கனவில கலைஞரு வந்தாரு. என்ன தலைவா, உலகத்தில தமிழன் அடிபட்டுக்கிட்டிருக்கான். நீங்க அதைப்பற்றிப் பேசாம மாட்டுத் தீவனத்தில ஊழல் பண்ணின லல்லு சார்பா ஐக்கிய முன்னணிக்குள்ளே அடி பட்டுக்கிட்டிருக்கீங்களே, அந்த லல்லு என்னடான்னா தன் பொண்டாட்டியை சீஃப் மினிஸ்டராக்கி லொள்ளு பண்ணுறாரு என்னு கேட்டேன்பாரு; கலைஞர் அரண்டுட்டாரு.

**செ: ஆமாண்ணே, மாட்டுத் தீவனத்தில ஊழல் பண்ணினாரு, இப்ப அரசியலையே மாட்டுத்தீவன லெவலுக்கு கொண்டுவந்திட்டாரு. மக்கள் ஆட்சியென்னா தங்கள் வீடு மனைவி மக்கள் என்னு அர்த்தம் பண்ணிக்கிட்டாங்க போல.**

வீ: பார்த்தியா செந்திலு, முன்னாடியெல்லாம் பினாமி பெயரிலை சொத்துத்தான் வாங்குவாங்க, இப்ப பினாமி பெயரிலை ஆட்சியே நடத்துறாங்க. எந்தப் பைலில கையெழுத்துப் போட்டீங்க மேடம்? என்னு கேட்டாக்க, அது என் புருசனுக்குத்தான் தெரியுமென்கிறாங்க. அவங்க என்ன



ஆட்சிக் கட்டில்ல இருக்கிறாங்களா வீட்டுக் கட்டில்ல இருக்கிறாங்களா? பேசாம அந்த லல்லு பிரசாத் பெயரை லொள்ளு பிரசாத் என்னு மாற்றிடுங்கப்பா.

**செ: அண்ணே நீங்க பெரியாளு. அரசியல் விவகாரங்களை அத்துப்படியா தெரிஞ்சு வைச்சிருக்கீங்க?**

வீ: அரசியலைப் பத்தி மட்டுமில்ல, அரசியல்வாதிகளைப் பற்றியும் விலாவாரியா தெரிஞ்சு வைச்சுக்கிட்டிருக்கேன். நாங்க வெட்டிக் கொடுத்த சந்தன மரத்தை வைச்சு பெட்டி பெட்டியா சம்பாதிச்சது யாரெங்கிறே? பட்டியலை எடுத்து விட்டா நாறிடும். நாம சரணடைஞ்சா தங்க பிழைப்பு போயிடுமோ என்னு பயந்துதான் நாம சரண்டர் பண்ணுறதை சகுனி வேலை பண்ணி தடுத்துக் கிட்டிருங்காங்க.

**செ: அண்ணே நீங்க நாட்டுக்கு வந்தீங்க, அரசியலில் புகுந்து தூள்பண்ணிடலாம்.**

வீ: என்னப்பா பெரிய அரசியல்? பாடுறேன் கேளு;

**'கையிலே பணமிருந்தால்**
**கழுதைகூட அரசனடி**
**கைதட்ட ஆளிருந்தால்**
**காக்கை கூட அழகனடி**
**பொய்யிலே நீந்தி வந்தால்**
**புளுகனெல்லாம் தலைவனடி!'**

**செ: எல்லாமே ரைட்டு. கைதட்ட ஆளிருந்தால் காக்கைகூட அழகனடி என்னீங்களே அதுதான் தப்பு.**

வீ: தப்பென்றா சொல்கிறாய்.

**செ: ஆமாண்ணே. தப்பேதான்.**

வீ: இதைப்பார்த்துவிட்டுச் சொல். தப்புத்தானா? (துப்பாக்கியைக் காட்டுகிறார்)

**செ: ஸ்ரென்கன் காட்டினாலும் தப்புத்தப்புத்தான்!**

வீ: தொலைந்துபோ பன்றித் தலையா. (மிரட்டுவதற்காக வீரப்பன் வானை நோக்கிச் சுடுகிறான். தன்னைத்தான் சுடுகிறான் என்று நினைத்து மார்பை பிடித்தபடி மயங்கி விழுகிறார் செந்தில்)




படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)
www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# என்ன இது?



பார்த்ததும் கடல் அட்டைகள் போலத் ➔ தெரிகின்றன.கடலடியில் வளரும் தாவரம்தான் இது. மேற்கிந்தியத் தீவுக் கடலின் அடியில்தான் இத் தாவரங்கள் வளருகின்றன. 'அனிமியோன்' என்பது இத் தாவரத்தின் பெயர்.

முல்லைமலர் மேலே மொய்க்கும் வண்டுபோலே இத் தாவத்தின் மேலும் ஒரு பூச்சி மொய்த்திருக்கிறது பாருங்கள். இப் பூச்சி மொய்ப்பதால் இத் தாவரத்துக்கு பலன் உண்டு. இப் பூச்சிகள் வெளியேற்றும் எச்சத்தில் கிடைக்கும் நைதரசன் தாவரத்துக்கு உதவுகிறது. இத் தாவரம் வெளியேற்றும் பசைத்தன்மை போன்ற பொருட்களை பூச்சிகள் உணவாகக் கொள்ளுகின்றன. பரஸ்பர பரிமாற்றம் என்பது இதுதான். ஒன்றைக் கொடுத்து இன்னொன்றைப் பெறுதல்.

தருவது வியோடெ



ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


# சீருடை


ஒவ்வொரு நாட்டுப் படையினருக்கும் ஒவ்வொரு விதமான சீருடைகள் உள்ளன. இயக்கங்களின் ஆயுதப் படைகளும் சீருடைகள் அணிவதுண்டு. ஆயினும் தமக்கான தனியான வடிவம் கொண்ட சீருடைகளை புலிகள் இயக்கத்தினரே பயன்படுத்தி வருகின்றனர்.

முதலில் அதிரடிப் படையினர் போன்ற சீருடைகளையே புலிகள் இயக்கத்தினரும் அணிந்தனர். பின்னர் பிரபாகரனின் யோசனைப்படி சீருடை வடிவம் மாற்றப்பட்டது. புலிகள் போல வரிகள் கொண்ட சீருடைகள் தயாராயின.

தற்போதுள்ள நிலையிலும் சீருடைக்கான புதிய துணிகளை புலிகள் தாராளமாகப் பெற்றுக் கொள்வது ஆச்சரியம்தான்.

புத்தம் புதிய சீருடைகளுடன் இங்கு காணப்படுபவர்கள் புலிகள் இயக்க சிறப்புப் படையணியைச் சேர்ந்தவர்கள்.

கொரில்லாக்கள் சீருடை அணிவதில்லை. நடமாட்டத்துக்கு தடையாக இருக்கும். இனம் காணப்படவும் வாய்ப்பாகும் என்பன போன்ற காரணங்களால் சீருடைகளை தவிர்ப்பர். படையினருக்கும் சரி, இயக்கத்தினருக்கும்சரி சீருடைகள் அவர்களிடம் உளவியல்ரீதியான உற்சாகத்தை அளிப்பதுண்டு.



ஆனால் படையினருக்கு சீருடைகளை தயாரிப்பதில் அரசுக்கு சகல வசதிகளும் இருக்கிறது. புலிகளுக்கு அத்தகைய வசதிகள் கிடையாது. அப்படியிருந்தும் அவர்களால் தமது படையணிகளுக்குரிய சீருடைகளை தயாரிக்க முடிவது, புலிகளின் தளப் பிரதேச நிலவரம் சகஜமாக இருப்பதையும், விநியோக மார்க்கங்கள் தடையின்றி இருப்பதையும் காட்டுகின்றன. மாறிய சூழ்நிலையை தமக்கேற்ப மாற்றிக்கொண்டுள்ளனர்.



# சீர்வரிசை

← எதனையும் கலை நயத்துடனும், கற்பனை வளத்தோடும் செய்தால் கிடைக்கும் பயனே தனிதான். சுத்தமாக துடைத்து வரிசையாக அடுக்கிவைத்தது போல, ஒரே வடிவத்தில் ஒழுங்காக கட்டிமுடித்திருக்கிறார்கள் பாருங்கள். கண்டதுமே உள்ளே குடியிருக்க ஆசை பொத்துக் கொண்டு வருகிறதல்லவா! இந்தியாவில் பெங்களூரில் உள்ள அழகான குடியிருப்புத்தான் இது. நடுத்தரவகுப்பு மக்களுக்காக கட்டித்தரப்பட்டது. குறைந்த பட்ஜெட்டில் கண் நிறைந்த குடியிருப்பு. ■

# பறவைகள் பலவிதம்

காதல் சமாச்சாரத்தில் நாம் மட்டும் தான் கில்லாடிகள் என்று நினைக்கும் மனிதர்களுக்கு நெத்தியடியான தகவல் இது. பறவைகள் பற்றிய ஆராய்ச்சியில் கிடைத்துள்ள கலக்கலான தகவல்களைப் பாருங்கள்.

ஓர் ஆண் பறவை தனக்கேற்ற ஒரு பெண் துணையினைத் தேர்ந்தெடுப்பதற்கு பெரும்பாடுபடுகிறது. 'குடும்'பமாக இணையும் பக்குவம் வரும்வரை பெரும்பாலும் தனிமையாகவே சில பறவைகள் (ஆணும் சரி பெண்ணும் சரி) வாழ்ந்து வரும்.

இப்பக்குவம் வந்ததும் தன் இனப்பறவைக் கூட்டத்தில் சேர்ந்து சரியான சோடியைத் தேடிக்கொள்ளும். அவ்வாறு தேர்ந்தெடுத்த பெண்ணின் கருத்தை அறிய முதலில் தன் மோகப் பார்வையை அதன் மீது செலுத்தும்.

அதற்கு ஒப்புதல் கிடைத்ததும் ஆண் பறவை-தன் எதிர்கால இணையின் முன் ஆடிப்பாடி மகிழ்ந்து தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும். அத்துடன் மட்டும் நில்லாது 'காதல் பரிசு'களையும் தேடிக் கொண்டு வந்து கொடுக்கும்.

இரு பறவைகளும் கருத்தொருமித்ததும் உடனடியாக சோடி சேர்ந்துவிடமாட்டா; சில சமயங்களில் மாதக் கணக்காகவே இவற்றின் காதல் ஒன்றிணையாத நிலையிலேயே தொடரும். ஒன்று சேர்ந்து உடல் ரீதியாக இணைவதற்கு முன்னர் ஒன்று சேர்ந்து பறந்து அன்பாகப் பழகும். நீடித்த கால இடைவெளிக்குப் பின்னரே பெண் பறவை ஆண் பறவையை கிட்டவந்து ஒட்டி உறவாட அனுமதிக்கும்.

மனித வர்க்கத்திடம் காணப்படும் அவசரபுத்தி பெரும்பாலும் இவ்வினப்பறவைகளிடம் கிடையாது.

காதல் பரிசாக காதலிக்கு காதலன் மீன்களையே கொண்டுவந்து கொடுப்பது வழக்கம்.

படத்தில் காணப்படும் 'சில்டோனியாஸ் நிகெர்' என்னும் கிளி இனத்தைச் சேர்ந்த இப்பறவைகளில் ஆண் எது பெண் எது என்று கண்டுபிடிக்கவே முடியாது. இதே இனப்பறவைகளால் கூட இது முடிவதில்லையாம். சில ஆண் பறவைகள் இலவசமாக மீன் உணவைப் பெறுவதற்காகவே பெண்கள் போல் பாவனை செய்து மோசம் பண்ணுவதும் உண்டாம். என்ன, பறவைகளிடம் நாம்தான் பாடம் கற்கவேண்டும் என்கிறீர்களா. மெத்தச் சரி. ■




# 3வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி K. மரியநிருபா 21.07.1997

யாழ் நல்லூரைப் பிறப்பிடமாகவும் லெபனானில் வசிப்பவர்களுமான A.S.கிருபா, பிரபா தம்பதியினரின் செல்வப்புதல்வி நிருபா தனது மூன்றாவது பிறந்த நாளை 21.07.97 அன்று லெபனானில் செனல் பீலில் தனது இல்லத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை வாழ்துவோர் அன்பு அப்பா, அம்மா, யாழ் அப்பப்பா, அப்பம்மா மலர் அத்தை குடும்பத்தினர், செல்வம் பெரியப்பா குடும்பத்தினர், வவி அத்தை குடும்பத்தினர், ஆனந்தி சித்தா குடும்பத்தினர், கருணா சித்தா, இந்தியாவில் வசிக்கும் சந்திரன் பெரியப்பா குடும்பத்தினர், உதயன் சித்தா, இந்தியாவில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, டயஸ் தாத்தா, சகா மாமா குடும்பத்தினர், யூட்சித்தி, மணியம்மா குடும்பத்தினர், இலண்டனில் வசிக்கும் நடேஸ் சித்தா, சீலன், மாமாமார்கள், நண்பர்கள், உற்றார் உறவினர்கள் நல்லூர்க் கந்தன் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

A.S.Kirupa, Lebanon.



இப்பத்திரிகை கொழும்பு [illegible] பிரைஸ், [illegible] இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பார [illegible] உள்ள [illegible] அச்சகத்தில் ஆகஸ்ட் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்